விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆவணி 06 புதன்கிழமை (22.08.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 246

## பறிபோனது தமிழ் மக்களின் பூர்வீக நிலம்

# முல்லையில் சிங்களவர்களுக்கு அரச காணி வழங்கி வைப்பு

(முல்லைத்தீவு) முல்லைத்தீவு மாவட்டம் கரை துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் தமிழ் மக்களின் பூர்வீக கிராமமான கருநாட்டுக்கேணியில் உள்ள அரச காணிகளின் ஒரு பகுதியை சிங்கள மீனவர்களுக்கு வழங்கியுள்ளது மைத்திரி - ரணில் கூட்டு அரசு. இவ் வாறு குடியேற்றப்படும் சிங்கள மீனவர்களுக்கு மகா வலி அதிகார சபையால் காணி உத்தரவுப் பத்திரங்களும் வழங்கப்பட்டன. (24-ம் பக்கம் பார்க்க...)




## முன்னாள் போராளிகளுக்கு அரச வேலைவாய்ப்பு மகிழ்ச்சி அளிக்கிறது

ஆளுநர் றெஜினோல்ட் கூரே

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வளிக்கப்பட்ட விடு தலைப் புலிகள் அமைப்பின் முன் னாள் போராளிகளான பட்டதாரி கள் 30 பேருக்கு அரச நியமனம் வழங்கப்பட்டமை மிகுந்த மகிழ்சி அளிப்பதாக வட மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரேதெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு பெற்ற போராளிக ளுக்கான அரச நியமனங்கள் அலரி மாளிகையில் 23

## றெஜினா படுகொலை சாட்சியை முற்படுத்த நீதவான் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ். சுழிபுரம் காட்டுப்புலம் பகு தியில் மாணவி றெஜினா படுகொலை வழக்கில் மேலும் இரண்டு சாட்சிய ங்களை மன்றில் முற்படுத்துமாறு மல்லாகம் நீதவான் நேற்று உத்தர விட்டுள்ளார்.

குறித்த வழக்கு மல்லாகம் நீத வான் நீதிமன்றத்தில் நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. 23

## வலி வடக்கில் மேலும் ஒரு தொகுதி காணி விடுவிப்பு



(யாழ்ப்பாணம்)

இராணுவத்தின் கட்டுப்பாட் டில் இருந்த வலிகாமம் வடக்கு காங்கேசன்துறை மத்தி ஜே/ 234 கிராமசேவையாளர் பிரி வில் உள்ள 4.2 ஏக்கர் காணி 28 வருடங்களின் பின்னர் நேற்று விடுவிக்கப்பட்டது.

காணி விடுவிக்கும் நிகழ்வு நேற்று மாலை காங் 24

## மகிந்தவின் சகோதரர் நேற்றுக் காலமானார்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதரரான சந்திர ராஜபக்ஷ உயிரிழந்துள்ளார்.

சுகவீனமுற்றிருந்த இவர் கட ந்த 6 மாதங்களாக சிகி 24

மயிலிட்டி துறைமுகத்துக்கு அடிக்கல் நாட்ட

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்றையதினம் யாழ் வருகை

(யாழ்ப்பாணம்)

மயிலிட்டி துறைமுக புனரமை ப்பு பணிகளுக்கு அடிக்கல் நாட்டுவ தற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று யாழ் குடாநாட்டு க்கு வருகைதரவுள்ளார்.

இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் இருந்த 24

## ஆட்டோ சாரதிகளுக்கான வயதுக் கட்டுப்பாடு யோசனை

ஜனாதிபதியால் நிராகரிப்பு

(கொழும்பு)

பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளை செலுத்துவதற்கான சாரதிகளின் வயது 35க்கு மேற்பட் டதாக இருக்கவேண்டும் என்ற கட் டுப்பாட்டை விதிக்கும் அமைச்ச ரவை யோசனையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று நிராகரித்தார். 24

## உயர்தர பரீட்சை எழுதிய மாணவியை வானில் கடத்தி பாலியல் வல்லுறவு

முல்லை உடையார்கட்டு பகுதியில் சம்பவம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உயர்தர பரீட்சை எழுதிய 19 வயது டைய மாணவியை 22 வயதுடைய இளைஞர்கள் நேற்று முன்தினம் பரீட்சை எழுதிவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளை மாண வியை வான் ஒன்றில் கடத்தி சென்று பளைப்பகுதியில் வைத்து விருப்பத்திற்கு மாறாக பாலியல் துஷ்பிரயோகம் செய்து விட்டு நேற்று உடையார்கட்டுப்பகுதியில் கொண்டு வந்து இறக்கிவிட்டுள்ளார்கள்.

இதுதொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தில் கலைப்பிரிவில் உயர்தர பரீட்சை க்கு தோற்றிய 19 வயதுடைய மாணவி திங்கட்கிழமை பரீட்சை எழுதிவிட்டு வீடு திரும்பிக் கொண்டி ருந்த வேளை இளைஞர்கள் சிலர் சேர்ந்து வாகனம் ஒன்றில் குறித்த யுவதியை கடத்தி

பளைப் பகுதிக்கு 24

## சிங்களத்தில் முதலில் எழுத வேண்டும் என்று சட்டமில்லை

அமைச்சர் மனோ



(கொழும்பு)

பெயர்ப் பலகைகளில் முதலில் சிங்களத்தில் எழுத வேண் 23

## அலுவலகத்தை கூட்டினால் மாத்திரமே உறுதிப்படுத்துவேன்

கிராம அலுவலரால் சர்ச்சை

(கிளிநொச்சி)

அலுவலக முற்றத்தை கூட்டி னால் மாத்திரமே வதிவிடத்தை உறுதிப்படுத்த முடியும் என்ற கிராம அலுவலரின் அறிவித்தலு க்கு அமைய குழந்தையுடன் சென்ற பெண் முற்றத்தை கூட்டிய பின் தனது வதிவிடத்தை உறுதிப்படுத் திச் சென்ற சம்பவம் ஒன்று கிளி நொச்சியில் நேற்றைய தினம் இடம் பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சியில் வசித்து வரும் பெண் ஒருவர் தனது வதிவிட த்தை உறுதிப்படுத்து 23

## இலங்கை - ஜப்பான் இடையே பாதுகாப்பு தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்து



(கொழும்பு)

இலங்கை மற்றும் ஜப்பான் இடையில் பாதுகாப்பு தொடர்பு களை வலுப்படுத்தி, பாதுகாப்பு தொடர்பான புரிந்துணர்வு உடன் படிக்கை கைச்சாத்திடப்படவுள் ளது.

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு 24

## இன்றைய அமைதிக்கு படையினர் உயிர் தியாகம் செய்தனர்

மகேஸ் சேனநாயக்க

(கொழும்பு)

நாட்டின் தேசிய படையினர் தமது உயிரை தியாகம் செய்யவி ல்லை என்றால், 30 ஆண்டுகளாக நடைபெற்ற போரை முடிவுக்கு கொண்டு வந்திருக்க முடியாது என இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தெரிவித்துள்ளார். 23

# சவால்களை முறியடிக்கக்கூடிய வகையில் கல்வியை புகட்டுவது அவசியமானது

## கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன்

(யாழ்ப்பாணம்)

எமது இளம் சமுதாயத்தினர் எதிர்நோக்கும் சவால்கள் பிரச்சினைகளை முறியடிக்க கூடிய வகையில் கல்வி அமைச்சின் ஊடாக விழுமிய கல்வியை புகட்டுவது அவசியம் என தெரிவித்த வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், அதற்கான செயற்திட்டங்களை கல்வி அமைச்சின் ஊடாக செயற்படுத்தவுள்ளோம் என தெரிவித்துள்ளார்.

நல்லைக்குமரன் மலர்-2018 (26-வது) வெளியீட்டு விழா நேற்று செவ்வாய்க் கிழமை யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்.

எமது சமூகத்தை காப்பதற்கு அனைவரும் இணைந்து எமது பணிகளை முன்னெடுக்கவேண்டிய காலம் தற்போது வந்துள்ளது. முக்கியமாக எமது பிரதேசம் எமது மக்கள் என்ற பற்றுடன் செயற்பட வேண்டிய காலம் வந்துள்ளது. எல்லோரும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும். எமது இளம் தலைமுறையினருக்கு எமது பண்பாட்டையும் கலாசாரத்தையும் ஊட்டி வளர்க்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதென்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மாற்றம் அடைந்துவரும் சமூகத்தில் எமது பிள்ளைகளின் வாழ்க்கை முறை மாற்றமடைந்து வருகின்றன. அவற்றை ஒழுங்கு படுத்தலின் மூலமாக அவர்களை சரியான பாதையில் இட்டுச்செல்ல வேண்டிய தார்மீக கடப்பாடு எமக்கு உள்ளது.

குறிப்பாக கல்விச் சமூகத்தின் சார்பாக எமது பிள்ளைகளுக்கு விழுமிய கல்வியை ஊட்டி வளர்க்க வேண்டும். அவர்களுக்கு சரியான பாதையை காட்ட வேண்டிய தேவை உள்ளது.

இதை நாம் ஒற்றுமையாக இணைந்து செய்வோம். விழுமியம் தொடர்பாக வழி காட்டல் செய்யக்கூடிய பலர் எம்மத்தியில் உள்ளார்கள். அவர்களை இணைத்து கல்வி அமைச்சின் ஊடாக எதிர்காலத்தில் வேலைத் திட்டங்களை முன்னெடுக்க இருக்கிறோம். இதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் தேவை.

எங்கள் மக்கள், எமது பிரதேசம் எமது கலாசாரம் என உயரிய நோக்குடன் அனைவரும் ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டும். அனைவரின் கருத்துக்களும் வரவேற்கப்படுகிறது. ஆனால் அதற்கு செயல் வடிவம் கொடுப்பது முக்கியம்

இளம் சமூகத்தை வழிப்படுத்தக்கூடிய பல பணிகளை முன்னெடுக்க வேண்டும். விழுமியக் கல்வி தொடர்பாக எல்லோரும் இணைந்து இன மத மொழி பேதம் மறந்து எதிர்காலம் பற்றி சிந்தித்து செயற்பட வேண்டும்.

எமது மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் பிரச்சினைகளை முறியடிக்க கூடிய வகையில் விழுமிய கல்வியை முன்னெடுத்து செல்ல வேண்டும். அதற்கு நாம் இணைந்து செயற்பட வேண்டிய காலம் நெருங்கியுள்ளது. அதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க ஒழுங்குகளை மேற்கொள்ளவுள்ளோம் என மேலும் தெரிவித்தார். (ம-9)

# 19ஆவது அரசியலமைப்பின் பிரகாரம் தேர்தலில் மகிந்தவால் போட்டியிட முடியாது

## அமைச்சர் துமிந்த திசாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

19ஆவது அரசியலமைப்பின் பிரகாரம் மகிந்த ராஜபக்ஷவிற்கு மாத்திரமல்ல சந்திரிகா பண்டார நாயக்கவிற்கு கூட 2020ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியாது என தெரிவித்த அமைச்சர் துமிந்த திசாநாயக்க கூட்டு எதிர்க்கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவுகளை சீர் செய்வதற்கு பல்வேறு நாடகங்கள் அரங்கேற்றப்படுகின்றன எனவும் குறிப்பிட்டார்.

மகாவலி அபிவிருத்தி நிலையத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் பொது எதிரணிக்குள் தற்போது ஏற்பட்டுள்ள பிளவினை சீர் செய்யவே மகிந்த ராஜபக்ஷ அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்திற்கு முரணாக சட்டவியாக்கியானம் கோருகின்றார். எவ்வாறு இருப்பினும் சர்வாதிகார ஆட்சியை வீழ்த்த உருவாக்கிய 19ஆவது திருத்தத்திற்கு மகிந்த கட்டுப்பட வேண்டும். இவர் மாத்திரம் விதிவிலக்கல்ல.

2020ஆம் ஆண்டு இடம் பெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் கூட்டு எதிரணியினர் தற்போதே தேர்தல் பிரசாரங்களை ஆரம்பித்து விட்டனர். கோத்தபாய ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ போன்றோரை ஜனாதிபதி வேட்பாளர்களாக களமிறக்குவதாக கூட்டு எதிரணிக்குள் பாரிய முரண்பாடுகள் தோற்றம் பெற்றது.

இராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்றவரிடம் நாட்டை பொறுப்பாக்க முடியாது என்று பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம கோத்தபாயவிற்கு எதிர்ப்பு தெரிவிக்க மறுபுறம் சமல் ராஜபக்ஷவிற்கு வாசுதேவநாணயகார ஆதரவு வழங்குவதாக காணப்படுகின்றதை தொடர்ந்து கட்சிக்குள் காணப்படுகின்ற கருத்து வேறுபாடுகள் வெளிப்பட்டு விட்டது. பொது எதிரணியின் பிரதான நோக்கம் அரசாங்கத்தை வீழ்த்தி மீண்டும் குடும்ப ஆட்சியினை உருவாக்குவது ஆகும்.

மகிந்தவின் குடும்ப உறுப்பினர்களை தவிர கட்சியின் பிறிதொரு உறுப்பினர் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட தகுதியற்றவர்களா? அல்லது மகிந்த பிறிதொருவரை களமிறக்க தயாரில்லையா? குடும்ப ஆட்சியினை தோற்றுவித்துதான் நாட்டை முன்னேற்ற வேண்டும் என்ற நிலைப்பாட்டில் பொது எதிரணியினர் காணப்படுவது அவர்களது இயலாமையினை வெளிப்படுத்துகின்றது.

2015ஆம் ஆண்டு தொடக்கம் பதவி மோகத்தின் காரணமாக மகிந்த ஆட்சியை பெற பாரிய முயற்சிகளை மேற்கொண்டார். இரண்டு முறை ஜனாதிபதியாக பதவி வகித்த பின்னரும் 2015ஆம் ஆண்டும் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்டார்.

பின்னர் தேர்தலில் தோல்வியடைந்ததை தொடர்ந்து பாராளுமன்ற தேர்தலிலும் படுதோல்வியடைந்து பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்து வருகின்றார். தற்போது 19ஆவது அரசியலமைப்பினை மீறி தனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்து விடாதா என்ற நப்பாசையில் சட்ட வியாக்கியானம் கோருகின்றார்.

19ஆவது அரசியலமைப்பு மகிந்த ராஜபக்ஷவிற்கு மாத்திரமல்ல முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க, தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் ஏற்புடையதாகவே காணப்படுகின்றது. மகிந்த மாத்திரம் நாட்டுக்கு விதிவிலக்கல்ல மகிந்தவும் கடந்த காலங்களில் மீண்டும் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்கவில்லை. அவர் குடும்ப ஆட்சியை உருவாக்குவதிலேயே தீவிரமாக காணப்பட்டார்.

தன் கட்சியில் வேட்பாளர் தொடர்பில் உறுப்பினர்களுக்கிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு கட்சியை பலவீனப்படுத்துமோ என்ற அச்சத்திலே அவர் ஜனாதிபதியாக போட்டியிடும் நாடகத்தை அரங்கேற்றியுள்ளார். எவ்வாறு இருப்பினும் மகிந்தவால் இனி ஒரு போதும் ஜனாதிபதியாக போட்டியிட முடியாது என்றார். (ம)

# மருத்துவர் வீடு மீது தாக்குதல் நடத்தினார் என்று கைதாகியவரை

## பிணையில் விடுவித்தது யாழ்.நீதிமன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கொக்குவில் சம்பியன் லேனில் மருத்துவரின் வீடு மீது தாக்குதல் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஒருவர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றால் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டார்.

சந்கேநபருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட ஆதாரங்கள் தொடர்பில் விசனமடைந்த நீதிமன்று அவரைப் பிணையில் விடுவிக்க உத்தரவிட்டது.

கொக்குவில் சம்பியன் லேனில் உள்ள மருத்துவர் ஒருவரின் வீட்டுக்குள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு புகுந்த கும்பல் ஒன்று அங்குள்ளவர்களை அச்சுறுத்தும் வகையில் அட்டூழியத்தில் ஈடுபட்டுத் தப்பித்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

மருத்துவரின் வீடு அடையாளம் தவறி தாக்கப்பட்டுள்ளமை விசாரணைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறியிருந்தனர். தாக்குதலுடன் தொடர்புடைய இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் விரைவில் கைது செய்யப்படுவர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டிருந்தனர். (ம)

# உயர்தரப் பரீட்சை விடைத்தாள்கள் மதிப்பீட்டு பணிகள் நாளை ஆரம்பம்

(கொழும்பு)

க.பொ.த. உயர்தரப் பரீட்சை விடைத்தாள்கள் மதிப்பீட்டுப் பணிகள் நாளை வியாழக் கிழமை ஆரம்பமாகி வரும் செப்ரெம்பர் 5ஆம் வரை இடம்பெறுகிறது.

இந்தப் பணிகளுக்காக வடக்கு மாகாணத்தில் 4 பாடசாலைகள் உட்பட நாட்டில் 37 பாடசாலைகள் மூன்றாம் தவணைக்காக வரும் செப்ரெம்பர் 6ஆம் திகதி திறக்கப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் ஆகியனவே வடக்கு மாகாணத்தில் வரும் செப்ரெம்பர் 5ஆம் திகதிவரை மூடப்படுகின்றன. (ம)

# மகிந்தவுக்கு கூட்டு எதிர்க்கட்சியில் எதிர்ப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் கூட்டு எதிர்க்கட்சியிலேயே எதிர்ப்பு காணப்படுவதாக ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் தெரிவித்துள்ளார்.

சிறிகொத்த கட்சித் தலைமையகத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.(ம)

# நிதி மோசடிகளை விசாரிக்கும் சிறப்பு மேல் நீதிமன்றம் ஆரம்பித்து வைப்பு

(கொழும்பு)

பெரியளவிலான நிதி மோசடிகள் தொடர்பான வழக்குகளை விசாரிக்க அமைக்கப்பட்ட மூன்று நீதிபதிகள் அடங்கிய சிறப்பு மேல் நீதிமன்று கொழும்பு புதுக்கடை நீதிமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் திருமதி தலதா அத்துகோரள இந்த நீதிமன்றின் பணிகளை ஆரம்பித்துவைத்தார்.

கொழும்பு மேல் நீதிமன்றில் பணிபுரியும் மேல் நீதிமன்ற நீதிபதிகள் சம்பத் விஜயரட்ன, சம்பத் அபேகோன் சம்பா, ஜானகி ர்ராஜரட்ன ஆகியோர் சிறப்பு மேல் நீதிமன்றின் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

சிறப்பு மேல் நீதிமன்றத்தின் முதலாவது வழக்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பணிக்குழாம் தலைமை அதிகாரி காமினி செனரத் உள்ளிட்ட நான்கு பேருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அடங்கிய வழக்கு விசாரிக்கப்படவுள்ளது. (ம)

**மணமகன் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த 1985இல் பிறந்த விசாகம் நட்சத்திரம் செவ்வாய் குற்றமற்ற பட்டதாரி ஆசிரியைக்கு மணமகன் தேவை.

(5440)

**தொடர்பு:0772367508**

**வாடகைக்கு**

நாவலர் வீதி, நல்லூரில் சிறிய குடும்பத்திற்கு உகந்த ஓர் அறை, இணைந்த குளியலறை உடன் கூடிய வீட்டின் பகுதி வாடகைக்கு உண்டு.

T.P:-0762160099

(5437)

# நல்லைக்குமரன் மலர் வெளியீடும் யாழ் விருது வழங்கலும்












(படங்கள்:-பொ.சோபிகா)

நல்லைக்குமரன்மலர்(26)-2018 வெளியீட்டு விழாவும் யாழ் விருது வழங்கலும் நேற்றுக்காலை நாவலர் கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது.

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத்தின் சைவசமய விவகாரக் குழுவின் ஏற்பாட்டில் யாழ். மாநகரசபை ஆணையாளரும் சைவ சமய விவகாரக் குழுவின் தலைவருமான இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகர சபை முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் மற்றும் சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.


இந் நிகழ்வில் வரவேற்பு நடனத்தை தொடர்ந்து, வரவேற்புரையை யாழ்.மாநகரசபை செயலாளர் அ.சீரா்ளனும் தலைமையுரையை மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலனும் நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர், வீணாகான குரு பீடா திபதி சிவஸ்ரீ சபா. வாசுதேவக் குருக்கள், யாழ்.சின்மயாமிஷன் சுவாமி சிதாகாசானந்தா, செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர் வழங்கினர்.

சிறப்பு விருந்தினர் மற்றும் பிரதம விருந்தினர் உரையைத் தொடர்ந்து, யாழ். மாநகர சபை முதல்வரால் சந்நிதியான் ஆச்சிரம இயக்குநர் கலாநிதி செந்தில்வேல் மோகனதாஸ் சுவாமிகளுக்கு யாழ் விருது மற்றும் பொற்கிழி வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

நல்லைக்குமரன் மலர் வெளியீட்டுரையையும் மலர் வெளியீட்டையும் பதிப்பாசிரியர் ந.விஜயசுந்தரம் நிகழ்த்தினார். மலரின் முதற்பிரதியை பதிப்பாசிரியரிடமிருந்து தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தினர் பெற்றுக் கொண்டனர். அதனைத் தொடர்ந்து நூலின் ஆய்வுரையை பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஓய்வுநிலை அதிபர் கவிஞர் சோ.பத்மநாதன் நிகழ்த்தினார். தொடர்ந்து சைவசமய விவகாரக் குழுவினால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. நன்றியுரையை சைவசமய விவகாரக் குழுவின் செயலாளர் பூ.ஆறுமுகதாஸ் ஆற்றினார். (இ-9)

## இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவை பலப்படுத்த நடவடிக்கை



(கொழும்பு)

இலங்கைக்கும் ஜப்பானுக்குமிடையிலான சமுத்திர பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் பலப்படுத்துதல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் இட்சு நோரி ஒனொடேரா (Itsunori Onodera) மற்றும் ஜனாதிபதிக்குமிடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றபோதே இவ்விடயம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் இலங்கைக்கு வருகை தந்துள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். ஜனாதிபதி, ஜப்பானின் பாதுகாப்பு அமைச்சரை மிகுந்த சிநேகபூர்வமாக வரவேற்றார்.

ஜனாதிபதி அண்மையில் மேற்கொண்டிருந்த ஜப்பானுக்கான அரச முறை விஜயத்தின்போது ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து இதன்போது மீளாய்வு செய்யப்பட்டதுடன், இலங்கைக்கும் ஜப்பானுக்குமிடையிலான தொடர்புகளை மேலும் விரிவுபடுத்தி இரு நாடுகளுக்குமிடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்புகளை மேம்படுத்துதல் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும் சமுத்திர பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்துதல் தொடர்பாக இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

ஜனாதிபதி மற்றும் ஜப்பானின் பிரதமர் சின்ஷோ அபே ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற கலந்துரையாடல்களின் பெறுபேறாக இலங்கையின் கரையோர பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 1.8 பில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு கரையோர பாதுகாப்பு இயந்திரங்களை அண்மையில் ஜப்பான் அரசாங்கம் வழங்கியிருந்ததுடன், அது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சருக்கு ஜனாதிபதி இதன்போது நன்றி தெரிவித்தார்.

ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் தனது இரண்டு நாள் விஜயத்தின் போது அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை துறைமுகங்களுக்கு விஜயம் செய்யவுள்ளமை தொடர்பில் மகிழ்ச்சி தெரிவித்த ஜனாதிபதி இருநாடுகளுக்கிடையிலும் சமுத்திர பாதுகாப்பு தொடர்பாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள செயற்றிட்டங்களினூடாக எதிர்காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மேலும் விருத்தியடையுமென தான் எதிர்பார்ப்பதாகவும் நம்பிக்கை வெளியிட்டார். (இ-7)

## பகிடிவதை குற்றச்சாட்டில் 5 பிக்குகள் விளக்கமறியலில்



(கொழும்பு)

றுஹுனு பல்கலைக்கழக கலைப்பீடத்தின் இரண்டாம் ஆண்டில் கல்வி கற்கும் பிக்குகள் ஐவரையும் மீண்டும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

மாத்தறை, எலியகந்த பிக்குகள் விடுதியில் பகிடிவதை செய்த சம்பவம் தொடர்பில் 5 பிக்குகள் நேற்று முன்தினம் மாத்தறை பிரதான நீதவான் பவித்ரா சஞ்சீவனி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவர்களை மீண்டும் செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம் 18 ஆம் திகதி இந்த பகிடிவதை சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன் சம்பவத்துடன் தொடர்புடைய பிக்குகளின் உயர் கல்வி நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பகிடிவதை சட்டத்தின் கீழ் குறித்த பிக்குகளுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# 'பாடாய்படுத்தினார்' பட்லர் இந்தியா வெற்றி தாமதம்



நொட்டிங்காம் டெஸ்டில் இந்திய அணி வெற்றியின் விளிம்பில் உள்ளது. இங்கிலாந்தின் எஞ்சிய ஒரே ஒரு விக்கெட்டை கைப்பற்றினால், இன்று இமாலய வெற்றி பெறலாம். வேகத்தில் மிரட்டிய பும்ரா 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி, ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதலிரண்டு டெஸ்டில்வீழ்ந்த இந்திய அணி 0-2 என பின்தங்கி உள்ளது.

இந்நிலையில் மூன்றாவது போட்டி நொட்டிங் காமில் நடக்கிறது. முதல் இன் னிங்சில் இந்தியா 329, இங்கி லாந்து 161 ஓட்டங்கள் எடுத்தன.

இந்திய அணி 2ஆவது இன்னிங்சில் 352 ('டிக்ளேர்') ஓட்டங்கள் எடுத்தது. 521 ஓட்டங்கள் இலக்குடன் 2ஆவது இன்னிங்சை ஆரம்பித்த இங்கிலாந்து அணி 3ம் நாள் முடிவில் விக்கெட் இழப்பின்றி 23 ஓட்டங்கள் எடுத்திருந்தது. குக் (9), ஜென்னிங்ஸ் (13) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

### பட்லர் சதம்

நேற்று நான்காம் நாள் ஆட்டம் நடந்தது. இஷாந்த் 'வேகத்தில்' ஜென்னிங்ஸ் (13), குக் (17) சிக்கினர். பும்ரா பந்தில் அணித் தலைவர் ரூட் (13) ஆட்டமிழந்தார். போப் 16 ஓட்டங்கள் எடுத்தார். அடுத்தடுத்து விக்கெட் கைப்பற்றலாம் என இந்திய பந்துவீச்சாளர்கள் எண்ணினர். இதற்கு மாறாக, ஸ்டோக்ஸ், பட்லர் இணைந்து தொல்லை கொடுத்தனர். பட்லர் டெஸ்ட் அரங்கில் முதல் சதம் எட்டினார். இந்த நேரத்தில் வரமாக வந்தார் பும்ரா.

### பும்ரா மிரட்டல்

இவரது 83ஆவது ஓவரின் 3வது பந்தில் பட்லருக்கு நடுவர் எல்.பி.டபிள்யு., முறையில் அவுட் கொடுத்தார். இதற்கு, 'ரிவியூ' கேட்டபோதும், பலன் கிடைக்காத காரணத்தால் பட்லர் (106) ஆட்டமிழந்தார். அடுத்த பந்தில் பேர்ஸ்டோவ் (0) போல்டானார். ஐந்தாவது பந்தில் வோக்ஸ் பவுண்டரி அடிக்க, பும்ராவின் 'ஹட்ரிக்' வாய்ப்பு நழுவியது. வோக்ஸ் 4 ஓட்டங்கள் எடுத்தார். பாண்ட்யா 'வேகத்தில்' அரைச்சதம் கடந்த ஸ்டோக்ஸ் (62) அவுட்டானார். பிராட்டை (20) வெளியேற்றிய பும்ரா, 5ஆவது விக்கெட் வீழ்த்தினார். ரஷித், அண்டர்சன் இணைய, இந்தியாவின் வெற்றிக்கு இன்றும் காத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆட்ட நேர முடிவில், இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்சில் 9 விக்கெட்டுக்கு 311 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

ரஷித் (30), அண்டர்சன் (8) ஆட்டமிழக்காமல் இருந்தனர். பந்துவீச்சில் இந்தியா சார்பில் அதிகபட்சமாக பும்ரா 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

**4**

விக்கெட் காப்பாளர் ரிஷாப் பன்ட், லோகேஷ் ராகுல் தலா 5க்கும் அதிகமான 'கேட்ச்' (இரு இன்னிங்ஸ் சேர்த்து) பிடித்தனர். இதன் மூலம், ஒரே டெஸ்டில் 5 அல்லது அதற்கும் அதிகமான 'கேட்ச்' இரு இந்திய வீரர்கள் பிடிப்பது 4வது முறையாக நடந்தது. இதற்கு முன், அசார், கிரண் மோரே ஜோடி (எதிர்- பாக்., கராச்சி, 1989), ஸ்ரீகாந்த், கிரண் மோர் ஜோடி (எதிர்- ஆஸி., பெர்த், 1992), கங்குலி, ஷிவ் சுந்தர் ஜோடி (எதிர் - வங்கம், டாக்கா, 2000) இந்த பெருமை பெற்றிருந்தனர்.

**11**

இப்போட்டியில் இரண்டாவது முறையாக இஷாந்த் 'வேகத்தில்' குக் சிக்கினார். இதனையடுத்து, டெஸ்ட் அரங்கில் எதிரணி வீரர் களை அதிக முறை (11) அவுட்டாக்கிய இரண்டாவது இந்திய பந்துவீச்சாளர் என்ற பெருமையை கபில் தேவுடன் (எதிர்- இங்கிலாந்தின் கிரகாம் கூச், 11) பகிர்ந்து கொண்டார். முதலிடத்திலும் கபில் தேவ்தான் (எதிர் - பாகிஸ்தானின் முடாசர் நாசர், 12 முறை) உள்ளார்.

### ஏமாற்றிய ரிஷாப்

நேற்றைய ஆட்டத்தில் பும்ரா வீசிய 27வது ஓவரை பட்லர் எதிர் கொண்டார். இதில் இவர் அடித்த 4வது பந்தை, ரிஷாப் 'கேட்ச்' பிடிக்க தவறினார். அப்போது ஒரு ஓட் மட்டும் எடுத்திருந்த பட்லர் இந்த வாய்ப்பை பயன்படுத்தி பட்லர் நெருக்கடி கொடுத்தார்.

**2**

இந்திய வீரர் பும்ரா டெஸ்ட் அரங்கில் இரண்டாவது முறையாக ஒரே இன்னிங்சில் 5 விக்கெட் வீழ்த்தினார். இதற்கு முன், தென் ஆப்ரிக்காவுக்கு எதிரான ஜோகனஸ்பர்க் டெஸ்டில் (ஜன. 2018) 5 விக்கெட் சாய்த்து இருந்தார்.

**5**

நேற்றைய ஆட்டத்தில் இங்கிலாந்தின் பிராட் 12 ரன் எடுத்தபோது, டெஸ்ட் அரங்கில் 3 ஆயிரம் ஓட்டங்களை எட்டிப்பிடித்தார். இதன்மூலம், டெஸ்ட் அரங் கில் 400 விக்கெட் மற்றும் 3 ஆயிரம் ஓட்டங்களை எடுத்த 5வது பந்துவீச்சாளரானார். இதுவரை பிராட் 3008 ஓட்., மற்றும் 427 விக்கெட் எடுத்துள்ளார். இதற்கு முன், இந்த இலக்கை நியூசிலாந்தின் ரிச்சர்ட் ஹாட்லி, இந்தியாவின் கபில், அவுஸ்திரேலியாவின் வார்ன், தென்னாபிரிக்காவின் பொலக் எட்டி இருந்தனர்.

# ஜோகோவிச் சம்பியன்



அமெரிக்காவில் நடைபெற்று வந்த சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் தொடரில் ரோஜர் பெடரரை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார் ஜோகோவிச்.

சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வந்தது. நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் 2ஆம் நிலை வீரரான ரோஜர் பெடரர், 10ஆம் நிலை வீரரான நோவக் ஜோகோவிச்சை எதிர்கொண்டார்.

இதில் யாரும் எதிர்பார்க்காத வகையில் 4-6, 4-6 என ரோஜர் பெடரர் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

பெண்களுக்கான இறுதிப் போட்டியில் முதலாம் நிலைவீராங்கனையானசிமோனா ஹலெப் தரநிலை பெறாத கிகி பெர்ட் டென்ஸை எதிர்கொண்டார்.

இதில் முதல் செட்டை ஹலெப் 6-2 என எளிதாக கைப்பற்றினார். ஆனால் 2ஆவது செட்டில் பெர்ட்டென்ஸ் கடுமையான நெருக்கடி கொடுத்தார். இதனால் ஆட்டம் 'டை பிரேக்கர்' வரை சென்றது.

இறுதியில் கிகி பெர்ட்டென்ஸ் 7(8) - 6(6) என சிமோனா ஹலெப்பை வீழ்த்தினார். வெற்றியாளரை தீர்மானிக்கும் மூன்றாவது செட்டில் சிமோனா ஹலெப் 2-6 என எளிதில் சரணடைந்தார்.

இதனால் பெர்ட் டென்ஸ் 2-6, 7(8) - 6(6), 6-2 என வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றினார்.



# ஹலெப் விலகல்



டென்னிஸ் தரவரிசையில் முதல் இடத்தில் இருக்கும் சிமோனா ஹலெப் கனெக்டிகட் ஓபனில் இருந்து விலகியுள்ளார்.

உலக டென்னிஸ் தரவரிசையில் சிமோனா ஹலெப் நம்பர் வன் இடத்தில் இருக்கிறார். இவர் கடந்த வாரம் நடைபெற்ற சின்சினாட்டி ஓபன் இறுதிப் போட்டியில் கிகி பெர்ட்டென்ஸ் இடம் தோல்வியடைந்து சம்பியன் பட்டத்தை தவிறவிட்டார். வருகிற 27ஆம் திகதி கிராண்ட்ஸ்லாம் தொடர் நடைபெறுகிறது. இந்த தொடருக்கு சிறப்பான வகையில் தயாராகுவதற்காக கனெக்டிகட் ஓபனில் இருந்து விலகியுள்ளார்.

இதுகுறித்து ஹலெப் கூறுகையில் "அமெரிக்க ஓபனுக்கு திரும்ப நேரம் தேவைப்படுகிறது. நான் இந்த தொடரில் விளையாட உண்மையிலேயே அதிக ஆர்வமாக இருந்தேன். ஏராளமான ரசிகர்கள் டிக்கெட் வாங்கி என்னை பார்க்க வந்ததை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் என்னுடைய காலில் அதிக வலி இருப்பதாக உணர்கிறேன். இதனால் ஓய்வு தேவைப்படுகிறது" என்றார்.

# கீத் நொயர் கடத்தல் விவகாரம்

# மகிந்தவின் வாக்குமூலத்தின் சாராம்சம் 'ஞாபகமில்லை'



(கொழும்பு)

கீத் நொயர் எனும் ஊடகவியலாளரை விசேடமாக தனக்கு ஞாபகம் இல்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு வாக்கு மூலம் அளித்துள்ளார்.

அத்துடன் கீத் நொயர் கடத்தப்பட்ட தினம் இரவு. அப்போதைய அமைச்சர் கரு ஜெயசூரியவிடம் இருந்து தனக்குத் தொலைபேசி அழைப்பு வந்ததா? எனவும் தனக்கு ஞாபகம் இல்லை எனவும் அவ்வாறு வந்திருப்பின் அவ்வழைப்பு தொடர்பில் தேடிப் பார்க்க ஜனாதிபதியின் செயலர் அல்லது பாதுகாப்பு செயலருக்கு தான் அறிவித்திருப்பேன் எனவும் மகிந்த ராஜபக்ஷ சி.ஐ.டி.யிடம் தெரிவித்ததாக அரச சிரேஷ்ட சட்டவாதி லக்மினி ஹிரியாகம நேற்று முன்தினம் கல்கிஸை நீதவான் லோச்சனா அபேவிக்கிரமவுக்குத் தெரிவித்தார். அவரது வாக்குமூலத்தின் சாராம்சம் "தனக்கு ஞாபகமில்லை" என்பதாகும் எனவும் அவர் நீதவானுக்கு தெரிவித்தார்.

இந் நிலையில் இந்த விவகாரத்தில் அடிப்படை சாட்சியாளர்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஞாபக மறதி நோய் தொடர்பில் தேடிப் பார்க்க வேண்டும் என சி.ஐ.டி.க்கு உத்தரவிட்ட நீதவான் லோச்சனா அபேவிக்கிரம விசாரணைகளில் அவர்கள் விடயங்களை மறைப்பார்களாயின் அதன் பின்னணி தொடர்பில் ஆராயப்படல் வேண்டும் எனவும் அவர் சி.ஐ.டி.க்கு ஆலோசனை வழங்கினார்.

த நேஷன் பத்திரிகையின் முன்னாள் இணை ஆசிரியர் கீத் நொயர் கடத்தப்பட்டு சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டமை, சித்திரவதை செய்யப்பட்டமை, ஆயுதத்தால் தாக்கப்பட்டமை, கொலை செய்ய முயற்சிக்கப்பட்டமை மற்றும் நொயர் குடும்பத்தினருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுக்கும் விசாரணைகள் குறித்த நீதவான் நீதிமன்ற வழக்கு நேற்று முன்தினம் கல்கிஸை மேலதிக நீதவான் லோச்சனா அபேவிக்கிரம முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இந்த வழக்கில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சார்பில் உதவி பொலிஸ் அத்தியட்சர் பீ.எஸ்.திசேரா, சமூக கொள்ளை தொடர்பிலான விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா ஆகியோர் மேலதிக விசாரணை அறிக்கையுடன் மன்றில் ஆஜரான நிலையில் அவர் சார்பில் அரச சிரேஷ்ட சட்டவாதி லக்மினி ஹிரியாகம பிரசன்னமானார்.

இதன்போது ஏற்கனவே இந்த விவகாரத்தில் கைதாகி பிணையிலுள்ள இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மேஜர் ஆர்.டி.எம். டபிள்யூ. புளத்வத்த, எஸ்.ஏ. ஹேமச்சந்திர, யூ.பிரபாத் வீரகோன், பி.எல்.ஏ.லசந்த விமலவீர, எச்.எம். நிசாந்த ஜயதிலக, எம்.ஆர். நிசாந்த குமார, சி.ஜயசூரிய ஆகியோருக்கு மன்றில் ஆஜராக வேறு திகதி கொடுக்கப்பட்டுள்ளதால் அவர்கள் ஆஜராகவில்லை. எனினும் 8 ஆவது சந்தேக நபராக கைது செய்யப்பட்ட இராணுவ புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானியும் முன்னாள் இராணுவ படைப் பிரிவுகளின் பிரதானியுமான முன்னாள் பதில் இராணுவத் தளபதி அமல் கருணாசேகர விளக்கமறியலில் உள்ள நிலையில் அவர் நேற்று முன்தினம் மன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இந் நிலையில் மேலதிக விசாரணை அறிக்கையை மன்றில் சமர்ப்பித்து தெளிவுபடுத்திய அரச சிரேஷ்ட சட்டவாதி லக்மினி கிரியாகம, "கனம் நீதவான் அவர்களே, முன்னாள் ஜனாதிபதி மகிந்தவிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் போது, அவர் தனக்கு ஞாபகம் இல்லை என்ற நிலைப்பாட்டிலேயே இருந்தார். கீத் நொயர் எனும் ஊடகவியலாளரை விசேடமாக தனக்கு ஞாபகம் இல்லை எனவும் அக்காலத்தில் ஊடகங்களில் அரசாங்கத்தையும், படையினரையும் விமர்சித்து பல்வேறு செய்திகள், அறிக்கைகள் வெளிவந்ததாகவும் சி.ஐ.டி.யினரின் கேள்விக்குப் பதிலளிக்கும் வண்ணம் அவர் கூறியுள்ளார்.

எனினும் கீத் நொயர் கடத்தப்பட்ட தினம் கரு ஜெயசூரியவிடம் இருந்து தொலைபேசி அழைப்பு வந்ததாக ஞாபகம் இல்லை எனவும் அவ்வாறு வந்திருந்தால் அது குறித்து தேடிப் பார்க்க ஜனாதிபதியின் செயலாளருக்கோ அல்லது பாதுகாப்பு செயலருக்கோ பாரப்படுத்தியிருப்பேன் எனவும் அவர் கூறியுள்ளார்.

கருஜெயசூரியவிட மிருந்து வந்த அழைப்பை மகிந்த ராஜபக்ஷ மறுக்கவில்லை. மறைமுகமாக அதனை ஏற்றுக்கொண்டு அது தொடர்பில் தேடிப்பார்க்க முன்னாள் பாதுகாப்பு செயலருக்கு உத்தரவிட்டமை தொடர்பிலும் மறைமுகமாக அவர் ஏற்றுக் கொள்கின்றார்" என்றார்.

இதன்போதே இந் நிலையில் இந்த விவகாரத்தில் அடிப்படை சாட்சியாளர்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஞாபக மறதி நோய் தொடர்பில் தேடிப் பார்க்க வேண்டும். இது சிக்கலானது என நீதவான் லோச்சனா அபேவிக்கிரம கூறவே, சாட்சியாளர்கள் ஞாபகமில்லை எனக் கூறுவதால் விசாரணைகளே பாதிக்கப்படுவதாக அரச சட்டவாதி லக்மினி ஹிரியாகம சுட்டிக்காட்டினார்.

இந் நிலையில் தொடர்ந்தும் மன்றில் கருத்துகளை முன்வைத்த சிரேஷ்ட அரச சட்டவாதி லக்மினி கிரியாகம, கீத் நொயரிடம் அவுஸ்திரேலியாவில் வைத்து சி.ஐ.டி பதிவு செய்த வாக்குமூலத்தில் உள்ள விடயங்களை வெளிப்படுத்தினார். குறித்த வாக்குமூலத்தில், தான் கடத்தப்பட முன்னைய தினம் செண்பத்தி எனும் பெயரில் பிரசுரித்த கொழும்பு லோட்டஸ் வீதி தற்கொலை குண்டுத் தாக்குதலை மையப்படுத்திய இராணுவத்தின் இயலாமையை சுட்டிக்காட்டிய கட்டுரையே தாக்குதலுக்குக் காரணமாக கருதுவதாகக் கூறியுள்ளார்.

இதனைவிட தன்னைக் கடத்திச் சென்றவர்கள் வானில் வைத்து, தனக்கும் புலிகளுக்கும் இடையில் தொடர்பு உள்ளதா, இராணுவத்தில் இருந்து தகவல் தருவோர் யார், வங்கிக் கணக்கு இலக்கம், மனைவி மற்றும் பிள்ளைகள் குறித்த விபரங்களை மையப்படுத்தியே கேள்வி கேட்டதாக கீத் நொயர் கூறியுள்ளதாக லக்மினி ஹிரியாகம நீதவானுக்கு சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் ஏற்கனவே கீத் நொயர் தடுத்து வைக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் தொம்பே பதுவத்தை வீடு குறித்த தகவல்களை வெளிப்படுத்த பாதுகாப்பு செயலருக்கு அனுப்பப்பட்ட 2 கேள்விக் கொத்துக்களுக்கும் இன்னும் பதிலில்லை என சிரேஷ்ட அரச சட்டவாதி லக்மினி நீதவானுக்கு சுட்டிக்காட்டினார். இதனையடுத்து அது குறித்து ஞாபகப்படுத்தல் கடிதம் ஒன்றினை பாதுகாப்புச் செயலருக்கு அனுப்புமாறு நீதவான் ஆலோசனை வழங்கினார்.

அத்துடன் இராணுவத்தின் செலவு தொடர்பில் கணக்காய்வாளருக்கும் கேள்விக் கொத்தொன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் அதன் பதிலையும் எதிர்பார்த்துள்ளதாக அரச சட்டவாதி லக்மினி முன்வைத்த விடயங்களை ஆராய்ந்த நீதவான், வழக்கை எதிர்வரும் 27ஆம் திகதிக்கு ஒத்திவைத்து அதுவரை 8 ஆம் சந்தேக நபரான அமல் கருணாசேகரவை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (இ-7)

## மண்ணித்தலை புனித செபஸ்தியார் ஆலய திருவிழா முன்னாயத்தக் கலந்துரையாடல்

(பூநகரி)

பூநகரி மண்ணித்தலை புனித செபஸ்ரியார் ஆலயத் திருவிழா எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இவ்வாலய திருவிழா ஒழுங்குகளைச் செய்யுமுகமாக முதலாவது முன்னாயத்தக் கூட்டம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் சென்ற வாரம் இடம்பெற்றது.

இறுதி ஒழுங்குகள் பற்றி கலந்துரையாடும் பொருட்டு இரண்டாவது கூட்டம் நேற்று முன்தினம் 20 ஆம் திகதி பூநகரி பிரதேச செயலர் சி.ச. கிருஸ்ணேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் பூநகரி பங்குத் தந்தை செபஸ்ரியார் ஆலய பரிபாலன சபையினர், பூநகரி பொலிஸ் நிலைய அதிபர், கடற்படை அதிகாரி உட்பட பூநகரி பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர், பூநகரி பிரதேச சபை தவிசாளர், பிரதேச சபை உறுப்பினர்கள், கிளிநொச்சி மாவட்ட கலாசார உத்தியோகத்தர் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.


யாழ்.மாவட்டத்திலும் ஏனைய பகுதிகளிலும் இருந்து பத்தாயிரத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொள்வார்களென தெரிவிக்கப்படுகிறது.

குடிநீர், போக்குவரத்து, சுகாதார வசதிகள், சந்தை வசதிகள் என பல சேவைகளையும் திருப்திகரமாக இறுதி நான்கு நாட்களுக்கும் செல்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

பொலிஸ் பிரிவினரும் வைத்திய சேவைப் பிரிவினரும் தங்கள் சேவைகளை வழங்க உள்ளதாகவும் நோயாளர்காவு வண்டியும் தயார் நிலையில் இருக்குமென தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 24 ஆம் திகதியே பெருந்தொகையான யாத்திரிகர்கள் வந்து சேருவார்களெனவும் 26ஆம் திகதி காலை திருப்பலிப் பூசை இடம்பெற்று மறுநாள் 27 ஆம் திகதியே யாத்திரிகர்கள் திரும்புவார்களெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (2-84)


# கண்ணீர் அஞ்சலி



அமரர்.
**இரத்தினம் கந்தசாமி**

எமது வித்தியாலய ஆசிரியை திருமதி ஜெனனி செந்தில்குமரன் அவர்களின் அன்புத் தந்தையார் அமரர் இரத்தினம் கந்தசாமி அவர்கள்

20.08.2018 திங்கட்கிழமை அன்று இறைபதமடைந்தமையையிட்டு துயரடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யா/பரமேஸ்வரா வித்தியாலயம், திருநெல்வேலி

(5435)


## இராசி பலன்

**மீனம்** — பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.

**மேடம்** — தடைகள் அகன்று தன வரவுகள் கிடைக்கும் நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**இடபம்** — வழிபாடு சிறப்பினைக் கூட்டும், பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை, அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்** — நட்பு வட்டம் விரிவடையும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் திருப்பிதரும் வகையில் அமையும்.

**கும்பம்** — பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பண வரவால் சந்தோசமடைவீர்கள்.

**கடகம்** — மறைமுக எதிர்ப்புகள் மாறும், தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம்.

**மகரம்** — இடமாற்றத்தால் இனிய மாற்றம் காணவேண்டிய நாள், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**சிம்மம்** — பிள்ளைகளின் நீண்டநாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், உஷ்ணசம்பந்தமான ரோக பயமுண்டு.

**தனுசு** — மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, இரவு-பகல் பாராது பாடுபடுவீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்** — கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, சுபதகவல்கள் வந்து சேரலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**துலாம்** — சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**கன்னி** — பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பேச்சில் கனிவு பிறக்கும், பயணங்களால் பலனுண்டு, பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**இராசி பலன்** — கிரகநிலை: ராகு, புத; சூரி; சுக்; குரு; சனி, சந்; கேது, செவ்.
சந்திராஷ்டமம்: மிருகசீரிடம்

22.08.2018
ஆவணி 06, புதன்கிழமை
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
ஏகாதசி முற்பகல் 9.59 மணிவரை
பூராடம் முழுவதும்
சுபநேரம் 4.35-6.05 மணிவரை
இராகுகாலம் 12.05-1.35 மணிவரை
ஏகாதசி விரதம்
ஹஜ் பெருநாள்

வளவன்



வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகியம்மன் ஆலய, கண்ணலிங்கேஸ்வரர் ஆலயங்களின் மகா சங்காபிஷேகம் அண்மையில் இடம்பெற்றது.

# பாடசாலை மாணவர்களின் சிகை அலங்கரிப்பு குறித்து மாநகர சபையில் பிரேரணை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட சிகை அலங்கரிப்பு நிலையங்களில் பாடசாலை மாணவர்களுக்கு நவநாகரிக முறையில் சிகை அலங்கரிப்பு செய்யும் நிலையங்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.மாநகர சபையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்.மாநகரசபை மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் குறித்த பிரேரணையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் வ.பார்த்தீபன் முன்மொழிந்திருந்தார்.

ஆதாவது எமது பிரதேசத்தில் ஒழுக்க விழுமியங்களை மீறி பல செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. அதில், நாகரிகம் என்ற பெயரில் நவநாகரிகமாக சிகை அலங்காரம் செய்யப்படும் முறை பரவி வருகிறது. இது இளைய சமுதாயத்தையும் பாதித்துள்ளது.

எனவே இந்த விடயத்தில் அக்கறை கொண்டு மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு வடக்கு மாகாண கல்வி அமைச்சு குறித்த விடயம் தொடர்பாக சில விதிமுறைகளை உருவாக்கி அறிவுறுத்தல்களை வழங்கி சுற்று நிருபம் அனுப்பப்பட்டது. அதற்கு வலுச்சேர்க்கும் வகையில் நாம் தீர்மானம் கொண்டு வரவேண்டும்.

எனவே பள்ளிப்பருவத்தில் கடைப்பிடிக்க வேண்டிய பாடசாலை விழுமியங்களை நவநாகரிகம் என்ற முறையில் மீறும் யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட சிகை அலங்கரிப்பு நிலையங்களின் அனுமதியை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும்.

குறித்த பிரேரணையை மட்டக்களப்பு காத்தான்குடி நகர சபையும் நிறைவேற்றியுள்ளது. அதேபோல்ஏனைய சபைகளிலும் கொண்டு வந்து இந்த நடைமுறையினையே பின்பற்றலாம் என தீர்மானத்தினை முன்மொழிந்தார்.

குறித்த விடயம் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதில் சில திருத்தம் செய்யப்பட்டு தீர்மானத்தை மீறும் சிகை அலங்கரிப்பு நிலையங்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (இ-9)





# வலி.வடக்கிலுள்ள மயிலிட்டி மீன்பிடி துறைமுக நிர்மாணப் பணிகள் துரிதகதியில் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

30 வருட யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு செயலிழந்து காணப்பட்ட யாழ்.மாவட்டத்தின் மயிலிட்டி மீன்பிடி துறைமுகம் துரிதகதியில் அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டங்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வழிகாட்டலில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்தை புனரமைத்து மீள செயற்படுத்தும் வைபவம் மீன்பிடி நீரியல் வள அபிவிருத்தி மற்றும் கிராமிய பொருளாதார அமைச்சர் காமினி விஜித் விஜயமுனி சொய்சா முன்னிலையிலே இன்று 22ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு மயிலிட்டி மீன்பிடி துறைமுக வளாகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். இவ்வைபவத்தில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளடங்கலாக பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

யுத்தத்திற்கு முற்பட்ட காலத்தில் இலங்கையின் மீன்பிடி உற்பத்தியில் 30% இற்கு மேல் பங்களிப்புச் செய்த ஒரு பிரபல்யமான மீன்பிடி துறைமுகமான மயிலிட்டி துறைமுகம் யுத்த காரணத்தால் செயலிழந்த தமை வட மாகாணத்திற்கும் தேசிய உற்பத்திக்கும் பாரிய பாதிப்பாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

நல்லாட்சி அரசாங்கத்தின் 2018ஆம் ஆண்டிற்கான விசேட வரவு -செலவுத் திட்ட பிரேரணையின்கீழ் 150 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டு இதன்கீழ் 50 மீற்றர் நீளமான Quay Wall, Habour basin மற்றும் நுழைவாயிலை ஆழப்படுத் துதல், அலைதடுப்பு கட்டுமானம், (Breakwater), இறங்கு துறை புனரமைப்பு, எரிபொருள் நிரப்பும் நிலையம், குளிரூட்டப்பட்ட அறைகள், நீர் மற்றும் மின்சார விநியோகம் என்பன அடங்கும். மேலும் ஜக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 30 மில்லியன் நிதியில் நிர்வாகக் கட்டடம், மீன்பிடி வலைகள் பின்னும் நிலையம், நீத்தாங்கிகள், கழிவறைகள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டத்தில் ரூபா 245 மில்லியனில் அலைதடுப்பு கட்டுமானத்தின் முழுமையான புனரமைப்பு, ஏலமிடும் நிலையம், Habour basin மற்றும் நுழைவாயிலை மேலும் ஆழப்படுத்துதல் என்பன மேற்கொள்ளப்படும்.

இது வடமாகாண பொருளாதார அபிவிருத்திக்கு பாரிய அளவில் பங்களிப்புச் செய்யும் என வடக்கு-கிழக்கு மாகாண அபிவிருத்திக்கான ஜனாதிபதி விசேட செயலணியின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார். (இ-7)

# மதகுருவை தகாத முறையில் பேசிய ஊழியர் பணியிலிருந்து இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

கழிவகற்றல் செயற்பாடு தொடர்பில் மதகுருவுடன் தகாத முறையில் பேசிய ஊழியரை சேவையிலிருந்து இடைநிறுத்துமாறு யாழ்.மாநகரசபை முதல்வர் இ.ஆனோல்ட் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட கழிவுகளை சிறு வண்டில்களில் சேகரித்து ஓர் ஆலயத்தை அண்டிய பகுதியில் போட்டு பின்னர் அங்கிருந்து வாகனத்திற்கு மாற்றி வந்துள்ளனர்.

குறித்த செயற்பாட்டை வேறு இடத்திற்கு மாற்றுமாறு குறித்த ஆலயத்தின் மதகுரு தெரிவித்துள்ளார்.

அதன் போது சிற்றூழியர் மறுத்துள்ளார். அதற்கு மாநகர முதல்வரிடம் தான் கூறவேண்டிய நிலைமை ஏற்படும் என மதகுரு சுட்டிக் காட்டியுள்ளார்.

முதல்வரிடம் கூறினாலும் பயனில்லை அவர் எம்மை ஒன்றும் செய்ய முடியாது என ஊழியர் ஏளனமாக பேசியுள்ளார். இதனால் குறித்த மதகுரு அவரை புகைப்படம் எடுத்து மாநகரசபை உறுப்பினர்களிடம் காண்பித்துள்ளார்.

இந்த விடயம் சபையில் சுட்டிக்காட்டப்பட்ட போது குறித்த ஊழியர் உடனடியாக தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டு அடுத்த கட்ட விசாரணை மேற்கொள்ள வேண்டும் என முதல்வர் தெரிவித்தார். (இ-9)

# நீரியல் முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தில் நடைபெற்று வரும் நீரில் வளர்ப்பு மற்றும் நீரியல் வள முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறிக்கு இரண்டாம் கல்வியாண்டிற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

க.பொ.த.உயர் தரத்தில் உயிரியல் பிரிவு அல்லது உயிர்முறை கற்கைநெறியினை பூர்த்தி செய்பவர்கள் உள்நாடு மற்றும்வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் தேசிய தொழிற்கைமைப்டிப்ளோமா(NVQ-05) சான்றிதழ் வழங்கப்படும்.

கல்லூரியின்கற்கைநெறிகள் யாவும் கட்டணமின்றி நடத்தப்படுவதுடன் உரிய கற்கைநெறியினை கற்க விருப்புபவர்கள் அதற்கான விண்ணப்பப்படிவத்தினை அலுவலகத்தில்பெற்று எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற் கொள்ளுமாறும் மேலதிக தொடர்புகளுக்கு தொ.இ-021 738 8188, 071 834 9073, 0773755063 என்ற இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறும் இலங்கை சமுத்திர பல்கலைக்கழக யாழ். பிராந்திய உதவிப் பணிப்பாளர் எஸ்.எஸ்.கிருஸ்ணலிங்கம் அறிவித்துள்ளார். (இ)

# ஒரு உழவியந்திரத்திற்கு நான்கு பெட்டிகள் வேண்டும்

## நகர சபை செயலாளர் ஆலோசனை

(சாவகச்சேரி)

ஒரு உழவியந்திரத்திற்கு நான்கு அல்லது ஐந்து பெட்டிகளைச் செய்வதன் மூலம் நகரசபையின் உழவியந்திர பற்றாக்குறையை தீர்க்க முடியும் என சாவகச்சேரி நகரசபையின் செயலாளர் கா.சண்முகதாசன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி நகர சபையின் உழவியந்திரங்கள் பழுதடைந்த நிலையில் காணப்படுவதால் வட்டாரங்களில் தேங்கும் குப்பைகளை அகற்றுவதில் ஏற்படும் சிக்கல்கள் தொடர்பாக கலந்தாலோசித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒரு உழவியந்திரம் கொள்வனவு செய்யும் அதே நேரம் நான்கு அல்லது ஐந்து உழவியந்திரப் பெட்டிகளைச் செய்ய முடியும். ஒரு உழவியந்திரத்தின் உதவியுடன் பெட்டிகளை வட்டார ரீதியாக நிறுத்தி பெட்டிகளுடன் சுத்திகரிப்பு தொழிலாளர்களையும் நிறுத்தி வேலைகளை இலகுபடுத்த முடியும்.

ஒரு உழவியந்திரம், ஒரு சாரதிமற்றும்இந்தசெயற்பாட்டிற்கு போதுமானதாக இருக்கும் எனத் தெரிவித்தார்.

இது தொடர்பாக சபையின் உப தவிசாளர் பாலமயூரன் மற்றும் உறுப்பினர் ஜெயக்குமார் ஆகியோர் தெரிவிக்கையில்,

தற்போது கிடப்பில் உள்ள வேலைகளை சாவகச்சேரி பிரதேச சபையின் உழவியந்திரங்களைப் பெற்று செய்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் பின்னர் செயலாளரின் யோசனைப்படி கழிவுகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளலாம் எனத் தெரிவித்திருந்தனர்.

வடக்கு மாகாணத்தில் பழுதடையும் திணைக்கள வாகனங்களை பார்வையிடவும் மேற்பார்வை செய்யவும் ஒரு பொறியியலாளர் மாத்திரமே காணப்படுவதாலேயே பழுதடைந்த வாகனங்கள் நீண்ட காலம் கிடப்பில் இருப்பதாக சபையில் சுட்டிக்காட்டப்பட்டது. (இ-30)

# ஆலயத்திற்கு நிதியுதவி



(கரணவாய்)

கரணவாய் கிழக்கு சிவன் கோவில்புனரமைப்பு வேலைகளுக்காக வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.தர்மலிங்கம் தனக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாவை கரவெட்டி பிரதேச செயலகத்தில் வைத்து பிரதேச செயலர் தயாரூபன் முன்னிலையில் வழங்கினார். (இ-60)

# சாவகச்சேரி சந்தை வளாகத்தினுள் நவீன கடைத் தொகுதிகள் வேண்டும்

## நகர சபை உறுப்பினர் கஜிதன் தெரிவிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொதுச் சந்தை வளாகத்தினுள் வியாபாரிகளின் நன்மை கருதியும், நகர சபையின் வருமானம் கருதியும் நவீன கடைத் தொகுதிகள் அமைக்கப்பட வேண்டிய தேவை இருப்பதாக சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.கஜிதன் தெரிவித்துள்ளார். கடந்த சபை அமர்வின் போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்திருந்தார்.


மேலும் அவர் தெரிவிக்கையில் 1999, 2000 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் சாவகச்சேரி பொதுச் சந்தையைச்சூழநான்குபுறமும்கடைத் தொகுதிகள் காணப்பட்டன.

அதேபோல சந்தை வளாகத்தைச் சூழ நவீன கடைத் தொகுதிகள் அமைக்க வேண்டிய தேவை சாவகச்சேரி நகர சபைக்கு உள்ளது. அதற்கான இட வசதிகளும் சந்தை வளாகத்தினுள் உள்ளது.

அத்துடன்ஏற்கனவேகாணப்படுகின்ற கடைத் தொகுதிகள் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன. அவை புனரமைக்கப்பட வேண்டிய கட்டாயத்திலும் உள்ளன. எமது சாவகச்சேரி நகரில் உரிய கடைத் தொகுதிகள் இல்லாமையால் எமது பிரதேச வியாபாரிகள் வேறு பிரதேசங்களுக்குச் சென்று வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றமை அவதானிக்க முடிகிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-30)

# யுத்தத்தால் உளநலப் பாதிப்புக்குள்ளான வடக்கு மக்களை மீட்டெடுக்க வேண்டும்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் வலியுறுத்து



(மன்னார்)

நாட்டில் இடம்பெற்று முடிந்த நீண்டகால யுத்தத்தின் விளைவாக வடபகுதிகளிலுள்ள பொதுமக்களில் பலரும் ஏதோவொரு வகையில் உளநலப் பாதிப்பிற்குட்பட்டவர்களாகக் காணப்படுகின்றார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கான மனநலப் போதனைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டும். ஏனைய மக்களுடன் இவர்களை இணையச் செய்து தனிமையை நாடி சமூகத்தில் இருந்து விலகியிருக்கின்ற நிலையை இல்லாமல் செய்தல் வேண்டுமென வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

குடும்ப புனர்வாழ்வு நிலையத்தின் ஆதரவில் மன்னார் மாவட்ட செயலகம் முன்பாக நேற்றுக் காலை 8 மணியளவில் ஆரம்பமான நடைபவனி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மன்னார் மாவட்டச் செயலகத்திலிருந்து ஆரம்பமாகின்ற இந்த நடைபவனி நிகழ்வு நாளொன்றுக்குச் சுமார் 12 கிலோ மீற்றர் என்ற வகையில் நடைபெற்று எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் வவுனியா புதிய பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் இந்தப் பவனி நிகழ்வுகள் முடிவுறுத்தப்படவிருப்பதாகக் கூறப்படுகின்றது. ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி ஆதரவுடன் முன்னெடுக்கப்படுகின்ற இந்த நிகழ்வின் முக்கியத்துவம் பற்றி நீங்கள் பலரும் அறிந்திருப்பீர்கள்.

நீண்டகால யுத்தத்தின் விளைவாக எமது பகுதிகளில் உள்ள பொதுமக்களில் பலரும் ஏதோ ஒருவகையில் உளநலப் பாதிப்பிற்கு உட்பட்டவர்களாக காணப்படுகின்றார்கள். இவ்வாறு உளநலப் பாதிப்பிற்கு உள்ளாக்கப்பட்ட மக்களில் பலர் தனிமையை விரும்பியவர்களாக சமூகத்திலிருந்து வேறுபட்டு ஒரு ஏகாந்த நிலையில் வாழும் மன உணர்வுகளைக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். இவர்களை எடுத்த மாத்திரத்தில் இனங்கண்டு கொள்ள முடியாதபோதும் தொடர்ந்து இவர்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் போது அவர்களின் உளநலப் பாதிப்புக்கள் வெளிக்கொண்டு வரப்படுகின்றன.

இயல்பாகவே இவ்வாறான பாதிக்கப்பட்டவர்கள் மனதில் சில வெறுப்புக்களும் கோபதாபங்களும் காழ்ப்புணர்ச்சிகளும் குடிகொண்டிருப்பதை அவதானிக்கலாம். அவற்றில் இருந்து இவர்களை விடுவித்து சமுதாய நீரோட்டத்தில் சாதாரணமான மக்களைப் போல நடமாட நாம் உதவி புரிய வேண்டும். உளநலச் சிகிச்சை என்பது காய்ச்சல் தலையிடிக்கு மருந்து கொடுப்பது போல ஒரேநாளில் சுகப்படுத்தக் கூடிய சிகிச்சை அல்ல. பாதிக்கப்பட்டவர்களுக்கான மனநலப் போதனைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டும். ஏனைய மக்களுடன் இவர்களை இணையச் செய்து தனிமையை நாடி சமூகத்தில் இருந்து விலகியிருக்கின்ற நிலையை இல்லாமல் செய்தல் வேண்டும்.

இந்நாட்டில் இடம்பெற்ற கடுமையான யுத்தத்தின் பயனாகத் தமது அங்கங்களை இழந்து உயிர்ப்புடன் வாழ்பவர்கள், பிள்ளைகுட்டிகளை இழந்தவர்கள், தாய், தந்தையரை இழந்தவர்கள், ஆதனங்கள், வீடு மற்றும் வாழ்வாதாரங்களை இழந்தவர்கள், யுத்த அதிர்ச்சியின் காரணமாக உளநலக் குறைபாடுகளுக்கு ஆளாக்கப்பட்டவர்கள் எனப் பல்வேறு மக்கள் வெளிப்பார்வைக்கு சாதாரணமானவர்களாகக் காணப்படுகின்ற போதும் இவர்கள் பல்வேறு மன அழுத்தங்களுக்கு உள்ளாக்கப்பட்டவர்களாக நித்திரையின்றி அமைதியற்ற சூழ்நிலையில் வாழ்ந்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. இவர்களில் பலர் தமது குறைபாடுகளை வெளியே எடுத்துச் சொல்ல முடியாதவர்களாக வாழ்ந்து வருகின்றார்கள். பலதரப்பட்ட மக்கள் இவ்வாறான பாதிப்புக்களுக்கு உள்ளாக்கப்பட்டு தமது உள்ளக் குமுறல்களுடன் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களை இனங்கண்டு மக்களுடன் கூடுதலாக உறவாடச் செய்து அவர்களின் தனிமை நிலையைப் போக்கி குழப்ப நிலைகளிலிருந்து விடுபடச் செய்ய வேண்டியது எமது தார்மீகப் பொறுப்பாகும்.

எனினும் இக்கடமைகளைப் பொறுப்பேற்று நடைமுறைப்படுத்துவதற்கு எம்மிடம் தனியான அலகுகள் ஏதும் அற்ற நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி அனுசரணையுடன் உருவாக்கப்பட்ட குடும்பப் புனர்வாழ்வு நிலையம் எமக்கு உதவி புரிய முன்வந்துள்ளது. (2)

## தொழில்நுட்ப உத்தியோகத்தர் விபத்தில் சிக்கிப் படுகாயம்

(கரணவாய்)

விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு முன்பாக இடம்பெற்ற இவ் விபத்தில் உடுப்பிட்டி பகுதியைச் சேர்ந்தவரான பருத்தித்துறை பிரதேச சபையில்தொழில்நுட்ப உத்தியோகத்தராக கடமையாற்றும் நபரே படுகாயமடைந்தவராவார். (இ-60)


### காணி விற்பனைக்கு

அரியாலை கிழக்கில் வயற்காணியும் மானிப்பாய் இராஜகாரியர் வீதியில் தென்னந்தோட்டம் 8 1/2 பரப்பும் விற்பனைக்கு உண்டு.

T.P: 077 473 6739
077 633 6853

(5431)

### கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 57 செவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழில்
தொ.இ: B/356

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 36 செவ் 1 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L/கனடா குடியுரிமை
தொ.இ: B/361

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 28 செவ் 2 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:BSc, MSc/ அரசதொழில்
தொ.இ: B/374

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 19
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/392

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 14
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:PHD/வைத்தியர் அவுஸ்திரேலியா
தொ.இ: G/610

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 51 செவ் 4 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: பட்டதாரி ஆசிரியர்
தொ.இ: G/621

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 48 செவ் 7 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: பட்டதாரி அரச தொழில்
தொ.இ: G/622

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 25
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:BA, MA, HNDE/ விரிவுரையாளர்
தொ.இ: G/631

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

### கிருஷ்ணா சித்த ஆயுர்வேத வைத்தியசாலை
### KRISHNA SIDDHA AYURVEDA VAIDYASALAI

DR.T.KRISHANAPAHAVAN GOVT REGD.NO:10329

சித்த ஆயுர்வேத வைத்தியம்

**குழந்தைப் பாக்கியம் இயற்கையாகப் பெற**
திருமணமாகிப் பல வருடங்களாகியும் குழந்தை கிடைக்காத பெண்களுக்கு மாதவிலக்கை ஒழுங்கு படுத்தி கர்ப்பப்பையிலுள்ள கிருமிகளை, நீர்க்கட்டிகளை அகற்றி குழந்தை உருவாக வகை செய்யப்படும்.

**இராஜவசீகரணலேகியம்**
நரப்புப் பலவீனமுள்ள ஆண்.பெண்களுக்கு சக்தியைக் கொடுத்து திருப்திகரமான தாம்பத்தியத்தை அனுபவிக்க உதவும்.இந்திரியத்தில் உயிர் அணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும்.

**கிருஷ்ணா நேத்திர சிந்தாமணித் தைலம்**
பெண்களுக்கு நீண்ட அழகிய கூந்தலைத் தருவதோடு சொடுகு, மயிர் கொட்டுதலையும் கட்டுப்படுத்தி, கண்களுக்கு கூர்மையான பார்வையும் படிக்கின்ற மாணவர்களுக்கு நல்ல ஞாபகசக்தியையும் தரும். மொட்டைத்தலை இளைஞர்களும் பாவித்துப் பலன் பெறலாம்.

புற்றுநோய், தோல் நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரத்த சுத்திச் சூரணம், இதய நோய், சளி ரோகங்கள், நீரிழிவு, மூட்டு வாத வலிகள், மூலநோய், அசுத்த நீரினால் ஊதிப் பெருத்த உடலைக் குறைக்கவும், மெல்லிய தோற்றமுள்ள உடலை அழகான தோற்றத்தைப் பெறவும், சிறப்பு வைத்தியங்கள் உண்டு. நீண்டகால நோய்களால் அவதிப்படுபவர்கள் தங்கள் ஜாதகக் குறிப்புடன் தொடர்பு கொண்டால் பலன் பார்த்து பரிகாரம் சொல்லப்படும்.

**குறிப்பு: தூர இருந்து வருபவர்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நேரத்தை ஒதுக்கிக் கொண்டு வரவும்.**

இல.11, 3 ஆம் குறுக்குத் தெரு, கண்டி றோட், வவுனியா.
தொ.இல.: 077 972 3369
குறுக்குத் தெரு, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
(5396)

# வெடுக்குநாறியில் வழிபடுவதற்கான தடையை எதிர்த்தும் தொல்பொருள் திணைக்களத்திலிருந்து மீட்டுத்தரக்கோரியும்



## வவுனியா வடக்கு பிரதேச செயலகம் முன்பாக கவனயீர்ப்பு



(பனிக்கன்குளம்)

வவுனியா மாவட்டத்தில் ஒலுமடு கிராமத்தின் வெடுக்குநாறி மலைப்பகுதியில் பொதுமக்கள் வழிபாடுகளில் ஈடுபட தொல்பொருள் திணைக்களம் தடைவிதித்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் அம்மலையை தொல் பொருள் திணைக்களத்திலிருந்து மீட்டுத்தருமாறு கோரியும் நேற்றுக் காலை 9.30 மணியளவில் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

வவுனியா வடக்கு பிரதேசத்தின் ஒலுமடு கிராமத்தில் இருந்து மூன்று கிலோ மீற்றர் தொலைவில் தமிழரின் பூர்வீக பிரதேசமான (300 மீற்றர் உயரமுடைய) வெடுக்குநாறி மலை அமைந்துள்ளது.

குறித்த மலைப்பகுதியில் ஆதி லிங்கேஸ்வரர் என்ற சிவனுடைய லிங்கம் காணப்படுவதுடன் தமிழ் மக்களுடைய நாகர்களின் புராதான பிராமிய எழுத்துக்களும் காணப்படுகின்றன. கடந்த ஐந்து தலைமுறையாக அப்பகுதி மக்கள் குறித்த ஆலயத்திற்கு சென்று பூஜை வழிபாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த வாரமளவில் தொல்பொருள் திணைக்களத்தால் குறித்த மலைக்கு பொதுமக்கள் சென்று வழிபடுவதற்கு தடை விதிக்கப்பட்டது. பின்னர் இத்தடையினை தற்காலிகமாக தொல்பொருள் திணைக்களத்தின் அனுமதியுடன் நெடுங்கேணி பொலிஸார் நீக்கி வழிபாடுகளை மாத்திரம் மேற்கொள்வதற்கு அனுமதியளித்துள்ளதுடன் ஆலயத்தை புனரமைப்பு செய்வதற்கும் புதிய கட்டட நிர்மாணப் பணிகள் செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஆலயத்தை முழுமையாக மீட்டுத்தருமாறு கோரி வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய நிர்வாக சபையினருடன் கிராம மக்கள், பொது அமைப்புக்கள், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சாந்தி சிறிஸ்கந்தராஜா, வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான மயில்வாகனம் தியாகராஜா .ஜி.ரி. லிங்கநாதன், ப. சத்தியலிங்கம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன், வினோநோத ராதலிங்கம், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன், பிரதேச சபை உறுப்பினர்கள், பல கட்சிகளின் பிரதிநிதிகள், அகில இலங்கை சைவ மகா சபையினர் என பலரும் கலந்து கொண்டு வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "எமது நிலம் எமது மலை. இந்துக்களை அவமதிக்காதே, வழிபாட்டுச் சுதந்திரத்தில் வாலாட்டாதே, இந்துக்கள் வழிபாட்டில் இடையூறு செய்யாதே, ஆதி லிங்கேஸ்வரர் ஆக்கிரமிப்பு இந்துக்கள் அவமதிப்பு, தொல்பொருள் திணைக்களமே மலையை தோண்டி எடுக்கவா?, தெற்கின் சுதந்திரம் வடக்கில் இல்லை, வடக்கு என்றைக்குமே மாற்றான் வீட்டுப்பிள்ளை, மண்டியிடாது வடக்கின் மானம், சைவநீதிக்கு சாவு மணி, இலங்கை அரசே எங்கே நீதி" போன்ற பல்வேறு கோசங்களை எழுப்பினார்கள்.





போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஜனாதிபதிக்கு அனுப்புவதற்கான கோரிக்கைகள் அடங்கிய மகஜரை வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமனிடம் ஒப்படைத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பின்னர் அங்கிருந்து பேருந்து மூலம் வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு சென்று வழிபாடுகளை மேற்கொண்டனர். (2-281-315)

வன்னி வலம்

# மன்னார் மனித புதைகுழி குறித்து தகவல் கூறமுடியாது

## விசேட சட்ட வைத்திய நிபுணர் தெரிவிப்பு



(மன்னார்)

மன்னார் சதொச வளாகத்தில் புதிய கட்டடம் அமைப்பதற்காக அகழ்வுப் பணிகள் மேற்கொண்ட சமயத்தில் சந்தேகத்திற்கு இடமான மனித எச்சங்கள் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து குறித்த வளாகத்தில் நேற்றுடன் 54 ஆவது தடவையாக அகழ்வுப் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

கடந்த 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் கடந்த 19 ஞாயிற்றுக் கிழமை வரை குறித்த, வளாகத்தின் அகழ்வு பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டதை தொடர்ந்து நேற்று முன்தினமும் நேற்றும் வழமை போல் விசேட சட்ட வைத்திய அதிகாரி மற்றும் தொல்லியல் துறை பேராசிரியர் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இதுவரை குறித்த வளாகத்தில் 72 மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டதுடன் 66 மனித எச்சங்கள் குறித்த வளாகத்தில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டு 440 பைகளில் இலக்கம் இடப்பட்டு பொதி செய்யப் பட்டு நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த வளாகத்தில் புதிதாக அடையாளப்படுத்தப்படும் மனித எச்சங்கள் மற்றும் புதிதாக இனம்காணப்படுகின்ற தடயப் பொருட்கள் சம்பந்தமாக இனிவரும் நாட்களில் தகவல் வழங்க முடியாத நிலை உள்ளதாகவும் இனிவரும் நாட்களில் ஊடகவியலாளர்கள் மனித புதைகுழிக்கு வருகை தந்து புகைப்படம் மற்றும் ஒளிப் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

ஆனால் தகவல் வழங்கும் விடயங்கள் பற்றி எதுவும் கூற முடியாத நிலை காணப்படுவதாகவும் விசேட சட்ட வைத்திய நிபுணர் தெரிவித்துள்ளார். (2)

# உயிலங்குளம் மாதிரி வீட்டுத்திட்ட வீடுகளைத்திருத்த வேண்டியுள்ளது

## துணுக்காய் பிரதேச செயலாளர் தெரிவிப்பு



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் உயிலங்குளம் மாதிரி வீட்டுத் திட்டத்தில் வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கான வீடுகள் திருத்திக் கொடுக்கப்பட வேண்டிய தேவையுள்ளதாக துணுக்காய் பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தி தெரிவித்துள்ளார்.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட உயிலங்குளம் கிராமத்தில் இந்திய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட மாதிரி வீட்டுத்திட்டத்தில் உள்ள வீடுகள் யாவும் சேதமடைந்து காணப்படுவதாகவும் குறித்த குடியிருப்பில் போதிய வசதிகள் இல்லாமையினால் தாங்கள் பல்வேறு சிரமங்களை எதிர் கொள்வதாக மேற்படி வீட்டுத்திட்டத்தில் வாழும் குடும்பங்கள் தெரிவித்துள்ளன.

அதாவது, துணுக்காய் பிரதேசத்தில் வாழ்ந்து வந்த காணிகள் அற்ற நிலையில் காணப்பட்ட மாற்றுத்திறனாளிகள், பெண் தலைமைத்துவத் தலைவர்களைக் கொண்ட குடும்பங்கள் ஆகியன உள்ளடங்கலாக 60 வரையான குடும்பங்கள் குறித்த பகுதியில் குடியேற்றப்பட்டிருந்தன.

இவ்வீட்டுத்திட்டத்தில் போதிய வசதிகள் இன்மை மற்றும் உரிய முறையில் வீடுகள் அமைக்கப்படாமல் கூடுதலான வீடுகள் சேதமடைந்தும் காணப்படுகின்றமையால் குறித்த வீடுகளை விட்டு அதிகளவான குடும்பங்கள் வெளியேறியுள்ளன.

இவ்வாறு வீட்டுத்திட்டத்தில் தற்போது வாழ்ந்து வரும் மக்கள் தமது வீடுகளை புனரமைத்துத் தருமாறு கோரியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த துணுக்காய் பிரதேச செயலாளர் உயிலங்குளம் பகுதியில் கடந்த 2011 ஆம் ஆண்டளவில் இந்திய அரசின் உதவியுடன் அமைக்கப்பட்ட வீட்டுத் திட்டத்தில் உள்ள வீடுகள் சரியான முறையில் அமைக்கப்படாமல் தற்போது அந்த வீடுகள் சேதமடைந்து மக்கள் வாழ முடியாத சூழல் காணப்படுகின்றது.

இதில் இருந்து மக்கள் வெளியேறுவதற்கு கோரி வருகின்றனர். இவ்வாறு இங்குள்ள மக்களுக்கு குறித்த வீடுகளுக்கு பதிலாக புதிய வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும் அல்லது திருத்தியமைக்க வேண்டிய தேவை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். (2-315)

# ரவிகரன் உள்ளிட்ட ஏழு பேருக்கு எதிரான வழக்கு ஒக்டோபருக்கு ஒத்திவைப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்திற்கு சேதம் ஏற்படுத்தியமை தொடர்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகர்ன் உள்ளிட்ட ஏழு பேருக்கு எதிரான வழக்கு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் ஒன்றிணைந்து கடந்த 2 ஆம் திகதி கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்ததுடன், மாவட்ட கடற்றொழில் நீரியல்வள திணைக்கள அதிகாரிகளுக்கு தமது கோரிக்கைகளை முன்வைக்கச் சென்ற போது, நீண்டநேரம் கடந்த நிலையில் திணைக்களத்திற்குள் இருந்த அதிகாரிகள் மக்களின் கோரிக்கைகளுக்கு செவி சாய்க்காது இருந்த நிலையில் அலுவலகம் சேதமாக்கப்பட்டது.

இவ்வாறு அலுவலகம் சேதமாக்கப்பட்டமை தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், இதில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் உள்ளிட்ட ஏழு பேருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்யப்பட்டதுடன், குறித்த ஏழு பேரும் கைது செய்யப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டதையடுத்து பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன் நேற்றைய தினம் தவணையிடப்பட்டிருந்தது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் உள்ளிட்ட ஏழு பேரும் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதையடுத்து எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது. (2-315)

# உளவியல் சார்ந்த விடயங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான மனநலம் தொடர்பான நடைபவனி

## மன்னாரில் இருந்து வவுனியா நோக்கி நேற்று ஆரம்பம்





(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் குடும்ப நல பணியகத்தின் அனுசரணையுடன் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் மனநலம் தொடர்பான நடைபவனி நேற்றுக்காலை 8.30 மணியளில் மன்னார் கச்சேரிக்கு முன்பாக ஆரம்பமானது.

வடக்கு- கிழக்கு பிரதேசத்தில் யுத்தத்தின் பின்னர் தமிழ் மக்கள் ஏதோவொரு வகையில் உளம் சார்ந்த பிரச்சினைக்குள்ளாகின்றார்கள். உடல் நோயை கவனித்து வரும் மக்கள் தாங்கள் உளம் சார்ந்தபிரச்சினையை கவனிப்பதே இல்லை. இதனால் தற்கொலைகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதிகரித்துள்ளன.

எனவே மக்கள் மனநலம் மற்றும் உளவியல் சார்ந்த விடயங்களில் விழிப்புண்வு ஏற்படுத்தும் வகையில் குறித்த நடைபவனி ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

மன்னாரில் ஆரம்பிக்கப்பட்ட நடைபவனியானது ஆறு நாட்களாக நடைபெற்று எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் நிறைவடையும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

குறித்த நடை பவனியை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

குறித்த நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஞா.குணசீலன், மன்னார் நகர தவிசாளர், குடும்ப நல பணியாளர்கள், மாவட்ட அரசாங்க அதிபர், மாவட்ட செயலக ஊழியர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந் நிகழ்வை ஆரம்பித்து உரையாற்றிய வடக்கு மாகாண முதலமைச்சர் வடக்கு-கிழக்கு பகுதிகளில் உள்ள தமிழ் மக்கள் நீண்டகால யுத்தத்துக்கு பின்னர் ஏதோ ஒரு வகையில் உளநல பாதிப்புக்குள்ளாகி இருப்ப தாகவும் இந்த மக்களை உளநல ரீதியில் சுகதேகியாக்க நாம் எடுத்த முயற்சிகளுக்கு அரசாங்கம் ஆதரவு வழங்கவில்லை.

எனவே விரை ந்து பணியாற்றி இவ்வாறான உளநல பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்களை சமுதாய நீரோட்டத்தில் இணைப்பது முக்கியம் எனவும் தெரிவித்தார்.

உளநல ரீதியில் பாதிக்கப்பட்டவர்களுக்காக சிகிச்சை அளிப்பதற்காக இந்தியாவில் இருந்து தமிழ் தெரிந்த நிபுணர்களை அழைத்து வருவதற்கு எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை எனவும் தெரிவித்தார். (2)




# சிறந்த விவசாயிகள் தெரிவும் வெற்றிக்கேடயம் வழங்கலும்

(வவுனியா)

வடக்கு மாகாண சபையின் விவசாய, கமநல சேவைகள், கால் நடை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல், நீர் வழங்கல், நீர்ப்பாசனம் மற்றும் சுறநாடல் அமைச்சின் நிதி ஒதுக் கீட்டின் கீழும் விவசாய திணைக் களத்தின் மீண்டுவரும் செலவீன நிதியொதுக்கீட்டின்கீழும்சிறந்த அன்னாசி செய்கையாளருக்கான தெரிவு, சிறந்த அடர் முறையிலான மாமர செய்கையாளருக்கான தெரிவு, சிறந்த வீட்டுத்தோட்ட செய்கையாளருக்கான தெரிவு, சிறந்த சேதன விவசாய செய்கையாளருக்கான தெரிவு ஆகிய தலைப்புக்களின் கீழ் விவசாயிகளைத் தெரிவு செய்து கௌரவிக்கும் நிகழ்வு இடம் பெறவுள்ளதாக வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர்(விரி) அலுவலகத்தகவலில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இத் திட்டம் முதலில் விவசாய போதனாசிரியர் மட்டத்தில் நடத்தப்பட்டு முதல் மூன்று வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர். இரண்டாம் கட்டமாக மாவட்ட மட்டத்தில் மூன்று வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

இவ்வாறு மாவட்டமட்டத்தில் தெரிவு செய்யப்படும் விவசாயிகளுக்கு பணப்பரிசில், வெற்றிக் கேடயம், சான்றிதழ் என்பன வழங்கப்படவுள்ளன.

இப்போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் போட்டியாளர்கள் தங்கள் பகுதியிலுள்ள விவசாய போதனாசிரியர் காரியாலயத்திலும் மாகாண பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகம், வவுனியாவிலும் போட்டிக்கான விதிமுறைகளை அறிந்து கொண்டு விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்ளமுடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2018 புரட்டாதி மாதம் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் விவசாய போதனாசிரியரிடம் கையளிக்க வேண்டும்.

மாவட்டமட்ட வெற்றியாளர்களுக்கு உழவர் பெருவிழாவில் வைத்து கௌரவிப்பு வழங்கப்பட்டு பணப்பரிசில், வெற்றிக்கேடயம், சான்றிதழ், என்பன வழங்கப்படவுள்ளன. (2)

## கரைச்சி பிரதேசசபை எல்லைக்குள்

# 40 இடங்களில் கல்வெட்டுக்கள் அமைக்கும் பணி ஆரம்பமானது



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச சபை எல்லைக்குள் அவசியமானதென இனங்காணப்பட்ட 40 இடங்களில் கல்வெட்டுக்களை அமைக்கும் பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின.

கரைச்சி பிரதேச சபையின் வருடாந்த நிதியொதுக்கீட்டில் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதன் பிரகாரம் நேற்று முன் தினம் கிருஷ்ணபுரம், விநாயகபுரம் ஆகிய கிராமங்களை இணைக்கின்ற பகுதிக்கான கல்வெட்டுக்குரிய அடிக்கல் நாட்டிவைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் கரைச்சி பிரதேச சபை தவிசாளர், உப தவிசாளர் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இதே போன்று கிருஷ்ணபுரம்- செல்வநகர் இணைக்கும் பாலம் , கிருஷ்ணபுரம்- அம்பாள்குளம் இணைப்புப்பாலம் ஆகியவற்றுக்கான வேலைத் திட்டங்களும் இப்பிரதேசத்தில் இடம் பெறவுள்ளன. ஒவ்வொன்றும் சுமார் 8 இலட்சம் ரூபா பெறுமதியில் வடிவமைக்கப்பட்ட 40 கல்வெட்டுக்கள் கரைச்சி பிரதேச சபை ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்தில் இனங்காணப்பட்ட கிராமங்களை இணைக்கும் முக்கிய இடங்களில் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. (2)

# பெண் நோயியல் மகப்பேற்று நிபுணர் இன்மையால் உயர் குருதி அழுத்த கர்ப்பிணித் தாய்மார்கள் அவதி

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் பெண் நோயியல் மகப்பேற்று நிபுணர் இன்மையால் கர்ப்பகாலத்தில் ஏற்படும் உயர்குருதி அழுத்தம் காரணமாக உயிராபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட கர்ப்பிணித்தாயொருவர் அவசரமாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலைத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் பெண் நோயியல் மகப்பேற்று நிபுணர்கள் கடந்த ஒரு வாரகாலமாக இல்லாத காரணத்தினால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் கர்ப்பிணித்தாய்மார்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்ளும் நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில் கர்ப்பகாலத்தில் ஏற்படும் உயர் குருதி அழுத்தம் காரணமாக வலிப்பு ஏற்பட்ட நிலையில் எட்டரை மாத கர்ப்பிணித்தாயொருவர் உயிராபத்தான நிலையில் நேற்று முன்தினம் கிளிநொச்சி பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் பெண் நோயியல் மகப்பேற்று வைத்தியர் இன்மையால் உடனடியாக நோயாளர் காவு வண்டிமூலம்யாழ்போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலைத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதே வேளை கடந்த 19 ஆம் திகதி உயர் குருதி அழுத்தம் ஏற்பட்ட நிலையில் கர்ப்பிணித்தாயொருவர் அவசரமாக யாழ்போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அறுவைச்சிகிசை மூலம் பிரசவம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கடந்த வாரம் வைத்தியசாலையில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டிருந்த கர்ப்பிணித் தாய்மார் எந்தவித அடிப்படை வசதிகளுமில்லாத முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இதேவேளை பெண் நோயியல் மகப்பேற்று வைத்திய நிபுணர் இன்மையால் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முதற் தடவையாக ஒன்பது பயிற்சி மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ள போதும், இவர்களுக்கான பயிற்சியும் கேள்விக்குறியாகியுள்ளது.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் தேவை கருதி வைத்திய நிபுணர்களை நியமிக்க மத்திய மாகாண அரசுகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென பல்வேறு தரப்பினரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.(2-315)

# 'சாராயப்பாவனையை இல்லாமல் செய்வோம்' பயனாளிகளுக்கான கருத்தமர்வும் கலந்துரையாடலும்

(பனிக்கன்குளம்)

"எங்களை ஏழையாக்கி ஆண்களை பாலியல் பல வீனமடையச் செய்யும் சாராயப்பாவனையை இல்லாமல் செய்வோம்" எனும் தொனிப்பொருளில் வவுனியா ஈஸ்வரிபுரம் கிராமத்தில் உள்ள சமுர்த்தி பயனாளிகளுக்கான கருத்தமர்வும், கலந்துரையாடலும் நேற்று முன்தினம் இடம்பெற்றது

இந் நிகழ்வில் வளவாளராக பங்கெடுத்த மதுபானம் மற்றும் போதைப் பொருள் நிலைய மாவட்ட இணைப்பாளர் அருளானந் கருத்து தெரிவிக்கையில்,

கிராமப்புறங்களில் உள்ள இளைஞர்கள் மத்தியில் சாராயப்பாவனை தொடர்பான எண்ணப்பாடு மாற வேண்டும். உண்மையிலே உழைக்கின்ற பணத்தை திருடுகின்ற சாராயக் கம்பனிகளின் வியாபாரத் தந்திரங்களுக்கு ஏமாறாத புத்திசாலித்தனமான இளைஞர்கள் உருவாக வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் சமுர்த்தி உத்தியோகத்தர் மதுரதீபன் மற்றும் சுமார் 150 இற்கு மேற்பட்ட சமுர்த்திப் பயனாளிகள் ஆர்வத்துடன் கிராமத்தில் மாற்றத்தை நிகழ்த்த தங்களின் ஒத்துழைப்பை வழங்குவோம் எனவும் கூறினர். (2-281)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## இலங்கையில் அகஸ்தியரும், சித்தமருத்துவமும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்



அகத்தியர் என்பவர் சப்த ரிஷிகளில் ஒருவராகவும் சித்தர்களில் முதன்மையானவராகவும் அறியப் பெறுகிறார். தமிழை சிவபெருமானிடம் இருந்து கற்றவருமாவார். இவரே அகத்தியம் எனும் முதல் தமிழிலக்கண நூலை எழுதியவர். அகத்திய முனிவர் தமிழுக்கான முனிவர் என்றும் சித்த மருத்துவமுறைகளை வழங்கிய முனிவர் என்றும் குறிப்பிடப்படுகிறார். இவரது பாடல்களில் பயின்று வந்துள்ள சொற்கள் இவரை பதினாறாம் நூற்றாண்டிற்கு பிற்பட்டவர் என்பதை தெரிவிக்கின்றன.

சித்தராய்விளங்கிய அகத்தியரைப் பற்றி அகத்தியர் காவியம் பன்னிரெண்டாயிரம் வாயிலாக அறிய முடிகிறது.

அகத்தியர் சித்த வைத்தியத்திற்குச் செய்த பணி சிறப்பானது. பல நோய்களுக்கும் மருத்துவ சந்தேகங்களுக்கும் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தெளிவாக விளக்கம் கொடுத்துள்ளார். அகத்தியர் பெயரில் வெளியாகியுள்ள சமரச நிலை ஞானம் எனும் நூலில் உடம்பில் உள்ள முக்கியமான நரம்பு முடிச்சுக்கள் பற்றிய விளக்கம் காணப்படுகின்றன. நாடி சாஸ்திரம் பற்றியும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அகத்தியர் பெயரில் வெளியான நூல்களின் எண்ணிக்கை தனிப்பட்டியலில் அடங்கும்.

இவ் அகத்தியர் திருகோணமலையில் வாழ்ந்ததற்கு சான்றாக அகஸ்தியர் ஸ்தாபன சிவன் ஆலயம் சான்றாக அமைகின்றது.

திருக்கரைசையம்பதி-

### அகத்திய மாமுனிவர்

திருகோணமலை மாவட்டத்தில் தல புராணங்களைக் கொண்டமைந்த இரண்டு சிவாலயங்களில் இதுவும் ஒன்றாகும். அதாவது திருக்கோணேஸ்வரத்தைப் போலவே திருக்கரைசையம் பதியும் புராதன வரலாற்றுத் தலமாகும். இவ்விரண்டுக்குமே தலபுராணங்கள் உள்ளன. திருக்கோணேஸ்வரத்திற்கு தட்சணகைலாய புராணம் போலவே திருக்கரைசையம்பதிக்கு திருக்கரைசைப்



புராணம் பெருமை சேர்க்கின்றது. இத் தலத்தினுடைய வரலாறு பற்றி திருக்கரைசைப் புராணம் பெருமை சேர்க்கின்றது. இத்தலத்தினுடைய வரலாறு பற்றி திருக்கரைசைப்புராணம் இவ்வாறு கூறுகின்றது.

வடகயிலையில் சிவபெருமானுக்கும் உமாதேவியாருக்கும் நடைபெறும் திருமணக்கோலத்தைக் காண்பதற்காக இருஞ்சுரர், முனிவர், சித்தர், இயக்கர், கந்தர்வர் முதலானோர்கூடிய போது வடதிசை தாழ்ந்து தென் திசை உயர்ந்து சமநிலை தளம்பியது. அச்சமயம் சிவபெருமான் உரைத்த வாக்கிற்கிணங்க குறுமுனியாகிய அகத்தியமாமுனிவர் பொதிகை சென்றார். பின் அங்கிருந்து கடல்கடந்து ஈழத்தை அடைந்து தென்கயிலைவாசன் கோணநாயகரை வழிபட்டார்.

சமனையங்கிரியில் (சிவனொளிபாதமலை) பிறந்து கோணையங்கிரியில் திருக்கோணேஸ்வரம்) தலைவைத்துக் கிடப்பது போல உள்ள மகாவலி கங்கையின் பெருமையை உணர்ந்து சிவனுடையஎண்ணப்படிகரைசைப் பதிக்குச் சென்றார். அங்கு இலிங்கதாபனம் செய்து அதற்கு சர்வதீர்த்தமுடையவர் என்று பெயருமிட்டு நவ தீர்த்தங் கணபதியையும் தாபித்து வழிபட்டு வந்தார். இவ்வாறு தாபித்த இலிங்கத்தினின்றும் தோன்றிய சிவபெருமான் உமாதேவியார் சமேதரராய் திருமணக் கோலத்தில் அகத்திய முனிவருக்கு கூறிய வாக்கிற்கிணங்க காட்சி கொடுத்தார். இவ்வாறு இப்புராணத்தின் சங்கை சுருக்கம் தாபன சுருக்கம் என்னும் பகுதிகளில் கூறப்பட்டுள்ளது.



### மன்னன் சிங்கபூதரனின் ஆலயப்பணி

அகத்திய முனிவருக்குப் பின்னர்மிகநீண்ட காலத்தின் பின்னர் இந்தியாவின் அயோத்தியிலிருந்து போரொன்றில் தோல்வியுற்ற சிங்கபூதரன் என்னும்பெயர்கொண்ட அரசன் சலகாமி என்னும் குதிரையின் உதவியுடன் கடலைக்கடந்து இலங் கைத் தீவின்கிழக்குக்கடற்கரையை அடைந்தார்.

(இது திருமங்கலாய்க்கு சில மைல்கள் தொலைவிலுள்ள இலங்கைத் துறையாக இருக்கலாம்) பின்னர் திருமங்கலாய் என்றவிடத்தில் இருந்து கொண்டு அரசாண்ட மன்னன் எழில்வேந்தன் உடைய மகள் திருமங்கை என்பவளை திருமணம் செய்து சிவாலயமும் அமைத்து இலங்காதலத்தை ஆட்சிபுரிந்தால் அத்தோடு அகத்திய முனிவரால் தாபனம் செய்யப்பட்ட சிவன் ஆலயத்தையும் புனரமைத்து சிறப்பாக பூசைகள் நடைபெற ஏற்பாடுகளையும் மேற்கொண்டான்.


இதன்பின்னரான காலங்களில் இத்தாபன சிவன் ஆலயம் மீண்டும் பாழ்பட்டுக் கிடந்ததாகவும் அதன் பின்னர் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு கோயில் அமைத்து பூசை வழிபாடுகள் இடம்பெற்றதாகவும் திருக்கரைசைப் புராணத்தின் பூசைச் சுருக்கம் என்னும் பகுதியில் கூறப்பட்டுள்ளது.


### அகத்தியதாபன புராதனங்கள்

இவ்வாறு பல காலங்கள் அகத்திய மாமுனிவர் இவ்விடத்திலிருந்து சிவவழிபாடியாற்றி ஆயகலைகள் பலவற்றையும் போதித்து பல தேச மாணவர்கள் இங்கு தங்கியிருந்து படித்த ஒரு குருகுலம் சார்ந்த பல்கலைக்கழகமாகவும் நாகரிகத்திற்கு சிறந்த மக்கள் கூட்டங்களைக் கொண்டதாகவும் இருந்த திருக்கரைசையம்பதி காலப் போக்கில் மகாவலி கங்கையின் பெருக்கெடுப்பினால் அழிந்து போயிருக்கலாம் என்று பெரியவர்கள் கூற்றுப்படி ஊகிக்கப்படுகின்றது. அதற்கு சான்றுகள் பகர்வன போல இவ் அகத்தியதாபன சுற்றாடலில் பழைமை வாய்ந்த கருங்கற் தூண்கள் பாவனைபலவற்றிற்கு பயன் பட்டது போன்ற தோற்றம் கொண்டகருங்கற்சிதைவுகள் என்பன காணப்படுகின்றன.

அத்தோடு இங்கு காணப்படும் வாசல் வட்டக்கற்கள், கோமுகை, முக்கூட்டுக்கல், பலிபீடம், வாயிற்படிக் கற்கள் பெரும் எண்ணிக்கையிலான கருங்கற்தூண்கள், அகத்தியரின்பாதச்சுவடுகள், பல சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த கருங்கள் பொழிவுகள் என்பன இதன் பழம் பெருமையைஎடுத்தியம்புகின்றன.

இன்று அகத்திய தாபன ஆலயத்தில் காணப்படுகின்ற சிவலிங்கம் அகத்திய மாமுனிவரால் தாபிக்கப்பட்டதாக கருதப்படுகின்றது. (இது 2014 இல் சமய சகிப்புத் தன்மையின்மை காரணமாக சிலரால் சேதமாக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது)





இங்கிருந்து சில மைல்கள் தொலைவிலேயே வெருகலம்பதி திருமங்கலாய் இலங்கைத்துறை, கொட்டியாரத் துறை, சேருவில, நீலாப் பளை மற்றும் மேன்காமம் என்பன அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவற்றுள் கொட்டியாரபுரத்து வன்னிமைகள் மேன்காமம் பகுதியில் வாழ்ந்து இங்கிருந்து கொட்டியாபுரப்பற்றை ஆட்சி செய்ததாக அக்காலத்தேய ஆவணங்கள் மூலம் அறிய முடிகின்றது. அகத்தியர் மூதூர் (முத்தூர்) பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று கருதப் படுவதலால் அவர் முத்தூர் அகத்தியர் என்று அழைக்கப்படுகின்றார். தேவசித்தருக்கும் கமலம் என்பவருக்கும் மார்கழி மாதம் ஆயிலிய நட்சத்திரம் மூன்றாம் பாதத்தில் வேளாள குலத்தில் முத்தூரில் பிறந்தார். இவரது மனைவி புலத்திய சித்தரின் சகோதரி லோபா முத்திரை ஆவார். இவரின் செயற்பாடுகள் நான்கு யுகங்களிலும், புது தலைமுறைகளாகவும் அறியப் படுவதால் அகத்தியர் என்பவர் ஒருவரா அல் லது பலரா என்பதில் உள்ள தெளிவின்மை இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

### அகத்திய தாபன ஆடி அமாவாசை தீர்த்தம்

முன்னர் இவ்வாலயம் சிறப்புடனிருந்த போது இங்கிருந்து ஆடி அமாவாசை தினத்தில் அம்பாள் சமேதராய் சிவபெருமான் மகாவலி கங்கைக்கரைக்கு எழுந்தருளுவது வழக்கம். இதே போல திருமங்க லாய் சிவன் கோயிலிலிருந்தும் ஆடியமாவாசை தினத்தில் தீர்த்தமாடச் செல்வது வழமையான நிகழ்வுகளாகும். ஆனால் இவ்விரு ஆலயங்களும் அழிவடைந்த பின்னர் கங்குவேலி சிவன் கோயிலிலிருந்து ஆடி அமாவாசை தினத்தில் அமிர்தபாஷினி அம்பாள்உடனுறைசந்திரசேகரப் பெருமான், அகத்தியதாபன சிவன்கோயிலுக்குச்சென்று அங்கு சிவலிங்க பூசை வழிபாடுக ளைத் தொடர்ந்து நவதீர்த்தக் கணபதிக்கும் பூசை கள் செய்த பின்னர் (அழிவடைந்த இவ்வாலயம் மீளவும் சிறியளவில் புதுப்பிக்கப்பட்டது. இச் சிவ லிங்கமே பின்னர் சேதமாக்கப்பட்டது) இங்கிருந்து 10 கி.மீ. தொலைவிலுள்ள அகத்திய மாமுனிவர் தீர்த்தமாடியதாகக் கருதப்படும் வவுணாவில் தீர்த்தக் கரையில் தீர்த்தமாடுதல் சம காலத்து வரலாறு.

மேலும் அகத்தியர் வனத்தில் நூற்றுக்கணக்கான மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்த மூலிகைகள் பரம்பிக்காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (தொடரும்)






நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மஹோற்சவ விஞ்ஞாபனத்தின் 5 ஆம் திருவிழா வெளிவீதி உலாக் காட்சி... (படங்கள்:- ஐ.சிவசாந்தன்)




## உய்தோங்க உடனிரு மயிலோனே

தந்தனை தமிழினை போற்றியுனை நாளுமெனை
சிந்துகவி புனைத்தென் புகழ்பாடித் துதிசெய்யெனவே
சந்தகமும் பாடுகிறேன் நல்லைச் சந்நிதியிலே
எந்தையே எனக்கருளப் பிந்தாது விரைந்துமே
வந்திடையா வல்வேலே மயிலின் மீதமர்ந்தே
முந்தைசூழ் வினைபிணைப் பாவமறுத் தாட்கொள்ளவே

செய்கருமம் சீர்விளங்க வளம் விளங்கி
உய்தோங்க உடனிரு மயிலோனே
வெய்மனமு டையாரின் தீண்டலைனை
தையாது காப்பிடு கந்தநாதா
கையாலாகாத தும்உண்டோ பொய்யாத
மெய்யழகன் முருகனுறை மனத்தவர்க்கே

அரியாலையூர்,
சிவ.சிவநேசன்.

## பச்சை மயிலேறி வருவான்

அருள் புரியும் அற்புதங்கள் நடைபெறுகின்ற
திருத்தலமாம் எங்கள் நல்லையம்பதி தனிலே
பக்தர்கள் தங்கள் இன்னல்களை
உன்னிடம் ஓடோடி இருகரங்கூப்பி உன்
சந்நிதியில் வந்து புலம்பி நிற்கின்றனரே
அவர்களின் இன்னல்களை போக்கி
விடிவான வாழ்வொன்றை தந்திட
பச்சை மயிலேறி வாருமய்யா எங்கள்
நல்லை அலங்காரக் கந்தனே...

சின்னமலர்,
சாவகச்சேரி.

## நல்லைக் குமரப் "பா"

அவ்வைப் பாட்டி அகந்தையினை
அடக்கி யாண்டு பலவாறாய்ச்
செவ்வை யாகக் கேள்விபல
தெளிந்தே கேட்டுத் தீந்தமிழில்
எவ்வா றெல்லாம் பாடவைத்தாய்
என்றும் இனிக்குந் தத்துவங்கள்
செவ்வா னுருவாய்த் திகழ்பவனே
தெரிந்தாள் நல்லைக் குமரப்பா!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்

## நல்லூர் ஆலயச் சூழலில்



வரலாற்று சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த மஹோற்சவம் நடைபெற்று வருகிறது. இந் நிலையில் ஆலய முன்றலில் மணலினால் அமைக்கப்பட்ட முருகன் ஆலயம் வரும் பக்தர்களுக்கு அருள்பாலிப் பதாகவுள்ளது. மணலினை கொண்டு பல்வேறு வடி வங்களில் முருகனின் திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது.

## கந்தபுராண எழுச்சி விழா

(யாழ்ப்பாணம்)

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் "கந்த புராண கலாசாரம் இந்த மண்ணின் அடையாளம்" என்ற தொனிப்பொருளில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் கந்தபுராண எழுச்சி அருள்நெறி விழா-2018 நிகழ்வுகளை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்திலும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்திலும் சிறப்புற முன்னெடுத்து வருகிறது.

அந்தவகையில், ஏழாம் நாள் நிகழ்வுகள் இன்று புதன்கிழமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இசை ஆசிரியை செல்வி. சிவயோக ராணி கதிரவேலு பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வும் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக் கலாமண்டபத்தில் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக் குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருமுன்னிலையில் இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி. ஹேமலோஜினி குமரன் தலைமையில் ஜப்பான் கக்சுயின் பல்கலைக்கழக ஓய்வு நிலைப் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்க, கோப்பாய் பிரதேச அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் தமிழ்ச்சொல்லருவி, இளஞ் சைவப் புலவர் ச.நவநீதனின் "ஆறிரு தடந்தோள் வாழ்க" எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும், வி.நித்தியரூபசர்மா, ந.மதுராங்கினி ஆகியோரின் குழு இசை சிறப்பு நிகழ்வாகவும் இடம்பெறும்.

உற்சவகாலச் சிறப்புச் சொற்பொழிவின்போது பத்து வினாக்கள் அடங்கிய வினாக்கொத்து அன்றைய நிகழ்வுச் சொற்பொழிவினை உள்ளடக்கியதாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டு, அன்றைய தினமே விடைத்தாள்கள் மாணவர்களிடமிருந்து பெறப்படும். முதல் இருபது நாட்களிலும் விடையளித்த மாணவர்களில் முன்னிலை பெறும் ஐந்து மாணவர்களுக்கு ஐந்து துவிச்சக்கரவண்டிகளும் ஏனைய மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படும் என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. (இ-7)

## 'வேலுண்டு வினையில்லை' நல்லூரில் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கந்தசுவாமிஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு கதிர் தொலைக்காட்சியின் ஏற்பாட்டில் நல்லூர் செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் தினமும் மாலை 4.30 மணியிலிருந்து ஆன்மீக நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று "வேலுண்டு வினையில்லை" எனும் தலைப்பில் பிரம்மஸ்ரீ கு.சரவண பவானந்தசர்மா சொற்பொழிவாற்றுவார். தொடர்ந்து பஜனை நிகழ்வுகள் இடம்பெறும். (இ

## தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கந்தசுவாமிகோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர்துர்க்கா தேவி மணிமண்டபத்தில் தினமும் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8.15 மணிவரை தெய்வீக இசையரங்கு இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று வயலின்- அம்பலவாணர் ஜெயராமன், மிருதங்கம்- க.நந்தகுமார், தபேலா- சதாவேல் மாறன், முகர்சிங்- ஜெ.சாரங்கன், கடம்- மு.சுலக்சன்.

இசைக்கச்சேரி

பாட்டு- சந்திரிக்கா சுஜிக்குமார், வயலின் அ.ஜெயராமன், மிருதங்கம்- நா.சிவசுந்தர சர்மா, கடம்- கு.ரவிசங்கர், முகர்சிங்- சி.செந்தூரன் ஆகியோர் வழங்குவர். (இ



கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற இவ்வாண்டுக்கான தேசிய மட்ட தமிழ் மொழித் தின வில்லுப்பாட்டு போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்கள் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளனர். யாழ்ப்பாணக் கல்லூரியின் வில்லுப்பாட்டு அணியினர் கடந்த 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் தேசிய மட்டப் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# பாரதம்

## கேரளாவில் வரலாறு காணாத மழை தேசிய இயற்கை பேரிடராக அறிவிப்பு



(டில்லி)

'கடவுளின் தேசம்' என்று அழைக்கப்படும் இயற்கை வளம் மிக்க கேரளா, கடந்த சில நாட்களாக இடைவிடாமல் பெய்த கனமழையால் சீர்குலைந்து காணப்படுகிறது.

தென்மேற்கு பருவ மழை இந்த ஆண்டு கேரளாவில் வரலாறு காணாத சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. மாநிலத்தில் உள்ள 14 மாவட்டங்களும் கனமழை, வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளன. தொடர்ந்து பெய்த மழையாலும், அணைகள் திறக்கப்பட்டதாலும் எங்கு பார்த்தாலும் வெள்ளக் காடாக காட்சி அளிக்கிறது.

ஏராளமான வீடுகள் நீரில் மூழ்கிவிட்டன. மழையின் காரணமாகவும், நிலச்சரிவு ஏற்பட்டதாலும் பல இடங்களில் வீடுகள் இடிந்து நாசமாகின. இதுவரை 17 ஆயிரம் வீடுகள் இடிந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. வெள்ளம் புகுந்ததால் விவசாய நிலங்களும் நாசமாகியுள்ளன.

மழை, வெள்ளத்தில் சிக்கி இதுவரை 274 பேர் பலியாகியுள்ளனர். ஏராளமான கால்நடைகளும் பலியாகி தேசிய பேரிடர் மீட்புப் படையினர், இராணுவத்தினர், கடலோர காவல் படையினர், தீயணைப்பு படையினர், தன்னார் வலர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்பது, பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவுப் பொருட்களை வழங்குவது என அவர்கள் முழுவீச்சில் பணியாற்றி வருகிறார்கள். மீட்புப் பணியில் இராணுவ ஹெலி கொப்டர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

வெள்ளம் சூழ்ந்ததாலும், வீடுகளில் தண்ணீர் புகுந்ததாலும் மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மாநிலம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ள 5,645 முகாம்களில் 7¼ இலட்சம் பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், கேரளாவில் மழை, வெள்ளத்தால் ஏற்பட்ட வரலாறு காணாத சேதத்தை தீவிர இயற்கை பேரிடராக மத்திய அரசு அறிவித்துள்ளது. மழை, வெள்ளம், நிலச்சரிவால் ஏற்பட்ட இயற்கை பேரழிவை கருத்தில் கொண்டு தீவிர இயற்கை பேரிடராக அறிவித்திருப்பதாக மத்திய உள்துறை அமைச்சகம் கூறியிருக்கிறது.

மேலும் பேரிடர் நிவாரண நிதி ஒன்று ஏற்படுத்தப்படும். இதில் மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்பு மூன்றுக்கு ஒன்று என்ற விகிதத்தில் இருக்கும். இந்த நிதியில் பற்றாக்குறை ஏற்படின் தேசிய பேரிடர் நிவாரண நிதி தொகுப்பில் இருந்து கூடுதல் நிதி வழங்கப்படும்.

அத்துடன் இந்த இயற்கை பேரழிவால் பாதிக்கப்பட்டவர்கள் ஏற்கனவே வாங்கிய கடனை திருப்பி செலுத்துவதிலும், புதிதாக கடன் வாங்குவதிலும் சலுகைகள் கிடைக்கும்.

மேலும் கேரளாவில் பெய்த மழை, வெள்ளச் சேதம் தீவிர இயற்கை பேரிடராக அறிவிக்கப்பட்டிருப்பதால், இந்தியாவின் எந்த மாநிலத்தையும் சேர்ந்த நாடாளுமன்ற மக்களவை மற்றும் மாநிலங்களவை எம்.பி.க்கள் தங்கள் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து அதிகபட்சமாக கேரளாவுக்கு ரூ.ஒரு கோடி வரை நிதி உதவி வழங்கலாம்.

மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கேரளாவுக்கு மத்திய அரசு ஏற்கனவே ரூ.600 கோடி நிதி உதவி வழங்கியிருக்கிறது. இப்போது மழை வெள்ள பாதிப்பை தீவிர இயற்கை பேரிடராக அறிவித்திருப்பதால், நிலைகுலைந்து போய் இருக்கும் அந்த மாநிலத்துக்கு கூடுதல் நிதியுதவி கிடைக்கும்.

எனவே, பல்வேறு தரப்பில் இருந்தும் வரும் நிதி மற்றும் பொருளுதவிகள் கேரள மக்களின் துயர் துடைக்க பெரிதும் உதவியாக இருக்கும் என்று கருதப்படுகிறது. (7)

## கேரளாவில் இயற்கைச் பலி எண்ணிக்கை 400



(கேரளா)

கேரளாவில் கடந்த ஒரு வார காலமாக நீடிக்கும் கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 400 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் பலர் காணாமல் போயுள்ள நிலையில், உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கலாமென அஞ்சப்படுகிறது.

வெள்ளத்தின் தாக்கம் தொடர்ந்தும் நீடித்து வருகின்ற நிலையில், அம் மாநிலத்திற்கான அவசர உதவிகள் கோரப்பட்டுள்ளன.

சுமார் 50 ஆண்டுகளுக்கு பின் கேரளாவை இவ்வாறான ஒரு காலநிலை தாக்கியுள்ளது.

இந்த அனர்த்தத்தில் சுமார் 1.2 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டு 5,645 முகாம்களில் தங்கியுள்ளனர்.

மழையின் தாக்கம் ஓரளவு குறைந்துள்ள போதும், வீதிகள் வெள்ளக் காடாக காட்சியளிக்கின்றன. அணைகள் நிரம்பி வழிகின்றன. இதனால்

## சுவர் இடிந்து வீழ்ந்ததில் 2 குழந்தைகள் உட்பட மூவர் பலி

(மத்திய பிரதேசம்)

மத்திய பிரதேச மாநிலம்- போபால், கம்லாபார்க் பகுதியில் வீடொன்றின் சுவர் இடிந்து வீழ்ந்ததில் ஒரு பெண் உட்பட இரு குழந்தைகள் உயிரிழந்துள்ளதுடன் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய் மற்றும் அவரது இரு குழந்தைகளுமே உயிரிழந்துள்ளதாகவும் விபத்தில் படுகாயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் இப்பகுதியில் தொடர்ச்சியாக பெய்யும் கனமழை காரணமாக வீட்டின் சுவர் நனைத்தமையாலேயே இத்தகைய சம்பவம் நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்



## ஊழல் வழக்கு விவகாரம்

## நவாஸ் ஷெரிப்-மகள் மரியம் வெளிநாடு செல்ல அனுமதி இல்லை

### இம்ரான்கான் அரசு அதிரடி நடவடிக்கை



(இஸ்லாமாபாத்)

நவாஸ் செரீப்-மகள் மரியம் பிணையில் வெளியே வந்து வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்வதை தடுக்க பாகிஸ்தானில் புதிதாக பதவி ஏற்றுள்ள இம்ரான் கான் அரசு தடை விதித்துள்ளது.

பனாமா ஊழல் வழக்கில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனையும், அவரது மகள் மரியத்துக்கு 7 ஆண்டுகள் தண்டனையும், மருமகன் முகமது சப்தாருக்கு ஒரு ஆண்டு சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. தற்போது இவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் இவர்கள் இருவரும் பிணையில் வெளியே வந்தால் அவர்கள் வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்வதை தடுக்க பாகிஸ்தானில் புதிதாக பதவி ஏற்றுள்ள இம்ரான்கான் அரசு தடை விதித்துள்ளது.

அதற்காக வெளிநாடு செல்ல தடை விதிக்கப்பட்டவர்களின் பட்டியலில் இருவரது பெயர்களையும் சேர்க்க முடிவு செய்யப்பட்டது.

மேலும் ஊழல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு வெளிநாடுகளில் தஞ்சம் அடைந்துள்ள நவாஸ் ஷெரீபின் மகன்மார்கள் ஹூசன், உசைன் மற்றும் முன்னாள் நிதி அமைச்சர் இஷாக்தர் ஆகியோரை தலைமறைவு குற்றவாளிகள் என அறிவிக்க முடிவு செய்யப்பட்டது.

அவர்களை பாகிஸ்தானுக்கு கொண்டு வருவதற்கான அறிவிப்பு வெளியிடவும் அமைச்சரவை முடிவு செய்துள்ளது. இம்ரான்கான் தலைமையிலான அமைச்சரவையின் முதல் கூட்டம் இஸ்லாமாபாத்தில் நேற்று நடந்தது. அதில் மேற்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டதாக தகவல் தொடர்பு அமைச்சர் பாவத் கான் தெரிவித்தார்.

இது தவிர பொருளாதார பிரச்சினைகள் மற்றும் அவற்றை சமாளிப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய சிக்கன நடவடிக்கைகள் குறித்தும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. (7)

# வெளிநாடு

## கக் கோரத்திற்கு
## 00ஐ எட்டியது



மக்கள் இயல்பு வாழ்க்கையை இழந்துள்ளனர்.

நூற்றிற்கு மேற்பட்ட மீட்புக் குழுவினர், படையினருடன் இணைந்து இரவு பகலாக மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

மக்க்ளின் வீடுகள் மற்றும் வியாபார நிலையங்களுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதால், பாரிய சொத்தழிவும் ஏற்பட்டுள்ளது. கட்டுமானங்களும் சேதமடைந்துள்ளன.

இதனால் மாநிலத்திற்கு இது ஒரு பேரிழப்பாக அமைந்துள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு, கேரளா வெள்ளம் தேசிய பேரிடர் அனர்த்தமாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)



றது. சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (7)

## வலுக்கும் பொருளாதார மோதல்

# துருக்கியில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் துப்பாக்கிச்சூடு

(அங்காரா)


அமெரிக்காவுக்கும் துருக்கிக்கும் இடையே தற்போது பொருளாதார மோதல் நடந்து வரும் நிலையில், அங்காராவில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் துப்பாக்கிச்சூடு நடந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவை சேர்ந்தவர் பாதிரியார், ஆண்ட்ரூ பரன்சன். இவர் துருக்கியில் வசித்துக்கொண்டு அங்கு ஒரு ஆலயத்தை நடத்தி வந்தார். இந்த நிலையில், அவர் அங்கு உள்ள குர்து இன போராளிகள் குழுவுடன் தொடர்புகள் வைத்து இருக்கிறார், உளவு வேலைகளில் ஈடுபடுகிறார் என்று கூறி, துருக்கி அரசு கைது செய்து 2 ஆண்டுகளாக சிறைக்காவலில் வைத்து உள்ளது.

ஆனால் அவரை விடுதலை செய்து, அமெரிக்காவுக்கு நாடு கடத்த வேண்டும் என்ற ட்ரம்ப் நிர்வாகத்தின் வேண்டுகோளை துருக்கி ஏற்க மறுத்து விட்டது. இதன் காரணமாக துருக்கியில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிற உருக்கு, அலுமினியம் ஆகியவற்றின்மீது 2 மடங்கு வரி விதித்து ட்ரம்ப் நிர்வாகம் அதிரடி நடவடிக்கை எடுத்தது.

இதன் காரணமாக துருக்கியின் நாணயத்தின் பெறுமதி வெகுவாக சரிந்து உள்ளது.

ஆனாலும் துருக்கி தளர்ந்துபோகாமல் அமெரிக்காவில் இருந்து இறக்குமதி



செய்கிற பொருட்கள் மீது கூடுதல் வரி விதிப்பை அறிவித்து உள்ளது. இதனால் துருக்கியின் நாணயப் பெறுமதி ஆட்டம் கண்டுள்ளது.

இந்நிலையில், அங்காராவில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் துப்பாக்கிச்சூடு நடந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. காரில் இருந்து ஒரு கும்பல் தூதரகத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டுள்ளதாகவும், ஜன்னல்கள் சேதமடைந்துள்ளதாகவும் போலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும், இந்த தாக்குதலில் உயிர்ச்சேதம் இல்லை. பக்ரீத் பண்டிகைக்காக தூதரகத்திற்கு ஒருவாரம் விடுமுறை விடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# இத்தாலியில் கனமழை
## சுற்றுலாப்பயணிகள் 10பேர் பலி

(ரோம்).

கனமழை காரணமாக இத்தாலி நாட்டில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கில் சிக்கி 10 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளதாகவும், மேலும் பலரை காணவில்லை எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

இத்தாலி நாட்டின் கேலாப்ரியா மாகாணத்தில் பொலினோ தேசியப்பூங்கா அமைந்துள்ளது. இந்தப் பூங்காவின் ஒருபகுதியாக ராக்னெல்லோ எனும் ஓடை உள்ளது. மலை இடுக்குளில் மிகவும் குறுகலாக



சுமார் ஒரு கி.மீ அழத்தில் பயணிக்கக்கூடிய இந்த நீர் ஓடையை பார்வையிட ஏராளமான சுற்றுலாப் பயணிகள் பூங்காவிற்கு வருகை தருகின்றனர்.

இந்நிலையில், இந்த பகுதியில் பெய்த கனமழை காரணமாக இந்த ஓடைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்து திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால்இந்த ஓடையை சுற்றி பார்க்க சென்ற சுற்றுலாப் பயணிகள் 10 பேர் வெள்ளத்தில் சிக்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

மேலும், 18 பேர் மீட்புக் குழுவினரால் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். அவர்களில் 6 பேர் படுகாயம் அடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இத்தாலியில், கடந்த வாரம் பாலம் ஒன்று இடிந்து விபத்துக்குள்ளானதில் 45 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# தலிபான்களால் சிறைபிடிக்கப்பட்ட 149பேர் பாதுகாப்புப்படையினரால் மீட்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் ஜனாதிபதி அறிவித்த போர்நிறுத்தத்துக்கு இடையில் தலிபான் பயங்கரவாதிகளால் நேற்று முன்தினம் கடத்தப்பட்டவர்களில் 149 பேரை பாதுகாப்புப் படையினர் மீட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் அரசு படைக்கும், தலிபான் பயங்கரவாதிகளுக்கும் இடையே சுமார் 17 ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது.

நாட்டின் பல பகுதிகளை பிடித்து வைத்துள்ள தலிபான்கள் கஸ்னி நகரை கைப்பற்றுவதற்காக கடந்த 15 நாட்களாக ஆவேசமாக போரிட்டு வருகின்றனர். இந்த நகரம் அவர்கள் கைகளில் சிக்காமல் இருப்பதற்காக அரசுப் படையினரும் தீவிரமான எதிர்த் தாக்குதல்களில் ஈடுபட்ட னர்.

இருதரப்பு மோதல்கள் கடந்த புதன்கிழமை முடிவுக்கு வந்துள்ள நிலையில், பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு மீண்டும் ஒரு இடைக்கால போர்நிறுத்தத்துக்கு ஜனாதிபதி அஷ்ரப் கனி நேற்று முன்தினம் அழைப்பு விடுத்தார்.

இன்றிலிருந்து (20ஆம் திகதி) முஹம்மது நபியின் பிறந்தநாளான மீலாதுன் நபி விழா (நவம்பர் மாதம் 21ஆம் திகதி) வரை இந்த போர்நிறுத்தம் அமுலில் இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.



இந்நிலையில், அந்நாட்டின் குன்டுஸ் மாகாணத்துக்கு உட்பட்ட கான் அபாட் மாவட்டம் வழியாக நேற்று முன்தினம் காலை சென்ற மூன்று பேருந்துகளை துப்பாக்கி முனையில் தலிபான் பயங்கரவாதிகள் வழிமறித்து மடக்கினர். அவற்றில் வந்த பயணிகள் அனைவரையும் கீழே இறக்கி சுமார் 170 பேரை கடத்திச் சென்றனர்.

பிணைக் கைதிகளாக சிறைபிடிக்கப்பட்டவர்கள் எங்கே கடத்திச் செல்லப்பட்டனர்? என்பது தெரியாத நிலையில் அவர்களை மீட்க குன்டுஸ் மாகாணம் முழுவதும் பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

இந்த வேட்டையில்பிணைக் கைதிகள் வைக்கப்பட்டிருந்த இடத்தை கண்டுபிடித்த பாதுகாப்பு படையினர் தலிபான்களின் கடுமையான துப்பாக்கிச் சூட்டை எதிர்கொண்டனர். பாதுகாப்பு படையினர் எதிர் தாக்குதலில் 7 தலிபான்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து 149 பேர் விடுவிக்கப்பட்டதாகவும், மீதமுள்ளவர்களை மீட்பதற்காக அங்கு தொடர்ந்து துப்பாக்கிச் சமர் நடைபெற்று வருவதாகவும் உள்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (7)



# கீத் நொயர் கடத்தல்! மகிந்தவின் வாக்குமூலம் நீதிமன்றில் சமர்ப்பிப்பு



(கொழும்பு)

ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம், பெறப்பட்ட வாக்குமூலம், கல்கிஸை நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டது.

குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் மகிந்த ராஜபக்ஷவிடம் கடந்த வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் வைத்து மூன்று மணி நேரம் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இந்த விசாரணைகளின் போது மகிந்த ராஜபக்ஷ அளித்த வாக்குமூலமே கல்கிஸை நீதவான் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதேவேளை, இந்த வழக்கில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகரவை எதிர்வரும் ஓகஸ்ட் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கவும் கல்கிஸை மேலதிக நீதவான் உத்தரவிட்டார்.

அடுத்த தவணையின் போது இவருக்கு பிணை வழங்குவது குறித்து முடிவு செய்யப்படும் என்றும் நீதவான் தெரிவித்துள்ளார். (இ-7)

# நள்ளிரவில் கொழும்புக்கு வந்தார் ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர்



(கொழும்பு)

ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் இட்சுனோரி ஒனோடெரா நேற்று முன்தினம் இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார். அவரை பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளும், ஜப்பானிய தூதரக அதிகாரிகளும் வரவேற்றனர்.

மூன்று நாட்கள் இலங்கையில் தங்கியிருக்கவுள்ள ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன உள்ளிட்டவர்களையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருப்பது இதுவே முதல்முறையாகும்.

இவர் இந்தப் பயணத்தின் போது, சீன நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கும் செல்லவுள்ளார்.

அத்துடன் கொழும்பு, திருகோணமலை துறைமுகங்களையும் பார்வையிடவுள்ளார். (இ-7)

# திருமலை துறைமுகத்தில் ஜப்பான் நாசகாரி





(திருமலை)

ஜப்பானியக் கடற்படையின் "இகாசுச்சி" (Ikazuchi) என்ற நாசகாரிப் போர்க்கப்பல் நல்லெண்ணப் பயணமாக நேற்று முன்தினம் திருகோணமலைத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

ஜப்பானிய நாசகாரிக் கப்பலுக்கு கடற்படையினர் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளித்தனர்.

இதையடுத்து, ஜப்பானிய நாசகாரிக் கப்பலின் கட்டளை அதிகாரியான கப்டன் யோகோ அசுமா, கடற்படையின் கிழக்குப் பிராந்திய கட்டளை அதிகாரிகளைச் சந்தித்து இருதரப்பு உறவுகள் மற்றும் பயிற்சிகள் குறித்து கலந்துரையாடினார்.

மூன்று நாட்கள் திருகோணமலைத் துறைமுகத்தில் தரித்து நிற்கவுள்ள ஜப்பானிய நாசகாரியில் உள்ள மாலுமிகள், இலங்கை கடற்படையினர் ஏற்பாடு செய்யும் நிகழ்வுகளிலும் பங்கேற்கவுள்ளனர். (இ-7)

# கொழும்பு மாநகர சபை உறுப்பினரை கொலைசெய்ய உளவு பார்த்தவர் கைது

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபை உறுப்பினர் கிருபானந்தனை கொலை செய்வதற்கு உளவு பார்த்ததாகக் கூறப்படும் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த நபரை நேற்று முன்தினம் புளுமென்டால் பகுதியில் வைத்து கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த நபரிடம் மேலதிக விசாரணைகளை புளுமென்டால் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஆஸியில் கூட்டுப்படை பயிற்சியில் இலங்கையும்

(சிட்னி)

அவுஸ்திரேலியக் கடற்படையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள கூட்டு கடற்படைப் பயிற்சியில் இலங்கைக் கடற்படையும் பங்கேற்கவுள்ளது.

அவுஸ்திரேலியாவின் டார்வின் துறைமுகத்துக்கு அப்பால் ககாடு (KAKADU) என்ற பெயரிலான 14 ஆவது கூட்டு கடற்பயிற்சியிலேயே இலங்கை கலந்து கொள்ளவுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் 30 ஆம் திகதி முதல் ஆரம்பமாகும் இந்தக் கூட்டுப் பயிற்சி, செப்டெம்பர் 15 ஆம் திகதி வரை இரண்டு வாரங்கள் நடைபெறவுள்ளன. இதில் 26 நாடுகளைச் சேர்ந்த 24 போர்க் கப்பல்கள், 21 விமானங்கள், 2000 படையினர் பங்கேற்கவுள்ளனர்.



இந்தவகையில் அவுஸ்திரேலியாவில் நடைபெறும் இக்கூட்டுப் பயிற்சியில் முதல் முறையாக சீனக் கடற்படை போர்க்கப்பல் ஒன்றும் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### சிறு விடயங்களுக்கெல்லாம் சூடாவதா?

பஸ்ஸுக்காகக் காத்திருந்து காத்திருந்து வாழ்க்கையே வெறுத்து விட்டது! என்கிறார்கள் சிலர். ஒருவர் வாழ்க்கையை வெறுக்க வேண்டுமானால் அதற்கு எவ்வளவு பலமான காரணங்களெல்லாம் தேவை தெரியுமா?

அற்ப விடயங்களுக்கெல்லாம் சூடாகிறவர்கள் வலிய முன் வந்து தொல்லைகளை வரவழைத்துக் கொள்பவர்களே!

சீப்பைக் காணோம் என்று வீட்டையே இரண்டாக்குகிறவர்கள்; துவட்டிக் கொள்ளும் துண்டு வைத்த இடத்தில் இல்லை என்பதற்காக ஏழு கட்டையில் கத்துவார்கள்; திரைப்படத்திற்குப் பத்து நிமிடம் தாமதமாகக் கிளம்புவதற்காகக் கணவனை ஒரு வாங்கு வாங்கும் வாழ்க்கை துணைவி ரயில்வே கேற் சாத்திக் கிடந்ததற்காகத் தங்களைத் தாங்களே நொந்து கொள்ளும் மனிதர்கள்; வானொலியில் அதிக விளம்பரங்கள் வந்தது என்பதற்காகப் பட்டென்று அதை நிறுத்தும் நபர்கள்– இப்படி இவர்களின் ரகத்தை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இந்த உலகம் நமக்காகப் படைக்கப்பட்டதல்ல. இந்த மாபெரும் உலகில் நாமும் ஒரு சிறிய புள்ளிகளே. மற்றவற்றின் இயக்கங்களுக்கு நம்மை நாம் மாற் றிக் கொண்டு, சரி செய்து கொண்டு போக வேண்டிய அவசியம் நமக்கிருக் கிறது. நம் வெண்கொற்றக் குடையின் கீழ் இவ்வுலகில் நம் ஆட்சி நடக்கவி ல்லை. எனவே, எல்லாமே என் விருப் பப்படி இயங்க வேண்டும் என்கிற எதிர்பார்ப்பே மிகத் தவறானது.


நல்ல மனநிலையோடு நம்மால் மற்றவர்களுக்கு மகிழ்ச்சி தரப்பட வேண்டும் என்கிற மனநிலையோடு வாழ்க்கைப் பார்வைகளை மாற்றிக் கொண்டால் சிறுசிறு விடயங்களுக்கெல்லாம் சூடாக வேண்டிய அவசியம் ஏற்படாது.

சிறுசிறு விடயங்களுக்கெல்லாம் சூடாகும் போது அதுவும் விடிகாலையில் அப்படிச் சில நடக்கும் போது அன்றைய பொழுதே இனிமையற்றதாகி விடுகிறது. அதாவது அடுத்து நடக்கும் ஒவ்வொரு சாதாரண சம்பவமும் சூட்டுக்குச் சூடு சேர்ப்பதுபோல்தான் நடக்கிறது. சிறு சிறு சூடுகள் ஒன்று சேர்ந்து நம் முகத்தைக் கோரமாக்குவதுடன், நம் குணத்தையும் சேர்த்து கெடுத்து விடுகின்றது. சரி சரி வாழ்க்கையில் அதெல்லாம் சகஜம். இதற்கெல்லாம் சூடானால் அது கட்டுப்படியாகாத விடயம் என்கிற யதார்த்த மனநிலைக்கு நாம் வந்தால் ஒவ்வொரு தினமும் கணப்பொழுதாக நகரும்.

இந்த மனநிலை இல்லாதவர்க ளுக்கு ஒவ்வொரு தினமும் ஒரு யுகம் தான்!

லேனா தமிழ்வாணன்

# ஹஜ் என்ற ஆட்டம் காணா அத்திபாரம்



இஸ்லாத்தின் ஐந்தாவது கடமையாக எமக்களிக்கப் பட்ட ஹஜ்ஜு எம்மை மனிதர்களின் புனிதர்களாகவும் மாசற்றவர்களாக்கி அன்று பிறந்த பாலகனைப் போன்றதோர் தோற்றத்தை தோற்றுவிக்கின்றது. இதன் காரணமாக எமது பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படுகின்றது என்பதுதான் உண்மை.

உலகிலே தீன் பரவ காரணமாக இருந்த இந்த "ஹஜ் கடமை"யை நிறைவேற்றும் முகமாக எமது சகோதரர்கள் அதிகரித்துச் செல்வது அவர்களின் ஆவலை தெரியப்படுத்துகின்றது. எல்லோருக்கும் இப் பாக்கியம் கிடைத்திட வல்லவனாம் அல்லாஹ்த ஆலாவிடம் கையேந்தி துஆச் செய்வோம் நாம் அனைவரும்.

அல்லாஹ்வின் ரஹ்மத்துக்களையும் பரக்கத்துக்களையும் ஹிதாயத்துக்களையும் பெறும் நோக்கில் செல்லும் ஹாஜிமார்கள் நிச்சயம் ஹஜ்ரத் இப்ராஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அனைத்து மக்களையும் கஃபாவிற்கு வருமாறு விடுத்த அழைப்பை மறந்து விடமாட்டார்கள். அத்தோடு அந்த பைதுல்லாஹ்வுக்காக அவர் செய்த தியாகங்களையும் அதன் நோக்கங்களையும் நாம் அறிந்து கொள் ளும் போது அவருக்கு இறைவனிடம் இருந்து கஃபாவை கட்டும்படி அழைப்பு வந்த போது, தனது அருமை மனைவி காஜரா அம்மையாரையும் இஸ்மாயில் அலை ஹிஸ்ஸலாம் என்ற பாச ம்ழலை குழந்தையும் தன்னந்தனியாக யாருமற்ற பாலைவனத்திலே விட்டுச் சென்று விட்டார்கள்.


மனைவியும் குழந்தையும் அங்கிருந்த போது குழந்தைக்கு பசி, தாகம் எடுத்து குழந்தை அலறத்தொடங்கியது.

என்ன செய்வது ஏது செய்வது என்று எதுவுமே புரியாத நிலையிலே ஹாஜரா அம்மையார் அங்கும் இங்கும் அலைந்து நீர் தேடினார். எங்கும் இல்லை. கடைசியில் குழந்தையிடம் வந்த போது குழந்தை காலால் உதைத்து உதைத்து அலறிய இடத்திலிருந்து நீர் பொங்கி வருவதை கண்டு அதிர்ச்சியும் ஆனந்தமும் அடைந்தவராக "ஸம்ஸம் யா முப்பாரக்" என்றார்கள்.

இதன் காரணமாகத் தான் இன்று ஹாஜரா அம்மையார் இங்கும் அங்கும் ஓடிய இட மான சபாவும் மர்வாவும் தொங்கோட்டம் அதாவது ஸஈ செய்யும் இடமாக வரலா ற்றில் இடம் பிடித்து ஹாஜிகளுக்கு அதை நிறைவேற்றும் பாக்கியம் கிடைத்துள்ளது. இதே போலத்தான் ஸம் ஸமே நில் என்ற அந்தக் கூற்று இன்று ஸம் ஸம் ஊற்றாக பரிணமித்து எண்ணற்ற மக்களின் உள்ளங்களை குளிர்வித்து நோய் நிவாரணியான நீராக பரிணமித்துக் கொண்டிருக்கின்றது. அனைவருக்கும் அதை அருந்தும் பாக்கியத்தை அல்லாஹ் கொடுக்க வேண்டும். அல் ஹம்து லில்லாஹ் எண்ணற்ற தியாகங்களால் உருவுற்ற ஹஜ்ஜின் மகிமைகள் சரித்திரங்கள் பல படைக்கும் சம்பவங்களால் நிரம்பி வழிகின்றது. இப்ராஹிம் அபகி வஸல்லம் இன்று உலக மக்கள் அனைவரையும் ஹஜ் செய்யும் பாக்கியத்தை கொடுத்து உலகமக்கள் அனைவரையும் ஒன்று சேர்த்துள்ளது. எம் மார்க்க விழுமியத்தின் ஆட்டம் காணாத அத்திபாரத்தை உலகுக்கு எடுத்தோதுகின்றது. அனைவருக்கும் ஹஜ்ப்பெருநாள் நல் வாழ்த்துக்கள்.

அல்ஹாஜ் மௌலவி ஏ.எம்.ஏ. அஸீஸ்(காஸிமி)
சிவலை பள்ளி முஹ்தீன்கைக்கியா
பேஷ்இமாம் காதி அபூபக்கர் வீதி, யாழ்ப்பாணம்.

# துல் ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்களின் சிறப்பும் தியாகத் திருநாளும்



புகழனைத்தும் புகழுக்குரிய அல்லாஹு்த்த ஆலா ஒருவனுக்கே உரியது. அல்ஹம்துலில்லாஹ் ஸலாத் எனும் கருணையும் ஸலாம் எனும் ஈடேற்றமும் எமது உயிரிலும் மேலான அல்லாஹு்த்தா ஆலாவின் தூதர் முஹம்மத் (ஸல்லல்லாஹு் அலைஹி வஸல்லம்) அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தினர், தோழர்கள், அவர்கள் சொன்ன சொல்லை நடந்த வழியைப் பின்பற்றும் அல்லாஹ்வின் நல்லடியார்கள் அனைவர் மீதும் மறுமை நாள் வரை உண்டாவதாக.

வானங்களையும் பூமியையும் படைத்த நாள் முதல் அல்லாஹு்த்த ஆலாவின் பதிவேட்டில் மாதங்களின் எண்ணிக்கை பன்னிரெண்டாகும். அவற்றில் நான்கு மாதங்கள் புனிதமானவையாகும். அவற்றில் ஒன்றுதான் துல்ஹஜ் மாதமாகும். இப்புனித மாதங்களில்போர்செய்வது, வீணான பாவமான காரியங்களில் ஈடுபடுவது, சண்டை சச்சரவுகள் புரிவதை தவிர்க்கும்படி பணிக்கிறது இஸ்லாம்

சகல துறைகளிலும் முன்மாதிரியான நபி(ஸல்லல்லாஹு் அலைஹி வஸல்லம்) அவர்கள் துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்களின் சிறப்பைப் பற்றி பின்வருமாறு கூறியுள்ளார். ஒருமுறை நபி (ஸல்லல்லாஹு் அலைஹி வஸல்லம்) அவர்கள் தன் ஸஹாபாத் தோழர்களோடு உரையாடிய வேளை தோழர்களே! இந்த துல்ஹஜ்மாதத்தின் முதல் பத்து நாட்களில் செய்யும் அமல்களை நேசிப்பது போல் அல்லாஹு்த்த ஆலா வேறு எந்த அமல்களையும் நேசிப்பது கிடையாது என்று கூறியவுடன், யாரஸூலுல்லாஹ் ஜிஹாதை விடவும் அல்லாஹ் இந்த நாளை விரும்புகிறானா? என்றதும் ஆம் என்று கூறிவிட்டு என்றாலும் ஜிஹாதில் தனது உயிரையும் தனது உடைமைகளையும் அர்ப்பணித்தவர்களைத் தவிர என்று கூறினார்கள்.

மேலும் துல்ஹஜ் மாதத்தில் அனுஷ்டிக்கப்படுகின்ற ஹஜ் கடமை மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றது. ஹஜ் கடமைக்குப் பரிசாக அல்லாஹ் சுவர்க்கத்தை வழங்குவதாக வாக்களித்துள்ளான். சர்வதேச நாடுகளிலிருந்து அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக ஹஜ்ஜு்க்கு வருகை தந்த ஹாஜிகள் அனைவரும் துல்ஹஜ் ஒன்பதாம் நாள் ஒன்று கூடும் நாள் அரபா நாள். வெறுமனே வெட்ட வெளியான பாலைவன பரந்த நிலப்பரப்பே அரபா மைதானம் துல்ஹஜ் ஒன்பதில் அல்லாஹ் என்றும் இல்லாதவாறு அம்மைதானத்தை மாற்றியமைத்து அங்கு கூடும் ஹாஜிகளுக்கு சிறப்பையும் நன்மைகளையும் அளிப்பதுடன் மறுமையில் மஹ்ஷர் மைதானத்தையும் அது நினைவு கூருவதையும் அமைகின்றது.

துல்ஹஜ் பத்தாம் நாள் ஹஜ்ஜு்ப் பெருநாளாகும். அது தியாகத்தை உணர்த்தி நிற்கின்ற தியாகத் திருநாளாகும். சிறப்பிற்கும் மேன்மைக்கும் உரிய நாளாகும். அந்நாளில் பெருநாள் தொழுகையை முடித்த பின் அல்லாஹு்விற்காக பிராணிகளை அறிந்து ஏழைகள், அநாதைகள், குடும்பத்தினர்களுக்கு கொடுத்து உழ்கியா கடமையை நிறைவேற்றுவார்கள். அத்தோடு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவர்களினதும் வீடுகளுக்குச் சென்று ஒற்றுமையுடன் அன்பைப் பகிர்ந்து சிறப்பாக அன்றைய தினத்தை கழிப்பார்கள்.

மௌலவி அல்ஹாபிழ்.ஏ.எம்.ரழீம் (மக்கி)
பிரதம கதீப்-செம்மா தெரு முஹியித்தீன் ஜும்மாப் பள்ளி,பெரிய கடை, யாழ்ப் பாணம்.

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1490

## கண்ணதாஸ்



ஒருவரிடம் நமக்கான உரிமைகள் அதிகரிக்கும் போதுதான் அவர்களை விட்டுப் பிரிவதற்கான சந்தர்ப்பங்களும் அதிகரிக்கின்றன...!

## கமலன்

மகன்: எனக்கு பேஸ்புக்கில 15 பேக் ஐடி இருக்கு
அப்பா: சோ வட்???



மகன்: நீங்க சண்டேக்கு பார்ட்டிக்கு கூப்பிட்ட ராணி என்கிற பேக் ஐடி என்னோடதுதான்

## கண்ணபிரான்

அரபு நாட்டு வாசனைத் திரவியங்கள் தோற்றுப் போகும். மழைத்தூறலின் போது எம் மண்ணின் வாசனையின் முன்



## கஸ்தூரி

நீங்கள் சாப்பிடும் உணவில் உங்கள் பெயர் உள்ளதாஎன்று தெரியவில்லை.. ஆனால் நீங்கள் வீணாக்கும் உணவில் அடுத்தவர் பசி உள்ளது.
" உணவை வீணாக்காதீர்கள்"



## கமலி

விட்டுக் கொடுப்பதும் மன்னிப்பதும் தான் வாழ்க்கை... ஆனால்



வாழ்க்கையின் போராட்டமே யார் விட்டுக்கொடுப்பது யார் மன்னிப்பது என்பது தான்

## கங்கா

இருப்பவன் விலையுயர்ந்த உணவுக்கு ஆசைப்படுகின்றான்



இல்லாதவன் ஒருவேளை உணவுக்குக்கூட கஷ்டப்படுகிறான்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இனப் பிரச்சினை தீர்வுக்கு மனந்திறக்க வேண்டும்

## அனைவரிடமும் கோருகிறார் ஜெஹான்



(கொழும்பு)

நாட்டில் காணப்படுகின்ற அனைத்துப் பிரச்சினைகளுக்கும் முடிவு கட்டுவதற்கு அனைத்துச் சமூகத்தினரும் மனந்திறக்க வேண்டும் என தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நாம் மனந்திறந்தால், அதன் மூலம் இயல்பாகவே அறிவு திறக்கும்.

எனவே அந்த அறிவைக் கொண்டு ஆக்கபூர்வமான முறையில் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வைக் கண்டுவிட முடியும்.

வரலாற்று கதைகளில் தமிழர்கள் மிகவும் குரூரமானவர்களாக சித்திரிக்கப்பட்டுள்ளனர். சிறுவயதில் இவ்வாறான கதைகளை நான் வாசிக்கும்போது, எனது தாயார் மிகவும் அன்பாகவும் ஆதரவாகவும் இவற்றை நம்ப வேண்டாம் எனக்கூறி. என்னை அரவணைத்து வழிகாட்டியிருக்கிறார்.

அதிலிருந்து ஒரு இனத்தவரை நாம்வெறுக்கக் கூடாது என்பது எனது வாழ்க்கைப் பாடமாக அமைந்திருந்தது. எனவே. இத்தகைய சிந்தனைப் போக்குகளில் மாற்றங்களைக் கொண்டு வந்து அனைவரும் மனந்திறந்து பேச வேண்டும். புனைவுகளை அன்றி உண்மைகளை உரத்துக் கூற வேண்டும்" எனத் தெரிவித்தார். (இ-7)

# மட்பாண்ட தொழிலாளர்கள் அரசை எதிர்த்து போராட்டம்

(குருநாகல்)

குருநாகல்- வாரியபொல, கல்வெல பகுதியில் மட்பாண்ட தொழிலாளர்கள், அரசாங்கத்துக்கு எதிராக பாரிய போராட்டமொன்றை நேற்று முன்தினம் திங்கட்கிழமை முன்னெடுத்தனர்.

குறித்த போராட்டத்தில் மூன்று கிராமங்களைச் சேர்ந்து மட்பாண்ட தொழிலாளர்கள் கலந்துகொண்டனர்.


இதன்போது போராட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் தெரிவித்துள்ளதாவது, "நாங்கள் கைத்தொழிலின் ஊடாகவே எமது வாழ்வாதாரத்தை கொண்டு நடத்துகின்றோம்.

இருப்பினும் தொடர்ச்சியாக கைத்தொழிலை கொண்டு நடத்துவதற்கு போதிய மூலதனம் எம்மிடம் இல்லை. இதனால் எமது தொழிலை சிறந்த முறையில் கொண்டு நடத்த முடியாத நிலைமை உருவாகியுள்ளது.

இந்நிலையில் எமது பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வை முன்வைக்காதமையினால் குறித்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துளோம்" என போராட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டத்தின்கீழ், கோப்பாய் கிராமத்திலிருந்து விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் 7 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும், காலணிகளும் வழங்கப்பட்டன.





அச்செழு இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு அச்செழு வளர்மதி விளையாட்டுக்கழக மைதா ணம் சிரமதானம் மூலம் துப்புரவு செயயப்பட்டது. இச்சிரமதானப் பணியானது அச்செழு இளைஞர் கழகத் தலைவர் ஈ.துசந்தன் தலைமையில் இடம் பெற்றது.

இச்சிரமதானப்பணியில் கோப்பாய் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் ர.பகீரதன் கலந்து கொண்டு சிரமதானப் பணியினை ஆரம்பித்து வைத்தார். இச்சிரமதானப் பணியில் அச்செழு இளைஞர் கழக உறுப்பினர்கள் மற்றும் வளர்மதி விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(படங்கள்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)


# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## பிறப்பு எண் 4 விதி எண் 4

முழு ராகு ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் பண்பட்ட மனிதர்களாக இருப்பார்கள். தன்னை நம்பியவர்கள் யாராக இருந்தாலும் காக்கும் அரணாக விளங்குவார்கள். பணத்தைவிட அனுபவத்தையே அதிகம் சம்பாதிப்பார்கள்.

இளமையிலேயே ஞான தீர்க்கம் பெற்றவர்கள். நாட்டின் பல முக்கிய பொறுப்புகளில் இடம் பிடிப்பார்கள். கலைகளின் மூலம் பெரும் பணம் சம்பாதிப்பார்கள். சினிமாத்துறை இவர்களை பிரபலமாக்கும். அரசியலில் ஈடுபட்டு புரட்சிகரமாகச் செயற்படுவார்கள். எழுத்தும் பேச்சும் மக்களைத் திசை திருப்பும். உலகையே உலுக்கக்கூடிய அளவுக்குப் பேச்சுத் திறமை இருக்கும். கடின உழைப்பாளிகள். வசீகரமான குரல் உடையவர்கள். பார்ப்பதற்கு உயரமாகவும் கம்பீரமாகவும் காட்சியளிப்பார்கள். இவர்களுக்கு நரம்பு சக்தி அதிகம். இயற்கைக் காட்சிகள், மலைப் பிரதேசங்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களைச் சுற்றிப் பார்ப்பதில் ஆர்வமுடையவர்கள். இளம் வயதிலேயே வாழ்க்கையில் பலவிதமான அனுபவங்களைப் பெற்று விடுவார்கள். எதையும் தீவிரமாகவே ஆராய முற்படுவார்கள். கதை, காவியம், ஓவியம், ஆன்மீகம், இலக்கியம் இவர்கள் மனதைப் பெரிதும் கவர்ந்திழுக்கும். ஆசார அனுஷ்டானங்களுடன் பிரார்த்தனை செய்வார்கள். உலக விடயங்கள் எல்லாவற்றையும் அறிந்து வைத்திருப்பார்கள். தனக்காக உழைப்பதைவிட பிறருக்காக உழைத்து மற்றவர்களை உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்வார்கள். மற்றவர்களால் நிந்திக்கப்படுவார்கள். தனக்கென ஒரு காரியத்திலும் முழுமையாக, அக்கறையுடன் ஈடுபட மாட்டார்கள். பொதுக் காரியத்தைச் சிரத்தையுடன் மனம் விரும்பிச் செய்வார்கள். முழுநேரமும் பொதுசனத்திற்காக உழைப்பார்கள். கையில் பணம் உள்ளவரை திட்டமிட மாட்டார்கள். பணம் தீர்ந்த பின்னர் புதுப் புதுத் திட்டங்கள் உருவாகும்.

ஆன்மீகத்தில் பற்றுதல் உண்டாகும். நண்பர்களால் மிகச்சிறந்த பதவிகள் கிடைக்கும். புகழில் ஆசையிருக்காது. எப்போதும் மகிழ்ச்சியுடன் வாழவே ஆசைப்படும் இவர்கள் எல்லா சுகபோகத்தையும் அனுபவிக்க ஆசைப்படுவார்கள். உணவு விடயத்தில் ஜாக்கிரதை மிக்கவராக நடந்து கொள்வார்கள். சாப்பாடு, சிற்றுண்டி, மசாலா உணவு வகைகளைத் தீவிரமாக பிரியத்துடன் உண்பார்கள். உடலில் நோய் இல்லையென்றாலும் மருத்துவ ஆலோசனைகளை மேற்கொண்டு நீண்ட நாட்கள் உயிர்வாழ வேண்டி மருந்துகளைத் தேடி அலைவார்கள். முகம் பூரிப்பாக இருக்க, உடம்பு தெம்பாக இருக்க மருந்துகளை உண்பார்கள். மனநோய் இவர்களை வெகுவாகப் பாதிக்கும்.




பிறருடைய கடுஞ் சொற்கள் இவர்களை வெகுவாகப் பாதிக்கும். சூடு சொரணை அதிகம் இருக்கும். சீக்கிரம் மனம் நொந்து போவார்கள். தயாள் குணமிருக்கும். மிகவும் தைரிய சாலிகள். எளிதில் உணர்ச்சி வசப்பட்டுப் பேசுவார்கள். பலருடைய துன்பங்களுக்குத் தன்னால் ஆன உதவிகளைச் செய்து தீர்வு காண்பார்கள். தன்னையறியாமலேயே பிரமிக்கத் தக்க பேச்சுக்களைப் பேசுவார்கள். பணம் சம்பாதிப்பது கடினம் என்றாலும் நண்பர்களை எளிதில் சம்பாதித்து விடுவார்கள். சம்பாதித்த பணத்தை நாகரிகமாக செலவு செய்வார்கள். தன்னமம்பிக்கைத் துணிச்சல் அதிகம் உடையவர்கள். நட்பிற்கும் பாசத்திற்கும் கட்டுப்பட்டவர்கள். நகைச்சுவை உணர்ச்சி மிக்கவர்கள். எதார்த்தவாதிகள். புன்னகை கலந்த முகமிருக்கும். தெளிவான சுய சிந்தனையுடன் இயங்குவார்கள். தன்னை நம்பி வந்தவருக்கு உதவிகள் செய்வார்கள். தெய்வத்தின் மீது தனிப்பட்ட பக்தியிருக்கும். பிறருக்கு ஆலோசனை கூறுவதில் புகழடைவார்கள். தாய்நாட்டுப்பற்று அதிகமிருக்கும். திடீர் திடீரென்று வெளியூர், வெளிநாட்டுப் பயணம் செய்வார்கள். தனது குணமறிந்த வாழ்க்கைத் துணை அமையும். தன்னுடைய சமூக நலனுக்காகப் பெரிதும் உழைப்பார்கள். உயர்ந்த பண்புடையவர்கள். பேரம் பேசுவதில் வல்லவர்கள். சிம்மக்குரலில் பேசுவார்கள். உலகையே மாற்றும் உரத்த குரலுடையவர்கள். அதிர்ஷ்டக் குறிப்புக்களை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

அதிர்ஷ்ட திகதிகள்
1, 10, 19, 28, 6, 15, 24

துரதிர்ஷ்ட திகதிகள்
8, 17, 26

அதிர்ஷ்ட நிறங்கள்
வெளிர் நீலம், மஞ்சள், பொன்னிறம்

துரதிர்ஷ்ட நிறங்கள்
கறுப்பு, சிவப்பு, இருண்ட நிறங்கள்.

அதிர்ஷ்ட இரத்தினங்கள்
கோமேதகம், நீலக்கல், அக்கோமரின், ஓபல்


(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

24



புராதன சிவாலயமான திருக்கேதீ ஸ்வரம்

அதனால் தொல்லியற் சான்றுகளைப் பெருமளவு பெற முடியாத ஒரு நிலை அங்கு காணப்படுகின்றது. ஆனால் மாதோட்டத்தில் இன்றுவரை புகழுடன் விளங்கும் புராதன சிவாலயமான திருக்கேதீஸ்வரம் கி.பி.ஏழாம் நூற்றாண்டில் திருஞானசம்பந்தரினால் தேவாரத் திருப்பதிகம் பாடப்பட்ட மிகத் தொன்மையான திருத்தலமாகும். அவ்வாறாயின், அக்கோவில் கி.பி ஏழாம் நூற்றாண்டுகளுக்கு முன்பே பல ஆண்டுகாலம் பல்வேறு வளர்ச்சிப் படிநிலைகளைத் தாண்டி வந்திருக்க வேண்டும். அவ்வாறான சிறப்பு வாய்ந்த,புராதன கோவிலைச் சாதாரணமான மக்கள் அக் காலத்தில் கட்டியிருக்க முடியாது. செல்வம் படைத்த வணிகர்களினாலோ அல்லது அரசனாலோதான் அக் காலத்தில் அவ்வாறான ஒரு கோவிலைக் கட்டியிருக்க முடியும். அவ்வாறு கொள்வதாயின் வரலாற்றின் ஆரம்ப காலத்தில் வசதி படைத்த செல்வந்தர்கள் இருந்திருக்கின்றார்கள் என்பதுடன் முறையான அரசமைப்பு ஒன்றும் இருந்திருக்கின்றது எனக் கொள்ள முடிகின்றது.

வடக்கு, கிழக்கு, வடமேற்கு பிராந்தியங்கள் மிகத் தொன்மை வாய்ந்த திராவிட இனமக்களின், குறிப்பாக தமிழ் மக்களின் ஆதி கால இருப்பிடங்கள் என்பது முன்பே கூறப்பட்டது.

இப் பிரதேசங்களும், தமிழ் நாட்டில் இருந்து கடல்வழியாக இரும்புக்காலப் பண்பாட்டை உள்வாங்கக்கூடிய நிலையில் இருந்திருக்கின்றன. காவிரி ஆற்றின் கழிமுகத்தில் இருந்த காவிரிப் பூம்பட்டினத் துறையில் இருந்து இலங்கையின் கிழக்குக் கரைக்குப் போக்குவரத்துக்கள் இடம் பெற்றிருக்கின்றன என்பதை மட்டக்களப்புப் பிரதேசத்தில் காணப்படும் ஆதி இரும்புக்கால தொல்லியல் சான்றுகள் மூலம் அறிய முடிகின்றது.

அத்துடன் வரலாற்றுக் காலத்தில் இருந்து திருகோண மலையில் உள்ள ஈஸ்வரன் கோவில் மிக முக்கியத்துவம் வாய்ந்த சிவ தலமாக இருந்திருக்கின்றது. இத் திருத்தலமும் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் திருஞானசம்பந்தராலும், பின்னர் சுந்தரராலும் தேவாரம் பாடப்பெற்ற தலமாகும்.

அத்தோடு திருகோணமலையில் உள்ள இயற்கை அமைப்புக்களைக் கொண்ட துறைமுகம் வரலாற்று முக்கியம் வாய்ந்த ஒரு வர்த்தக மையமாக அக் காலத்திலிருந்து விளங்கியிருக்கிறது. கி.பி பதினாறாம் நூற்றாண்டில், போர்த்துக்கீசர், இலங்கையைக் கைப்பற்றியபோது, இப் பிரதேசங்களில் இருந்து சிற்றரசர்கள் அவர்களைக் கடுமையாக எதிர்த்திருக்கின்றார்கள் என்பதைப் போர்த்துக்கீச ஆவணங்கள் கூறுவதிலிருந்து, பலமுள்ள சிற்றரசுகள் கிழக்குப் பிரதேசத்தில் இருந்திருக்கின்றன

> “வன்னிப் பிரதேசத்தில் உள்ள முல்லைத்தீவு, வவுனியாப் பிரதேசங்களும் ஆதி இரும்புக்காலப் பண்பாடுகளைக் கொண்ட பிரதேசங்களாகும். பாக்கு நீரிணை வழியாக வும், பறங்கியாறு வழியாகவும் ஆதி இரும்புக்காலப் பண்பாடுகள் இப் பிரதேசங்களுக்குள் பரவியிருக்கின்றமையை அறியமுடிகின்றது. வையா பாடலில் இருந்து வரும் செய்திகள் மூலம் வரலாற்றுக் காலத்திலிருந்து இப் பிரதேசத்தில் வாழ்ந்த மிக வலு உள்ள குழுவினராக இருந்திருக்கின்றார்கள் என்று அறிய முடிகிறது.”

## தமிழரின் தோற்றமும் ஆரம்ப வரலாறும் கி.மு 300-கி.பி 300

என உறுதியாக அறிய முடிகிறது. ஆனால் இப் பிரதேசங்களில் முறையான அகழ்வாராய்ச்சிகள் இதுவரை நடைபெறாததன் விளைவாக போதுமான வரலாற்றுத் தடயங்களைப் பெறமுடியாமல் இருக்கிறது.

வன்னிப் பிரதேசத்தில் உள்ள முல்லைத்தீவு, வவுனியாப் பிரதேசங்களும் ஆதி இரும்புக்காலப் பண்பாடுகளைக் கொண்ட பிரதேசங்களாகும். பாக்கு நீரிணை வழியாகவும், பறங்கியாறு வழியாகவும் ஆதி இரும்புக்காலப் பண்பாடுகள் இப் பிரதேசங்களுக்குள் பரவியிருக்கின்றமையை அறியமுடிகின்றது. வையா பாடலில் இருந்துவரும் செய்திகள் மூலம் வரலாற்றுக் காலத்திலிருந்து இப் பிரதேசத்தில் வாழ்ந்த மிக வலு உள்ள குழுவினராக இருந்திருக்கின்றார்கள் என்று அறிய முடிகிறது. மேலாய்வுகளின் போது கண்டெடுக்கப்பட்ட பல்வேறுபட்ட தொல்லியல் சான்றுகளும், குறிப்பாக வவுனியா மாவட்டத்திலுள்ள பெரிய புளியங்குளத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள், இப் பிரதேசத்தில் ஆதிகாலம் முதல் மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதைக் காட்டுகின்றன.

யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆரம்பத் தோற்றக் காலங்களில் வன்னிப் பிரதேசங்கள் மிகவும் பலம் வாய்ந்த ஒரு நிர்வாகக் கட்டமைப்புக்குள் இருந்திருக்கின்றன. மேலும் அங்கிருந்த வன்னிச் சிற்றரசுகள் யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆணைக்கு உட்பட்டு இருந்ததோடல்லாமல், யாழ்ப்பாண இராச்சியத்தின் பலத்திற்கும், அதன் விரிவாக்கத்திற்கும் பக்கபலமாக இருந்திருக்கின்றன என்பதனைப் போர்த்துக்கீசர் யாழ்ப்பாண இராச்சியத்தின் மீது படையெடுத்த போது, அவர்கள் யாழ்ப்பாண அரசுக்குப் பாரிய படை உதவிகளைச் செய்திருப்பதை போர்த்துக்கீச ஆவணங்கள் உறுதிப்படுத்துகின்றன.

இவற்றிலிருந்து வரலாற்றுக் காலத்தில் ஏனைய இடங்களில் ஆரம்ப அரசுகள் இருந்ததுபோல இப் பிரதேசங்களிலும், ஆரம்பச் சிற்றரசுகள் இருந்திருக்கின்றன என்று தெரிய வருகின்றது. இதுவரை முறையான அகழ்வாராய்ச்சிகளோ, மேலாய்வுகளோ இப் பிரதேசத்தில் இடம் பெறாமையினால் இப் பிரதேச வரலாறுகள் மண்ணுக்குள் மறைந்து இருக்கின்றன என்பதைத் திட்டவட்டமாகக் கூற முடியும்.

இறுதியாக, யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த முப்பது ஆண்டுகளாக பெருந்தொகையான இரும்புக்காலப் பண்பாட்டுக்குரிய தொல்லியற் தளங்கள் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன. அத்தோடு பாளி நூல்களிலும், இப் பிரதேசம் பற்றிய ஆதி வரலாற்றுக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. இவைகளிலிருந்து, யாழ்.குடாநாட்டில், குறிப்பாக தீவுப் பகுதிகளான காரைதீவு, நயினாதீவு, புங்குடுதீவு, வேலணை போன்ற பகுதிகளில் இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முந்திய ஆதிக் குடியிருப்புக்கள் இருந்தமையை அறிய முடிகிறது. யாழ்ப்பாண மாவட்டத்தில் குறிப்பாக, கந்தரோடை, ஆனைக்கோட்டை போன்ற இடங்களில் ஆரம்ப வரலாற்றுக்காக நகர மையங்களும் அரச அமைப்புகளும் கி.மு. 300 வருடங்களுக்கு முன்பே இருந்திருக்கின்றன என்பதை இவ்விரு இடங்களிலும் நடை பெற்ற விஞ்ஞான ரீதியான அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் மூலம் அறிய முடிகின்றது.

மிகப் பழைமைவாய்ந்த நகர மையமாகக் கந்தரோடை விளங்கியிருக்கிறது. வரன்முறையான அகழ்வாராய்ச்சியொன்று பென்ஸில்வேனியாப் பல்கலைக்கழகத்தினால் 1970களில் முதல்முறையாகக் கந்தரோடையில் நடத்தப்பட்டது. இந்த ஆய்வின் முடிவுகள் இதுவரை பூரணமாக வெளியிடப்படவில்லை. இருந்தபோதிலும் இவ் ஆய்வை தலைமை வகித்து நடத்திய விமலா பெக்லி (Vimala Begley) என்பவரால் 1973இல் இவ் ஆய்வு பற்றி ஒரு கட்டுரை வெளியிடப்பட்டது. ஆய்வின்போது கண்டெடுக்கப்பட்ட பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்ட ஓடு பற்றிய தகவல்களும் மற்றும் தொல்லியல் சான்றுகளின் காலக்கணிப்புக்களும் அக் கட்டுரையில் தெரியப் படுத்தப்பட்டுள்ளன.

மேலும், கந்தரோடை தமிழ், பௌத்தம் சம்பந்தமான ஒரு தலமாக கி.பி. முதல் இரு நூற்றாண்டு காலமாக இருந்திருக்கின்றது என்பதையும் அறியமுடிகிறது. ஆனால் பௌத்த நிறுவன அமைப்புக்கு முன்பே இங்கு இரும்புக் காலத்தை உள்ளடக்கிய பெருங்கற் பண்பாட்டு ஆதிக் குடியிருப்புக்கள் இருந்திருக்கின்றன என்பதும் அவை கி.மு. நான்காம் நூற்றாண்டுக்கு முன்னதாக உள்ள காலப் பகுதியைக் கொண்டவை என்பதும் C14 என்ற காலக்கணிப்பு முறை மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த விஞ்ஞான ரீதியான C14 காலக்கணிப்பு மூலம் பதின்நான்கு வகையான தொல்பொருட்களை ஆய்வுக்குட்படுத்தி, அத் தொல்லியற் சான்றுகள் கி.மு. 500-100 காலப் பகுதிகளை உள்ளடக்கியதாக உள்ளன என்பதை உறுதிப்படுத்தியுள்ளார். இவையே முதன்முதல் யாழ்ப்பாணக் குடாநாட்டில் காலக் கணிப்புக்கு உட்படுத்தப்பட்ட தொல்லியற் சான்றுகளாகும்.

(தொடரும்)

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 17.08.2018-16.09.2018



## கல்யாண வாய்ப்புகள் கைகூடும்!




விளம்பி வருடம் ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் இராசிநாதன் சனி இலாப ஸ்தானத்தில் வக்கிரம் பெற்று சஞ்சரிக்கிறார். சூரியன் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து இராசியைப் பார்க்கிறார். குருவின் பார்வையும் பஞ்சம பார்வையாக உங்கள் இராசியில் பதிகின்றது. அந்த அமைப்பில் பிறக்கும் ஆவணி மாதம் உங்களுக்கு மன மகிழ்ச்சியைக் கொடுக்கும் மாதமாக அமையப் போகிறது. பார்க்கும் குருவால் நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். வரன்கள் வந்துவந்து போகிறதே என்று கவலைப்பட்டவர்களுக்கு. இப்பொழுது திருமணம் பேசி முடியும் அளவிற்கு கிரக நிலைகள் சாதகமாக உள்ளன. பணப்புழக்கம் அதிகரிக்கும். பாராட்டும் புகழும் கூடும். இனத்தார் பகை மாறும். இனிய வாழ்வை அமைத்துக் கொடுக்க நண்பர்களும், உறவினர்களும் போட்டி போட்டுக் கொண்டு உதவுவர். நாகரிகப் பொருட்கள் வாங்குவதில் நாட்டம் செல்லும். தேகநலன் சீராகித் தெளிவு பிறக்கும். வேகமாகத் தொடங்கிய காரியம் ஏதேனும் ஒரு காரணத்திற்காக நிறுத்தப்பட்டிருக்கலாம். அப்படி பாதியில் நின்ற பணிகள் அனைத்தும் இனி துரிதமாக நடைபெறும்.

குருவின் பார்வை உங்கள் இராசியில் பதியும் பொழுது என்ன தடைகள் வந்தாலும் அவை தகர்த்து எறியப்படும். ஆனால் அந்த குரு பலம்பெற்றுப் பார்க்க வேண்டும். அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, குரு வக்கிர நிவர்த்தியாகி விட்டார். இம்மாதம் சனி, செவ்வாய் ஆகிய இரண்டு கிரகங்களும் வக்கிர நிவர்த்தியாகப் போகின்றன. எனவே கிரகங்கள் சாதகமாக இருக்கும் நிலையில் இந்த மாதத்தில் அன்பும் ஆதரவும் கொண்ட நண்பர்களின் பழக்கத்தாலும் உற்றார்-உறவினர்களின் ஒத்துழைப்பாலும் நல்ல காரியங்கள் பலவும் செய்து முடிக்கும் சூழ்நிலை உருவாகும்.

### சனி வக்கிர நிவர்த்தி காலம்!

உங்கள் இராசிநாதனாகவும் விரயாதிபதியாகவும் விளங்குபவர் சனி பகவான். இவர் ஓகஸ்ட் 20 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். எனவே உடல் சோர்வு அகலும். உள்ளத்தில் மகிழ்ச்சி குடிகொள்ளும். கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். தொழில் தொடர்பாக பயணங்கள் அதிகரிக்கும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிக்க முன் வருவீர்கள். வருமானம் திருப்திகரமாகவே இருக்கும். இருப்பினும் சனியின் பார்வை உங்கள் இராசியிலேயே பதிவதால் சில நேரங்களில் தட்டுப்பாடுகள் தலைவிரித்தாடும். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். மருத்துவச்செலவு மனக் கலக்கத்தை உருவாக்கும். எனவே சனிக்கிழமை தோறும் ஆனைமுகப் பெருமானையும் சனி பகவானையும் வழிபட வேண்டும்.

### புதனின் பெயர்ச்சி காலம்

ஓகஸ்ட் 28 ஆம் திகதி சிம்ம இராசிக்குப் புதன் செல்கிறார். அங்குள்ள சூரியனுடன் இணைந்து புத-ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார். எனவே மங்கல ஓசை மனையில் கேட்பதற்கான வழிபிறக்கும். மக்கள் செல்வங்களால் மகிழ்ச்சி கூடும். அரசியல் வாதிகள் அனுகூலமாக நடந்து கொள்வர். புத-ஆதித்ய யோகத்தின் காரணமாக புதிய பொறுப்புகளும் பதவிகளும் கிடைக்கும். செப்டெம்பர் 3 ஆம் திகதி புதன் அஸ்தமனம் அடைகிறார். அப்பொழுது பிள்ளைகளால் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். செப்டெம்பர் 15 ஆம் திகதி கன்னி இராசிக்குப் புதன் சென்று உச்சம் அடைகின்றார். அஷ்டமாதிபதி அஷ்டமத்தில் உச்சம்பெறும் இந்தநேரம் இழப்புகளை ஈடுசெய்யும் புதிய வாய்ப்புகள் வந்துசேரலாம். தொழில் மாற்றச் சிந்தனை மேலோங்கும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக் கசப்பு மாறும், கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும். பஞ்சமாதிபதியாகவும் புதன் இருப்பதால் பிள்ளைகள் கல்வியில் தேர்ச்சி பெற்று உங்களுக்குப் பெருமை சேர்ப்பர்.

### சுக்கிரப் பெயர்ச்சிக் காலம்!

ஓகஸ்ட் 28 ஆம் திகதி துலாம் இராசிக்குச் சுக்கிரன் வருகிறார். 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் 9 ஆம் இடத்தில் பலம்பெறும் இந்த நேரத்தில் ஒளிமயமான எதிர்காலம் உருவாக வழி பிறக்கப் போகிறது. பெண்வழிப் பிரச்சினைகள் அகலும். தங்கம், வெள்ளி போன்றவற்றில் தனிக்கவனம் செலுத்துவீர்கள். பூமி வாங்கும் யோகமும் உண்டு. சுய ஜாதகத்தில் செவ்வாய் பலம் குறைவாக இருப்பவர்கள் கட்டிய வீடாக வாங்கிக் குடியேறும் வாய்ப்பு கிடைக்கும்.

### செவ்வாய் வக்கிர நிவர்த்தி

செப்டெம்பர் 6 ஆம் திகதி செவ்வாய் மகர இராசியில் வக்கிர நிவர்த்தியாகிறார். சகாய ஸ்தானாதிபதி செவ்வாய் தொழில் ஸ்தானத்திற்கும் அதிபதியானவர். அவர் வக்கிர நிவர்த்தியாகி விரய ஸ்தானத்தில் பலம்பெறும் நேரம் விரயங்கள் அதிகரிக்கும். உடன்பிறப்புகளின் திருமண விழாக்களை முன்னின்று நடத்துவீர்கள். புதியதொழில் தொடங்கும் வாய்ப்பு கைகூடும். பழைய தொழிலை பங்குதாரர்களிடமே ஒப்படைத்து விட்டுப் புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் வாய்ப்பு கிட்டும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நீண்டதூரத்திற்கான இட மாறுதல்கள் கிடைக்கும். என்றைக்கோ வாங்கிப் போட்ட இடம் இன்றைக்கு நல்லவிலைக்கு விற்பனையாகும். அந்தத் தொகையை மூலதனமாக்கி நண்பர்களின் கூட்டோடு நல்லதொழில் தொடங்கவும் முயற்சிப்பீர்கள். இம்மாதம் ஆதியந்தப் பிரபுவை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

குருவின் பார்வை பலத்தால் கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். குடும்ப முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். அடுத்தடுத்து நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்திணைவர். கணவன்-மனைவிகள் கனிவும் பாசமும் கூடும். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். பிள்ளைச் செல்வங்களால் பெருமை சேரும். அவர்களின் எதிர்கால நலன்கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றிபெறும். தாய்வழி ஆதரவு தடையின்றிக் கிடைக்கும். ஆரோக்கியத் தொல்லை அகலும். உடன்பிறப்புகள் உங்களுக்கு உதவிக்கரம் நீட்டுவர். பணிபுரியும் பெண்களுக்கு யோகமான நேரமிது. உயர் பதவிகள் கிடைக்கும். உன்னத சலுகைகளும் கேட்டபடி கிடைக்கும். திறமை பளிச்சிடும். தெய்வ தரிசனங்கள் வாழ்வை வளப்படுத்தும். குறிப்பாக குலதெய்வ வழிபாடும், குருவழிபாடும் குழப்பங்களை அகற்றும்.

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**



## முயற்சிகளில் வெற்றி கிட்டும்!




விளம்பி வருடம் ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு பஞ்சம ஸ்தானாதிபதி சந்திரனுடன் இணைந்து குரு-சந்திர யோகத்தை வழங்குகிறார். தனாதிபதி செவ்வாய், இலாபாதிபதி சனி ஆகிய இரண்டு கிரகங்களும் வக்கிர நிவர்த்தியாகிப் பலன் கிடைக்கப்போகிறது. தனவரவு தாராளமாக வரும். பிள்ளைகளின் வழியில் புதிய திருப்பங்கள் ஏற்படும். பிரச்சினைகள் படிப்படியாகத் தீரும். நல்ல சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். உடல் நலம் சீராகி உற்சாகப்படுத்தும். இதுவரை வேலையிலும் வியாபாரத்திலும் தொழிலிலும் இருந்து வந்த இடையூறுகள் அகலும்.

6 இல் சூரியன் வலுப்பெறுவதால் வியாபாரம் சூடு பிடிக்கும். தொழிலில் குறுக்கீடாக இருந்தவர்களின் தொல்லை குறையும். கடன்சுமை கட்டுக்குள் இருக்கும். வழக்குகள் சாதகமாக முடியும். அரசு வழி தொல்லைகளைச் சந்தித்தவர்கள் அதிலிருந்து விடுபடுவர். தாமதித்து வந்த பதவி உயர்வும், சம்பள உயர்வும் இப்பொழுது கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படும்.

அஷ்டமத்து குருவின் பார்வை 2, 12 ஆகிய இடங்களில் பதிவதால் பணப்புழக்கம் அதிகமாகவே இருக்கும். அதேநேரம் விரயங்கள் கூடுதலாகவே இருக்கும். எனவே ஒரு தொகை கைக்கு வந்தாலும் அதைச் சுபவிரயமாக மாற்றிக் கொள்வது நல்லது.10 இல் சனி இருப்பதால் புதிய திட்டங்கள் தீட்டிப் பலன் பெறுவீர்கள்.

### சனி வக்கிர நிவர்த்திக் காலம்!

ஓகஸ்ட் 20 ஆம் திகதி தனுசில் சஞ்சரிக்கும் சனி வக்கிர நிவர்த்தியாகிறார். 10 இல் சனி பலம் பெறும் நேரம், தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கூடுதலாக கிடைக்கும். வரவேண்டிய சம்பளப் பாக்கிகள் வந்து சேரும். உடன் பணிபுரிபவர்களால் ஏற்பட்ட உபத்திரவங்கள் அகலும். வெளிநாட்டுக்குச் சென்று பணிபுரிய வாய்ப்புக் கிடைக்கவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு இப்பொழுது நல்ல வாய்ப்புகள் தானாகவே வந்து சேரும். வாகனம் வாங்கவும் வீடு கட்டவும் சலுகைகள் கேட்டு விண்ணப்பித்திருந்தால் அந்த விண்ணப்பத்திற்கான பதில் நல்லவிதமாக வந்து மகிழ்ச்சியளிக்கும். சனிக்கிழமைதோறும் விரதமிருந்து சனி பகவானை வழிபடுவது நல்லது.

### புதனின் பெயர்ச்சி காலம்

ஓகஸ்ட் 28 ஆம் திகதி சிம்ம இராசிக்குப் புதன் செல்கிறார். அங்குள்ள சூரியனுடன் இணைந்து புத-ஆதித்ய யோகத்தை உருவாக்குகின்றார். எனவே விடாப்பிடியாக செயற்பட்டு வெற்றியை வரவழைத்துக்கொள்வீர்கள். தடைப்பட்டு வந்த காரியங்கள் தானாக நடைபெறும். பூர்வீகச் சொத்துத் தகராறுகள் அகலும்.

செப்டெம்பர் 3 ஆம் திகதி புதன் வலிமையிழக்கின்றார். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வலிமையிழப்பது யோகம்தான். பெற்றோர் வழி ஆதரவு கிடைக்கும். உற்றார், உறவினர்களின் பகை அகலும். செப்டெம்பர் 15 ஆம் திகதி கன்னி இராசியில் புதன் உச்சம் பெறுகிறார். சப்தம ஸ்தானத்தில் புதன் உச்சம் பெறுவதால் குடும்ப முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். மங்கல ஓசை மனையில் கேட்பதற்கான வழிபிறக்கும். வெளிநாட்டு யோகம் எண்ணியபடியே அமையலாம். பயணங்களால் பலன் உண்டு. தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும். புதிய வாகனம் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும்.

### சுக்கிரப் பெயர்ச்சிக் காலம்!

ஓகஸ்ட் 28 ஆம் திகதி துலாம் இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அஷ்டமாதிபதி வலுவடையும் இந்த நேரத்தில் குருவோடு அவர் இணைந்து செயற்படுவதால் இழப்புகளில் இருந்து மீள வழிபிறக்கும். இடமாற்றம், வீடுமாற்றம், உத்தியோக மாற்றம், தொழில் மாற்றம் போன்றவை வருவதற்கான அறிகுறிகள் தென்படும். பெண்வழிப் பிரச்சினைகள் அகலும். வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு திடீரெனத் தாய் நாடு திரும்பும் வாய்ப்பும் உண்டு. இரத்த அழுத்தம், கிறுகிறுப்பு போன்ற நோய்களுக்கு ஆட்பட நேரிடும். அடகு வைத்த நகைகளை மீட்கும் வாய்ப்பு உருவாகும்.

### செவ்வாய் வக்கிர நிவர்த்தி

செப்டெம்பர் 6 ஆம் திகதி மகர இராசியில் சஞ்சரிக்கும் செவ்வாய் வக்கிர நிவர்த்தியாகிறார். இக்காலம் ஒரு இனிய காலமாகும். எதிர்பார்த்த காரியங்கள் எல்லாமே நடைபெறும். தடைகள் விலகும். தனவரவு பெருகும். சொத்துகள் வாங்க, விற்க எடுத்த முயற்சி கைகூடும். பத்திரப் பதிவிலிருந்த தடைகள் அகலும். தந்தைவழி ஒத்துழைப்பு திருப்தி தரும். பாகப் பிரிவினைகளும் பஞ்சாயத்துக்களும் உங்கள் மனம் போல் நடைபெறும்.

இம்மாதம் விநாயகர் சதுர்த்தியன்று விநாயகப் பெருமானை வழிபட்டு வருவதோடு, வியாழக்கிழமை தோறும் அறுபத்து மூவர் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.


### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இம்மாதம் குடும்ப ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால் குடும்ப முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். பக்குவமாகப் பேசிக் காரியங்களைச் சாதித்துக்கொள்வீர்கள். பக்கத்து வீட்டாரின் பகை மாறும். அருகிலுள்ளவர்களின் ஆதரவோடு தொழில் வளர்ச்சி மேலோங்கும். கணவன்-மனைவிக்குள் பாசமும் நேசமும் அதிகரிக்கும். புனித பயணங்களை மேற்கொள்வீர்கள். பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி ஒருதொகையைச் செலவிடும் சூழ்நிலை உண்டு. ஆடை, ஆபரண சேர்க்கையில் அக்கறை காட்டுவீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு பலநாட்களாக எதிர்பார்த்திருந்த சம்பளப் பாக்கிகள் வந்து சேரும். புதிய வேலைக்கு அழைப்புகள் வரலாம். சதுர்த்தி விரதமிருந்து லட்சுமி கணபதியை வழிபடுவது நல்லது.

முற்றும்

# நாட்டில் மீண்டும் அழிவுகளை தோற்றுவிக்க புனர்வாழ்வளிக்கப்பட்ட ஆயுததாரிகள் விருப்பம்

## முன்னாள் முதல்வர் நஷீர் காட்டம்



(ஏறாவூர்)

நாட்டில் மீண்டும் அழிவுகளை தோற்றுவிக்க புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் ஆயுததாரிகள் சிலர் விரும்புவதாக கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் செய்னுலாப்தீன் ஆலிம் நசீர் அஹமத் தெரிவித்துள்ளார்.

எனவே, அவர்களை மீண்டும் புனர்வாழ்வுக்குட்படுத்த வேண்டும் என தான் அரசாங்கத்தை கோருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் நேற்று முன்தினம் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும்,

யுத்தத்திற்காக புலிகள் பயன்படுத்திய ஆயுதங்கள் முஸ்லிம்களின் கைவசம் மாறியுள்ளதாக புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் ஆயுததாரிகளில் இன்னமும் மனநிலையில் கோளாறுள்ள ஒரு சில நபர்கள் புரளியைக் கிளப்பி விட்டுள்ளனர்.

இது எதனை வெளிப்படுத்துகின்றது என்றால், குறித்த நபர்கள் இன்னமும் முழுமையாக புனர்வாழ்வளிக்கப்படவில்லை என்பதையும் அவர்கள் மனநல கோளாறுகளுக்கான விசேட புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றது.

எனவே, அரசாங்கம் இத்தகைய மனநல கோளாறுள்ள முன்னாள் ஆயுததாரிகளை இனங்கண்டு அவர்களை முழுநேர கண்காணிப்பில் வைத்து முழுமையான புனர்வாழ்வுக்கு உட்படுத்த வேண்டும்.

இல்லையேல், இத்தகைய நபர்களால் மீண்டும் நாட்டில் சமூகங்களுக்கிடையில் அநாவசியமான குழப்பங்களும் அழிவுகளும் ஏற்பட வாய்ப்புண்டு.

கடந்த 30 வருட கால ஆயுதப் போராட்டத்தினால் நாட்டிலுள்ள அனைத்து சமூகங்களும் ஈடு செய்ய முடியாத இழப்புக்களைச் சந்தித்திருக்கின்றார்கள். குறிப்பாக நேரடியாகவே தமிழ் சமூகம் இழந்தவைகள் ஏராளம்.

அந்தப் பாதிப்பிலிருந்து மீண்டெழுவதற்கு இன்னும் எத்தனையோ காலங்கள் எடுக்கும் என்ற கவலையோடு சமூக நன்னோக்காளர்கள் ஆதங்கப்படும்போது ஒரு சில சமூகவிரோதிகளான இத்தகைய நபர்கள் மீண்டும் பாதிக்கப்பட்ட இந்த நாட்டின் அனைத்து சமூகங்களையும் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்ல கங்கணம்கட்டி நிற்கின்றார்கள்.

தமிழ் சமூகத்தின் சிந்தனை அரசியல்வாதிகள் சமூக உறவைக் கட்டி வளர்ப்பதிலும் தமிழ் பேசும் மக்களுக்கிடையிலான இன ஐக்கியத்தைக் கட்டி வளர்ப்பதிலும் அக்கறையாய்இருக்கும்பொழுது இத்தகைய சமூகவிரோதிகளின் தூண்டுதல்கள் சிறுபான்மையினருக்குள் குழப்பத்தை உருவாக்கி பேரினவாத அடக்குமுறைகளுக்கு ஆதரவு தந்து விடும் என அஞ்சவேண்டியுள்ளது.

எனவே, இந்த விடயத்தில் தமிழ் பேசும் சிறுபான்மைச் சமூகங்களின் ஒற்றுமை சீர்குலையா வண்ணம் ஐக்கியப்பட்டு உழைப்பதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கிழக்கு மாகாணத்தை ஒருமித்து ஆட்சி நடத்தி காட்டியிருக்கின்றது.

தொடர்ந்தும் தமிழ் பேசும் சமூக மக்களின் ஒற்றுமையைக் கட்டிக் காப்பதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் உறுதியாக உள்ளன.

எனவே, விசமிகளினதும், சமூகவிரோதிகளினதும் சித்தப்பிரமையான இனத்துவேசக் கருத்துக்கள் குறித்து தமிழ் பேசும் சமூகங்கள் மிகுந்த அவதானத்துடன் இருந்து எதிர்வினையாற்ற வேண்டும். இத்தகைய நாசகாரர்களை சமூகத்திலிருந்து புறந்தள்ளி வைக்க வேண்டும்.

அதேவேளை, பொறுப்புள்ள ஆட்சி என்ற வகையில் அரசும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று பொலிஸ் அதிகாரிகள் கைதாகினர்

(கொழும்பு)

களுத்துறையில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பாக பாணந்துறை வலய குற்றத்தடுப்புப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் ஒருவரும் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இருவரும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்ட மூவரும் திட்டமிட்ட குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

குறித்த மூவரும் களுத்துறை பாலத்திற்கு அருகில் வைத்து நேற்று முன்தினம் அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# புலிகளின் ஆயுதங்கள் முஸ்லிம் அரசியல்வாதிகளிடம்; எனது வீட்டை முதலில் சோதனையிடுங்கள்-மக்ரூப்



(கிண்ணியா)

புலிகளின் ஆயுதங்கள் முஸ்லிம் அரசியல்வாதிகளிடம் இருப்பின் முதலில் கிண்ணியாவில் அமைந்துள்ள எனது வீட்டையும் அலுவலகத்தையும் சோதனையிடுங்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மக்ரூப் தெரிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுற்றதன் பின்னர், விடுதலைப் புலிகளிடம் இருந்த ஆயுதங்கள் முஸ்லிம் அரசியல் தலைவர்களிடம் உள்ளதாக புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தனர்.

இது தொடர்பில் கல்வியமைச்சில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப்புலிகளின் காலத்தில் இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் முஸ்லிம்கள் பாதிக்கப்பட்ட காலத்தில் கூட முஸ்லிம்கள் ஆயுதங்கள் தூக்கியது கிடையாது.

யுத்தம் நிறைவடைந்த பின் கிறிஸ் பூதம் போன்ற பல பிரச்சினைகள் ஏற்பட்ட காலத்தில் கூட முஸ்லிம்கள் யாரும் ஆயுதம் தூக்கவில்லை.

இவர்கள் கூறுவது போன்று முஸ்லிம்களுக்கு ஆயுதம் விற்பனை செய்திருந்தால் இந்த பிரச்சினைகளின் போது முஸ்லிம்கள் ஆயுதங்களை வெளியில் எடுத்திருக்க வேண்டும்.

ஆகவே இவர்கள் கூறுவதைப்போல் எமது பிரதேசங்களில் சட்டவிரோத ஆயுதம் மறைத்து வைக்கப்பட்டிருந்தால் பாதுகாப்பு படையினர் வந்து சோதனை செய்து பார்க்கலாம். அந்த சோதனையை முதலில் எனது வீடு, அலுவலகத்திலிருந்தே ஆரம்பிக்கவும்.

ஆயுதங்கள் எங்கு வைக்கப்பட்டுள்ளன என்ற தகவல்கள் இவர்களிடம் உள்ளன என கூறியிருந்தனர். ஆகவே பாதுகாப்பு படையினர் முதலில் இவர்களிடமிருந்தே விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும்.

அத்துடன் ஆயுதம் தொடர்பான தகவல்கள் இவர்களிடம் இருப்பின் ஏன் அதை பாதுகாப்பு படையினருக்கு அறிவிக்காமல் ஊடகங்களின் முன் கூற வேண்டும்? எனவே இவர்களிடம் தனிப்பட்ட அரசியல் நிகழ்ச்சி நிரல் ஒன்று உள்ளது இதன்மூலம் தெளிவாகி வருகிறது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பசுவதைக்கு எதிரான ஆர்ப்பாட்டம், முஸ்லிம் தனியார் [illegible] தொடர்பாக தமிழ் பெண்கள் நடத்திய ஆர்ப்பாட்டம் போன்ற தமிழ், முஸ்லிம் உறவை சீர்குலைக்கும் நோக்கில் ஒருசில குழுக்களால் திட்டமிட்டு நடத்தப்படும் நிகழ்வாகவே நான் இதை கருதுகிறேன்.

எனவே அரசு இது தொடர்பாக உரிய விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் இவர்களின் கருத்து பொய் என நிரூபிக்கப்பட்டால் அரசாங்கம் இவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

# செய்தித்துளிகள்

## எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியரின் தலையில் வாகனம் மோதி விபத்து

### கண்காணிப்பு இல்லாததால் உயிரிழப்பு

(கொழும்பு)

சப்புகஸ்கந்த, ஹெய்யந்துடுவ பிரதேசத்தில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஏற்பட்ட விபத்தில் ஒருவர் பலியாகியுள்ளார். இதில் எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் பணியாற்றும் ஊழியரே உயிரிழந்துள்ளார்.

குறித்தநபர் மீற்றரை சோதிப்பதற்காக நிலத்துக்கு அடியில் எரிபொருள் தாங்கியிருக்கும் பகுதிக்கு இறங்கி விட்டு மேலே ஏறுவதற்கு முயற்சித்த போது அவருடைய தலையின் மீது வாகனமொன்று மோதியதிலேயே இவ் விபத்து ஏற்பட்டுள்ளதென பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## இரு குழுக்களுக்கிடையில் மோதல் மாணவர்கள் ஐந்து பேர் படுகாயம்!

(காலி)

காலி-லபுதுவ பகுதியில் அமைந்துள்ள உயர் தொழில்நுட்ப நிறுவனம் ஒன்றில் கல்வி கற்று வரும் மாணவர்களில் இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் ஐவர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றையதினம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். தகவல் தொழில்நுட்பப் பிரிவைச் சேர்ந்த மூவரும் பொறியியல் பிரிவைச் சேர்ந்த இருவருமே இவ்வாறு காயமடைந்துள்ளனர். (இ-7)

## காணி அபகரிப்பு குற்றச்சாட்டில் நகரசபை உப தவிசாளர் கைது

(தலவாக்கலை)

தலவாக்கலை - லிந்துலை நகரசபையின் உப தவிசாளர் எல்.பாரதிதாசன் தலவாக்கலை பொலிஸாரால் நேற்றுக்காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

சென்க்ளேர் தோட்டத்தில் 4 ஏக்கர் காணியை அபகரிக்க முயற்சித்ததாக அவருக்கு எதிராக தலவாக்கலை பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. அவரை நுவரெலியா மாவட்ட நீதிமன்றில் முன் னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுளளது.

ஏற்கனவே நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட பிடியாணையின் அடிப்படையில் கடந்த 8 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பல்கலை. மாணவர்களுக்கு நீதிமன்றத்தினால் நிபந்தனை

(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தினால் மேற்கொள்ளப்படவிருந்த ஆர்ப்பாட்டம் தொடர்பில் நீதிமன்ற உத்தரவொன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய குறித்த ஆர்ப்பாட்டம் பொதுமக்களுக்கு பாதிப்பின்றியும் பொது மற்றும் அரச சொத்துக்களுக்குப் பாதிப்பின்றியும் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

## காலணி விற்பனை கடையில் தீ!



(கொழும்பு)

பம்பலப்பிட்டி பகுதியிலுள்ள கட்டடம் ஒன்றில் நேற்று அதிகாலையில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

பம்பலப்பிட்டி சந்தியிலுள்ள கட்டடத்திலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

காலணி விற்பனைக் கடைகளைக் கொண்ட கட்டடத்தில் தீ பற்றியுள்ளது. எனினும் தீ பற்றியமைக்கான காரணம் மற்றும் சேத விபரங்கள் வெளியாகவில்லை. (இ-7)

# சிறுவர் அரங்கம்

## யார் மீது தவறு!



"இப்ப பார் ஒரு காயாச்சும் விழலேன்னா என் பேரை மாத்திக்கிறேன்!" என்றபடி அந்தப் பெரிய மாமரத்தை நோக்கிக் கல்லை வீசினான் பிரதீப்.

"ஹலோ நேரம் ஆச்சு... கொஞ்சம் வேகமா நடக்கிறியா? முதல் நாளே லேட்டா போயி திட்டு வாங்கவா?" என்று சலித்துக்கொண்டான் அவன் நண்பன் தமிழரசன்.

விடுமுறைக்குப் பிறகு அன்றுதான் பாடசாலை திறந்தது. ஏழாம் ஆண்டு கலகலவென்றிருந்தது. நீண்ட இடைவேளைக்குப் பிறகு மாணவர்கள் தங்கள் நண்பர்களைச் சந்தித்துக்கொண்டார்கள். வேறு பாடசாலைகளிலிருந்து வந்து புதிதாகச் சேர்ந்த மாணவர்களையும் நண்பர்களாக்கிக் கொண்டார்கள். அப்படி வேறு பாடசாலையிலிருந்து வந்தவன் தான் குமார். அவனைத் தனக்கு முன்பே தெரியும் என்றும் நல்ல நண்பன் என்றும் பிரதீப்பிடம் சொல்லியிருந்தான் தமிழரசன். குமாரை அவனுக்கு அறிமுகப்படுத்த ஆவலுடன் காத்திருந்தான்.

அந்த அறிமுகப்படலம்தான் விவகாரமாகிவிட்டது. ஒரு சிறுமியின் கையிலுள்ள தின்பண்டத்தைப் பிடுங்கும் ஆவலுடன், அவள் பின்னாலே சென்ற நாயைக் கணடான் குமார். அந்த நாயை விரட்டுவதற்காக ஒரு கல்லை எடுத்து எறிந்தான். நாய் மீது லேசாக உரசிச் சென்ற அந்தக் கல், அருகிலிருந்த பிரதீப் முதுகில் விழுந்து விட்டது. வலியுடன் திரும்பியவனிடம் ஓடி வந்து மன்னிப்புக் கேட்டான் குமார்.

யாரோ ஒரு புதியவன், தன் மீது கல் எறிந்துவிட்டானே என்ற ஆத்திரத்தில் முறைத்தான் பிரதீப். "மன்னிச்சிடு நண்பா. நான் நாய் மீதுதான் கல் எறிந்தேன். அது தவறுதலாக உன் மீது பட்டு விட்டது. தெரியாமல் செய்தாலும் தவறு தான்" என்றான் குமார்.

விருட்டென்று அந்த இடத்தை விட்டு வேகமாக நகர்ந்தான் பிரதீப். சமாதானம் செய்ய முயன்ற தமிழரசன் மற்ற நண்பர்களின் முயற்சி தோல்வியில் முடிந்தது. அதற்குப் பிறகு குமார் இருக்கும் இடத்தில் தான் இருப்பதைத் தவிர்த்தான் பிரதீப். எத்தனையோ முறை குமார் அவனிடம் நட்பாகப் பேச முயன்றும் முடியவில்லை. இவர்களை எப்படி நண்பர்களாக்குவது என்று தமிழரசனும் தவித்தான்.

நாட்கள் ஓடின. வழக்கமாகப் பாடசாலைக்குச் செல்லும் வழியில் இருக்கும் மாந்தோப்பின் அருகே குமாருக்காகக் காத்திருந்தான் பிரதீப். அவன் மனமோ கோபத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்தது. இத்தனை நாள் அவன் ஆவலோடு காத்திருந்தபாட்டுப் போட்டியில் அவனால் கலந்து கொள்ள முடியவில்லை. இதற்குக் காரணம் குமார். இதை நினைக்க நினைக்க குமாரின் மீதான கோபம் இன்னும் அதிகமானது. பாட்டுப் போட்டியில் குமார் கலந்துகொள்வதால். தான் சேர முடியாமல் தவித்தான் பிரதீப்.

அங்கு வந்த தமிழரசனிடமும் தன் எண்ணத்தை வெளிப்படுத்தினான். "போட்டியில் அவன் சேர்ந்தால் உனக்கென்ன? நீயும் பேர் கொடுக்க வேண்டியதுதானே?"

"தமிழரசா, அவனுக்கு முன்னால் நான் உன் நண்பன் என்பதை மறந்துவிடாதே. அவனைப் பழிவாங்காமல் என் கோபம் அடங்காது!" "முதல்ல ரெண்டு மாங்காய்களை அடி, அப்புறம் பழிவாங்குறதைப் பற்றி யோசி"

ஒரு கல்லை எடுத்துக் குறிபார்த்து மாங்காய்கள் மீது அடித்தான். மாங்காய்கள் விழுவதற்குள் 'அம்மா' என்ற அலறல் கேட்டது. இருவரும் மாந்தோப்பிலிருந்து வெளியே வந்தனர்.

அங்கே... புத்தகப்பை சிதறிக் கிடக்க, சைக்கிளோடு கீழே விழுந்து கிடந்தான் குமார். அவன் நெற்றியில் கல் பட்டு வீங்கியிருந்தது. பிரதீப்பும் தமிழரசனும் அவனைத் தூக்கிவிட்டார்கள்.

"ஒண்ணுமில்ல விடுங்கப்பா" என்றபடி தலையைத் தடவிக் கொண்டே எழுந்தான் குமார். "சாரி...சாரி... நான்.வேணும்ன்னே உன் மேல எறியல. மாங்காய் அடிக்கத்தான் எறிஞ்சேன்" என்று குனிந்த தலையுடன் அவனிடம் மன்னிப்புக் கேட்டான் பிரதீப்.

"தெரிந்தே யாராவது கல் எடுத்து அடிப்பாங்களா? உன் மேல ஒண்ணும் தப்பில்ல. எனக்கு எந்த விதத்திலும் கோபம் இல்ல. நீங்க போங்க, நான் வீட்டுக்குப் போயி வேற துணி மாத்திட்டு வந்துடறேன்" என்றபடி சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பினான் குமார். குமாரின் வார்த்தைகளால் தன் தவறை உணர்ந்தான் பிரதீப்.

"குமார். ஒரு நிமிசம். நானும் உன் கூட வர்றேன். தமிழரசா, நீ பாடசாலைக்கு போ. நான் குமாருடன் போயிட்டு, அவனை அழைச்சிட்டு வந்துடறேன்" என்ற பிரதீப்பை ஆச்சரியமாகப் பார்த்தான் தமிழரசன்.

## தன்னம்பிக்கை பொன்மொழிகள்

✦ நாம் எப்போதும் நம்பிக்கையை தளரவிடாமல், மேலும் நல்லதை செய்ய முயற்சிக்க வேண்டும் -கோபி அனான்

✦ மனசாட்சி உறங்கும் சமயத்தில்தான் மனக்குரங்கு ஊர் சுற்றக் கிளம்புகிறது -கலைஞர் கருணாநிதி

✦ சில சமயங்களில், கண்களுக்கு தெரியாதது இதயத்துக்கு தெரிகிறது. -ஹெச் ஜாக்சன் பிரவுன் ஜூனிய

✦ செயல்கள் விதியின் விதைகள், அவைதான் இலக்குகள் என்ற விருட்சங்களாக வளர்கின்றன. -ஹாரி எஸ் ட்ரூமன்

✦ நான் விரும்பிய காரியங்களை என்னால் செய்ய முடியாது என்பதை உணரும் வரை நான் ஒரு அடிமை என்பது எனக்குத் தெரியவே இல்லை. -பிரடெரிக் டக்ளஸ்

✦ கண்ணாடியில் புன்னகை செய்யுங்கள். ஒவ்வொரு காலையும் இதை செய்யும்போது. நீங்கள் உங்கள் வாழ்வில் ஒரு பெரிய வித்தியாசத்தை உணரத் தொடங்குவீர்கள். -யோகோ ஓனோ

✦ ஒட்டுமொத்த மனித குலத்தின் கூட்டுப் பங்களிப்பால் உருவாக்கப்பட்டது இயற்பியல். அதில் கிழக்கு மேற்கு. தெற்கு. வடக்கு அனைத்திற்கும் சமமான பங்கு உண்டு -அப்துஸ் சலாம்

## விமானத் தீவு



உலகில் போக்குவரத்து நெருக்கடியான விமான நிலையங்களில் ஒன்றாக இருந்தது ஹாங் காங்கின் "காய்-டாக்" விமான நிலையம். சர்வதேச விமான நிலையமான இங்கிருந்து 110 நாடுகளுக்குமேல் விமானங்கள் இயக்கப்பட்டன. இந்த விமான நிலையத்தின் நெருக்கடியை சமாளிக்க "செக் லேப் கோக்" என்னும் தீவை புதிய விமானநிலையமாக மாற்ற முடிவு செய்யப்பட்டது.

1000 சதுர ஹெக்டேர் பரப்பளவு கொண்டது இந்தத் தீவு. 1630 கோடி அமெரிக்க டொலர் மதிப்பில் சுமார் 19 ஆண்டுகளின் முயற்சியில் இங்கு விமான நிலையம் கட்டி முடிக்கப்பட்டது. உலகிலேயே அதிக செலவில் மேற்கொள்ளப்பட்ட விமான கட்டுமானத் திட்டம் என்ற கின்னஸ் சாதனையை பெற்றது. இந்த விமான நிலையம். 1998 ஆம் ஆண்டு முதல் விமான நிலையமாக செயற்படுகிறது இந்தத் தீவு!

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள் 2018.08 22

❖ 1639 - பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியினர் நாயக்கர்களிடம் இருந்து வாங்கிய நிலத்தில் மதராஸ் நகரத்தை (தற்போதைய சென்னை) அமைத்தார்கள்.

❖ 1642 - இங்கிலாந்தின் முதலாம் சார்ல்ஸ் ஆங்கில நாடாளுமன்றத்தை "துரோகிகள்" எீன வர்ணித்தான். ஆங்கில உள்நாட்டுப் போர் ஆரம்பமானது.

❖ 1926-தென்னாபிரிக்கா, ஜோகான்னஸ்பேர்க்கில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டது.

❖ 1932-தொலைக்காட்சி சேவையை முதன் முதலாக பி.பி.சி. சோதித்தது.

❖ 1941-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மன் படைகள் ரஷ்யாவின் சென் பீட்டர்ஸ் பேர்க்கை அடைந்தனர். லெனின்கிராட் மீதான முற்றுகை ஆரம்பமானது.

❖ 1949-கனடாவில் 8.1 அளவு நிலநடுக்கம் பதிவாகியது.

### பிறப்புகள்

❖ 1877-ஆனந்த குமாரசுவாமி, இலங்கை வரலாற்றாளர், மெய்யியலாளர், நூலாசிரியர் (இ. 1947)

❖ 1904-டங் சியாவுபிங், சீன அரசியல்வாதி (இ. 1997)

❖ 1927-டி. ஜி. லிங்கப்பா, திரைப்பட இசையமைப்பாளர் (இ. 2000)

❖ 1955-சிரஞ்சீவி, இந்திய நடிகர், அரசியல்வாதி

❖ 1991-பெட்ரிக்கோ மெக்கெடா, இத்தாலிய கால்பந்து வீரர்

### இறப்புகள்

❖ 1818-வாரன் ஹேஸ்டிங்ஸ், இந்தியாவின் முதலாவது தலைமை ஆளுநர் (பி. 1732)

❖ 1973-செமியோன் ரூதின், சோவியத் மொழியியலாளர், இந்தியவியலாளர், தமிழறிஞர்(பி. 1929).

❖ 1982-ஏக்நாத் ராமகிருஷ்ண ரானாடே, இந்திய விடுதலைப் போராட்ட வீரர், சீர்திருத்தவாதி (பி. 1914)

❖ 1986-சோபா சிங், இந்திய ஓவியர் (பி. 1901)

❖ 1988-ந. சஞ்சீவி, தமிழக இன உணர்வாளர், சமுதாயச் சிந்தனையாளர், அறிவியல் கோட்பாட்டாளர் (பி. 1927)

❖ 2010-ஏ. கே. வீராசாமி, தென்னிந்தியத் திரைப்பட நடிகர்

❖ 2011-யக் லேற்றன், கனேடிய அரசியல்வாதி (பி. 1950)

❖ 2014-உ. இரா. அனந்தமூர்த்தி, கன்னட எழுத்தாளர் (பி. 1932)

❖ 2016-செல்லப்பன் ராமநாதன், சிங்கப்பூரின் 6 ஆவது குடியரசுத் தலைவர் (பி. 1924)

### சிறப்பு நாள்

❖ சென்னை தினம் (தமிழ்நாடு)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 | 90 | 120 | 150 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 100 | 90 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 160 | 180 | 130 | 200 | 200 |
| தக்காளி | 50 | 60 | 80 | 60 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 | 40 | 50 | 40 |
| கோவா | 100 | 140 | 160 | 80 | 140 | 200 |
| கரட் | 200 | 440 | 380 | 300 | 400 | 400 |
| பூசணி | 80 | 60 | 60 | 40 | 100 | 50 |
| புடோல் | 60 | 70 | 80 | 40 | 70 | 50 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 | 70 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 90 | 100 | 90 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 120 | 110 | 110 | 90 | 120 | 100 |
| பாகற்காய் | 150 | 120 | 130 | 150 | 140 | 150 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 40 | 40 | 100 | 50 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 80 | 70 | 100 | 100 |
| பயற்றங்காய் | 80 | 120 | 80 | 60 | 80 | 50 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 90 | 120 | 150 |
| பீற்றூட் | 100 | 90 | 80 | 60 | 120 | 100 |
| கறிமிளகாய் | 150 | 150 | 160 | 150 | 160 | 200 |
| முருங்கைக்காய் | 80 | 70 | 80 | 60 | 100 | 50 |
| போஞ்சி | 250 | 180 | 200 | 150 | 240 | 250 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | – | 60 | 100 | 30 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 30 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 30 | 30 | 40 | 40 | 60 | 20 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 30-40 | 40 | 30-50 | 30-60 |
| இராசவள்ளி | 140 | 160 | 140 | 60 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 140 | 140 | 120 | 90 | 150 | 100 |
| முள்ளங்கி | 50 | 50 | 40 | 30 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 20 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 40 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 60 | 50 | 120 | 80 | 30 |

செய்த வினையும் செய்கின்ற தீவினையும் ஓர் எதிரொலியைக் காட்டாமல் மறையமாட்டா!
~ கண்ணதாசன்

வலம்புரி
T.P: 021 567 1530
website : www.valampurii.lk

## தொல்லியல் என்ற பெயரால் எங்கள் அடையாளம் தொலைகிறதா?

தமிழ் மக்கள் எழுந்துவிடக்கூடாது என்பதில் இலங்கையின் சிங்கள ஆட்சியாளர்கள் மிகவும் உறுதியாக இருக்கின்றனர்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழினத்தை அழிப்புச் செய்த சிங்களப் பேரினவாதத்தின் இனவாதத் தீ இன்னும் கொழுந்து விட்டு எரிகிறதேயன்றி அது இல்லாமல் போகவில்லை.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் எதற்கானது என்று பாராமல், அந்தப் போராட்டத்தை இல்லாமல் செய்த பேரினவாதம் இனிமேலும் தமிழ் மக்கள் மண் மீட்புப் போராட்டம் என்ற ஒன்றை மீளத் தொடங்காமல் இருப்பதற்கு ஏற்றாற்போல் அவர்களின் பிரச்சினைக்குரிய தீர்வுகளை வழங்க வேண்டும் என்று நினைப்பதுதான் ஆட்சித் தர்மமாகும்.

இருந்தும் அதுபற்றி எந்த நினைப்பும் இல்லாமல், தமிழினத்தை வாழவிடக்கூடாது என்பதிலேயே அரச கவனம் அமைந்துள்ளது.

தவிர, தமிழ் மக்களை எந்தவகையிலும் எழவிடக்கூடாது என்பதில் சிங்களப் புத்திஜீவிகளும் கொள்கை வகுப்பாளர்களும் கூடி இருந்து ஆராய்ந்து அதற்கேற்றாற்போல் வியூகம் அமைக்கின்றனர்.

அதன் வெளிப்பாடாகவே வடக்கு கிழக்குத் தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம்; வடக்கில் பௌத்த விகாரைகள் அமைத்தல்; தமிழ் மக்களின் நிலங்களை அபகரித்தல்; தமிழர் தாயகத்துக்கான அபிவிருத்தி திட்டங்களைக் காலதாமதப்படுத்தல் என்ற நாசகாரங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

இவற்றுக்கெதிராக தமிழ் மக்களின் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கையில்,

இப்போது தொல்லியல் என்ற பெயரில் தமிழ் இனத்தின் – சைவ சமயத்தின் அடையாளங்கள், தொன்மங்கள் அழிக்கப்படுகின்ற ஏற்பாடுகள் நடக்கத் தலைப்பட்டு விட்டதோ என்று ஐயுறவு கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

ஆம், தொல்லியல் திணைக்களம் என்பதன் கடமை எங்கள் முன்னைய அடையாளங்களை, தொன்மங்களைப் பாதுகாக்கின்ற பணிகளைக் கொண்டது.

ஆனால் நடைமுறையில் தொல்லியல் திணைக்களம் என்பது ஏதோ இலங்கையின் இறைமைக்கு அப்பாற்பட்டு ஆகாயத்தில் இருந்து வந்த ஓர் அமைப்புப் போலவும் அந்த அமைப்பு இது எனக்குரியது என்று கூறிவிட்டால் அதற்கு மேல் முறையீடு இல்லை என்பது போலவும் ஆக்கப்பட்டுள்ளமைதான் அதன் மீதான சந்தேகத்தை வலுப்படுத்துகின்றது.

ஆக, தொல்லியல் திணைக்களம் என்பது இந்த நாட்டுக்குச் சொந்தமானது எனில் அந்த அமைப்பிடம் இன, மத, மொழி என்ற பேதங்கள் இருக்க முடியாது.

அதேநேரம் தமிழர்களின் தொன்மங்களை யார் அழித்தாலும் அதனைப் பாதுகாக்கின்ற முயற்சியில் தொல்லியல் திணைக்களம் பக்கச் சார்பற்று செயலாற்றுவதுதான் அதன் பணியாக இருக்கும்.

ஆனால், இந்த எதிர்பார்ப்புக்கு மாறாகவே அந்த அமைப்பின் போக்கு அமைகிறது என்ற ஐயம் தமிழ் மக்களிடம் ஏற்பட்டுள்ளது என்பது நிதர்சனமான உண்மை.

# ஒற்றுமையின் பெருமையை உலகறியச் செய்யும் ஹஜ் பெருநாளுக்கு ஜனாதிபதி மைத்திரி வாழ்த்து

உலகெங்கும் வாழும் பல இலட்சக்கணக்கான இஸ்லாமிய பக்தர்கள் ஒரே குறிக்கோளுடன் ஒன்றிணைந்து, ஒரே புண்ணிய தலத்தில் ஒன்றுகூடி மானிட சமுதாயத்தின் ஏகோபித்த எதிர்பார்ப்பான ஒற்றுமையின் பெருமையை உலகறியச் செய்யும் ஹஜ்ஜுப் பெருநாள், சமூக சகவாழ்வின் மகிமையை உலக மக்களுக்கு எடுத்தியம்பும் ஒரு முதன்மையான சமய நிகழ்வாகும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பண்டைய காலந்தொட்டே சமய அனுஷ்டானங்களில் ஈடுபடும்போது மானிடர்கள் ஒற்றுமையுடன் ஒன்றிணைந்துள்ளனர் என்பதை மனித வரலாற்றை நோக்கும்போது எம்மால் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. சமயங்களுடன் பிணைந்து காணப்படும் வழிபாட்டு முறைகளைப் பாதுகாக்கும் அதே வேளை, மக்களுக்கிடையிலான நல்லுறவை விருத்தி செய்யவும் இந்த சமய நிகழ்வுகள் உதவுகின்றன.

ஹஜ் யாத்திரை என்பது இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான பிணைப்பினை எடுத்துக்காட்டும் ஒரு புனித நிகழ்வாகும். நாடுகளினதும் தனிநபர்களினதும் தராதரங்களை பாராது உலகின் நாலா திசைகளிலிருந்தும் வருகைதரும் சகல பக்தர்களும் ஒன்றாக இணைந்து இறைவனை ஆராதிக்கும் ஒரு புண்ணிய நிகழ்வாக இதனை குறிப்பிடலாம்.

பிரிவினைகளினால் சிதறிப் போயிருக்கும் மானிட சமுதாயத்தில் மனிதர்களுக்கிடையே இருக்க வேண்டிய பரஸ்பர புரிந்துணர்விற்கு சிறந்ததோர் முன்னுதாரணமாகவே ஹஜ்ஜுப் பெருநாள் அமைகின்றது.

புனித மக்கா நகரத்தை மையப்படுத்திய சமத்துவத்தின் செய்தியை மனிதர்களிடையே கொண்டு சேர்க்கும் ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடும் நம் நாட்டின் சகல இஸ்லாமிய பக்தர்களுக்கும் உலகவாழ் முஸ்லிம்களுக்கும் எனது இதயபூர்வமான புனித ஈதுல் அல்ஹா தியாகத் திருநாள் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன் என ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# தமிழர் தமது சொந்த மண்ணில் வாழவும் ஆளவும் விரும்புகிறார்கள்

## பொன்சேகாவுக்கு சிறீதரன் எம்.பி பதில்

(கிளிநொச்சி)

தமிழர்களும் தமது சொந்த மண்ணில் வாழவும் ஆளவும் விரும்புகிறார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில, இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதி அமைச்சர் சரத் பொன்சேகா அண்மையில் பெரும்பான்மை மக்கள் அதிகாரப் பரவலாக்கத்தை விரும்பவில்லை என்னும் கருத்தினை வெளியிட்டிருந்தார். தமிழர்களாகிய நாம் இந்த மண்ணினுடைய பூர்வீக குடிகளாக வாழ்ந்து வருகின்றோம். இந்த மண்ணிலே ஆங்கிலேயரின் வருகைக்கு முன்பாக நாம் இந்த மண்ணிலே தனியான இராசதானிகளுடன் எம்மை நாமே ஆண்டவர்கள். சுதந்திரத்தின் பின்னர் இந்த நாட்டில் அடிமையாக நடத்தப்பட்டு வருகின்றோம்.

நாம் அடிமைகளாக நடத்தப்பட்டதை உணர்ந்தமையினால்தான் எமது தலைவர் பிரபாகரன் ஆயுதம் ஏந்தி எமது இனத்தின் அடிமைத் தனத்தை போக்க விளைந்தார்.

ஆயுதப் போராட்டத்தை எமது இளைஞர்கள் ஆரம்பிப்பதற்கு முன்பே எமது மக்கள் தமிழீழம்தான் தமிழர்களின் இறுதித்தீர்வு என 1977ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலின்போது வாக்களித்தார்கள்.

2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவுற்றதன் பின்னர் புலம்பெயர்ந்து வாழ்கின்ற எம்மவர்களிடம் நடத்தப்பட்ட வாக்களிப்பிலும் தமிழீழத்திற்காக வாக்களித்திருந்தார்கள்.

தனிநாடு கோருவதற்கு முழு உரிமையும் கொண்ட நாம் யதார்த்த நிலை உணர்ந்து ஒன்றுபட்ட நாட்டுக்குள் எமக்குரிய அதிகாரங்களை கேட்கின்ற வேளையில் சிங்கள ஆட்சியாளர்கள் இவ்வாறான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்கள்.

பொன்சேகா, கோத்தபாய ராஜபக்ஷ போன்றோரினால் வெளியிடப்படும் இனவாதக் கருத்துக்களுக்கும் பதிலளிக்கும் வகையில் நாங்கள் எமது மண்ணில் எம்மை நாமே ஆள விரும்புகின்றோமா? என எங்கள் மக்களிடத்தில் பொது வாக்கெடுப்பை நடத்திய பின் இவ்வாறான கருத்துக்களை வெளியிடத் தயாரா? என பாராளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்தார். (ம)

## மஹாநாம, திசாநாயக்க மீண்டும் விளக்கமறியலில்

(கொழும்பு)

2 கோடி ரூபாய் இலஞ்சம் பெற்ற போது கைது செய்யப்பட்ட ஜனாதிபதி செயலணியின் முன்னாள் பிரதானி பேராசிரியர் ஐ.கே. மஹாநாம மற்றும் அரச - மரக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் பீ.திசாநாயக்க ஆகியோரின் விளக்கமறியல் காலம் நீடிக்கப் பட்டுள்ளது.

கந்தளாய் சீனி தொழிற்சாலைக்குச் சொந்தமான பங்கினை இந்திய நிறுவனம் ஒன்றுக்கு கைமாற்றுவதற்காக குறித்த நிறுவனத்திடமிருந்து 54 கோடி ரூபாய்களை அவர்கள் இலஞ்சமாக கோரியுள்ளனர்.

அந்த தொகையின் முற்பணத்தை பெற்றுக் கொண்ட வேளையில் இலஞ்சம் மற்றும் மோசடி தவிர்ப்பு பிரிவினரால் கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் நேற்று அவர்கள் மீண்டும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது, அவர்களை அடுத்த மாதம் 4 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஜனாதிபதி மக்கள் சேவைத்திட்டம்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச மக்கள் எதிர்நோக்கும் சமூக, பொருளாதார மற்றும் நிர்வாகப் பிரச்சினைகள் தொடர்பாக தீர்வு காண்பதை கருத்திற் கொண்டு நிலமெஹவர (உத்தியோகபூர்வ பணி) ஜனாதிபதி மக்கள் சேவை நிகழ்ச்சித்திட்டம் 2018 எதிர்வரும் ஞாயிற்றுக்கி ழமை 26 ஆம் திகதி காலை 7 மணியளவில் யாழ்.கரணவாய் மத்தி பொன்னம் பலம் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

அத்துடன் அன்றைய தினத்தில் கரணவாய் மூத்த விநாயகர் கோவில் திருமண மண்டபத்தில் காலை 9 மணியளவில் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன மற்றும் முக்கிய அரசியல் பிரமுகர்கள் கலந்து கொள்ளும் நிகழ்வும் நடைபெறவுள்ளது. (இ-60)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**குலதெய்வ வழிபாடு என்பது அவசியமா?**

கிரக தோஷங்களை போக்கும் சக்தி குல தெய்வத்திற்கு மட்டுமே உண்டு. குல தெய்வ பூஜைகளை முறையாகச் செய்து வரும் குடும்பங்கள் பல இருப்பினும் கொங்கு வேளிர் சமூகத்தினர் மட்டும் தங்கள் குலம், கூட்டம், தெய்வம் இவற்றில் தனிக் கவனம் செலுத்தி வருகின்றனர்.

குலதெய்வ அருள் பெற்ற குடும்பங்கள், வாழையடி வாழையாக தழைத்து நிற்கும். *(தொடரும்)*

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### கேட்டது கிடைக்கும்



✦ மனம் கடுகுப் பொட்டலம் போன்றது. அதை நாலாபுறமும் சிதற விட்டால் ஒன்று சேர்ப்பது கடினம்.

✦ இளம்மூங்கில் எளிதாக வளைவது போல, இளமையிலேயே மனதை நல்ல விடயங்களில் செலுத்துவது அவசியம்.

✦ நான் என்னும் அகங்காரத்தை அழித்து விட்டவன் கடவுளின் காட்சியைப் பெற்று மகிழ்வான்.

✦ கடவுள் கற்பக மரம் போல கேட்டதையெல்லாம் கொடுப்பதற்காகக் காத்திருக்கிறார்.

✦ நல்லவர்களின் கோபம் நீடித்து நிற்பதில்லை. தண்ணீரில் இட்ட கோலம் போல உடனே மறையும்.

# மூளாய் விக்டோறி அணி அகில இலங்கை ரீதியில் 2வது சுற்றுக்கும் யாழ்.மாவட்டத்தில் இறுதிப் போட்டிக்கும் தகுதி




சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III தொடருக்கான அரை இறுதிப் போட்டி கடந்த 18 ஆம் திகதி சனிக் கிழமையன்று யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போது மூளாய் விக்டோறி அணி யாழ்.ஜொனியன்ஸ் அணியை 12 ஓட்டங்களால் வெற்றி பெற்று அகில இலங்கை ரீதியில் 2 ஆவது சுற்றுக்கும் யாழ்.மாவட்டத்தில் இறுதிப் போட்டிக்கும் தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய விக்டோறி அணி 39.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் சரத்குமார்-47, இன்பராசா-20, சஜீதரன்-18, பிரசாந்-16, பிரசாத்-10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரிந்தாபன்-3 , டினேஸ்-3 , அபிநாத்-2, லவேந்திரா-2 இலக்குகளை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்.ஜொனியன்ஸ் அணி 35 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றனர். துடுப்பாட்டத்தில் அபிநாத்-38, பிருந்தாபன்-31, அன்புஜன்-18, சௌமிகன்-16, தேவப்பிரசாத்-16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரதீஸ்-6, கரியோன்-3 இலக்குகளை கைப்பற்றினர். இப்போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் தரவரிசை (Rating) பட்டியலுக்கு விக்டோறி அணி 7.85 புள்ளிகளையும், யாழ். ஜொனியன்ஸ் அணி 2.61 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# செல்ரன் சிக்சர் மழை
## சென்றலைட்ஸ் காலிறுதியில்


செல்ரன்

ஜொலிஸ்டார் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட பதிவு செய்யப்பட்ட துடுப்பாட்ட அணிகளுக்கிடையிலான 30 ஓவர்கள் கொண்ட துடுப்பாட்டப் போட்டியில் சென்றலைட்ஸ் எதிர் விங்ஸ் அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி செல்ரனின் அதிரடியினால் 30 ஓவர்கள் நிறைவில் 9 இலக்கினை இழந்து 303 ஓட்டங்களைப் பெற்றது. அவ் அணி சார்பாக செல்ரன் 12 ஆறு ஓட்டங்கள் உட்பட 87ஓ ட்டங்களையும் நிசாந்த் 56, கௌதமன் 36, ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அனஸ்ராஜ் 4 இலக்கினை கைப் பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய விங்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 30 ஓவர்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 202 ஓட்டங்களைப் பெற்றது. அவ் அணி சார்பாக நிதுசன் 74, யூட் 30, மைக்கல் 32, கமில்ரன் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிரோசன் 2, தசோபன் 2 இலக்குகளைப் கைப்பற்றினர். (க)

# கிருஸ்ணபாரதி அணியை வீழ்த்தி சம்பியனாகியது கொலிங்ஸ்





கிளிநொச்சி யுனைட்டட் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட மென்பந்து சுற்றுத்தொடரில் யாழ். கொலிங்ஸ் அணி சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றது. இறுதிப் போட்டியில் யாழ்.கொலிங்ஸ் அணி மற்றும் கிளி கிருஸ்ணபாரதி அணிகள் மோதிக் கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கிருஸ்ணபாரதி அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. 6 பந்து பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 50 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் குகன் மற்றும் நிலுக்சன் ஓட்டமெதனையும் பெறாமலும் சீலன், சின்னவன் கௌசி, லகி முறையே 5,9,21,12 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். தொடர்ந்து 51 எனும் இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய யாழ். கொலிங்ஸ் அணிக்கு ஆரம்பம் முதல் அச்சுறுத்தலான பந்து வீச்சால் அழுத்தம் கொடுத்தனர் கிருஸ்ணபாரதி வீரர்கள்.

3 இலக்குகளை 11 ஓட்டங்களுக்குள் இழந்த நிலையில் 4 இலக்குக்காக இணைந்த துவாரகன் மற்றும் ஜெயதர்சன் ஆகியோர் நிதானமாகவும் அதிரடியாகவும் துடுப்பெடுத்தாடி 5.5 ஓவர்களில் வெற்றியை உறுதி செய்தனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக யாழ்.கொலிங்ஸ் அணியின் துவாரகன் தெரிவு செய்யப்பட்டார்.

தொடர் ஆட்ட நாயகனாக கிளி கிருஸ்ணபாரதி அணியின் குகனும் சிறந்த பந்து வீச்சாளராக யாழ்.கொலிங்ஸ் அணியின் பிரசாத்தும் தெரிவு செய்யப்பட்டனர். (க)





யாழ்.போதனா வைத்தியசாலையினால் நடத்தப்பட்ட மட்டுப் படுத்தப்பட்ட 5 ஓவர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ். தெல்லிப் பழை புற்றுநோய் அணி சம்பியன் பட்டத்தை தனதாக்கிக் கொண்டது. இறுதிப் போட்டியில் யாழ்.வைத்தியசாலை வைத்தியர் அணியும் தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை அணியும் மோதிக் கொண்ட இப் போட்டியில் 18 ஓட்டங்களால் தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசலை அணி வெற்றிவாகை சூடியமை குறிப்பிடத்தக்கது. (க)

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் ஸ்கந்தா விளையாட்டுக் கழ கம் கிளி/ அக்கராயன் மகா வித்தியாலய பழைய மாண வர் ஒன்றியம் பிரான்ஸ், தொடுவானம் நிகழ்ச்சித் திட்டம் ஊடாக நடத்தும் வடக்கு மாகாண ரீதியான மாபெரும் மென் பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 28 ஆம் திகதி தொடக்கம் செப்டெம்பர் 3 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

அணிக்கு பதினொருபேர் கொண்டதும் எட்டு பந்துப் பரிமாற்றம் கொண்டதுமான மட்டுப் படுத்தப்பட்ட இப் போட்டியில் முதலாம் இடம் பெறும் அணிக்கு ரூபாய் ஐம்பதாயிரமும், இரண்டாம் இடம் பெறும் அணிக்கு ரூபாய் இருபத்தையாயிரமும் வெற்றிக் கேடயங்களும் வழங்கப்படவுள்ளன.

இச் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் அணிகள் எதிர் வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் 077 028 1285, 076 919 1301 என்ற தொடர்பு இலக்கத்து டன் பதிவுகளை மேற்கொள்ளலாம். (க)

அன்பு வாசகர்களே!
உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.
உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## றெஜினா படுகொலை...

குறித்த வழக்கின் இரண்டாம் சாட்சியான அயல் வீட்டு பெண்ணின் பிள்ளைகளான 10 வயது சிறுமியையும், 7 வயது சிறுவனையும் மன்றில் முற்படுத்துமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியையும் குறித்த வழக்கின் விசாரணை அதிகாரிகளையும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மன்றில் ஆஜராகுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள மூன்று சந்தேகநபர்களையும் எதிர்வரும் 4ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் நேற்று உத்தரவிட்டுள்ளார். (ம-9)

## அலுவலகத்தை கூட்டி...

வதற்காக முச்சக்கர வண்டி ஒன்றை வாடகைக்கு பிடித்துக்கொண்டு குழந்தை யுடன் கிராம அலுவலரின் அலுவலகத்தை நோக்கிச் சென்றுள்ளார்.

இந்நிலையில், கடமையில் இருந்த கிராம அலுவலர் குறித்த பெண்ணிடம் தனது அலுவலக முற்றத்தை கூட்டுமாறும் அதன் பின்னரே வதிவிடத்தை உறுதிப்படுத்தி ஒப்பம் இடுவேன் எனவும் அதிகாரத்துடன் தெரிவித்துள்ளார்.

இதன்போது குறித்த பெண் தனக்கு வீசிங் நோய் இருக்கிறது என பதிலளித்துள்ளார், எனினும் முற்றத்தை கூட்டினால்தான் வதிவிடத்தை உறுதிப்படுத்துவேன் என கிராம அலுவலர் கண்டிப்புடன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், வேறு வழியின்றி குழந்தையையும், வாடகைக்குபிடித்துச் சென்ற முச்சக்கர வண்டியையும் காத்திருக்க வைத்துவிட்டு முற்றத்தை கூட்டிய பின்னர் கிராம அலுவலரிடம் கூட்டிவிட்டதாக தெரிவித்து தனது வதிவிடத்தை உறுதிப்படுத்தி சென்றுள்ளார்.

குறித்த சம்பவம் மக்களிடையே கடும் விசனத்தையும் சர்ச்சையையும் ஏற்படுத்தியுள்ளது. கிராம அலுவலர் தான் ஒரு பெண்ணாக இருந்துகொண்டு குழந்தையுடன் வதிவிடத்தை உறுதிப்படுத்த வந்த பெண்ணை இவ்வாறு நடத்தியது விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் பிரதேச செயலாளரிடம் எழுத்து மூலம் முறைப்பாடு ஒன்றை வழங்கியுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண்ணின் எழுத்து மூலமான முறைப்பாடு கிடைத்துள்ளதனை பிரதேச செயலாளரும் உறுதிப்படுத்தியுள்ளார். (ம)

## இன்றைய அமைதிக்கு...

அநுராதபுரம்-தம்புலு, ஹல்மில்லேவ இயந்திர காலால் படை தலைமையகத்தில் நிர்மாணிக்கப்பட்ட போர் நினைவு தூபியை திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்றுமுன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார். மேலும் தெரிவிக் கையில்,

நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டை பாதுகாப்பதற்காக ஏனைய படைப்பிரிவுகளுடன் உரிய புரிந்துணர்வுடன் செயற்படுகிறோம்.

பயங்கரவாதத்தை வேரோடு அழிக்கும் இராணுவ நடவடிக்கையின் ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை இராணுவம், பொலிஸார், சிவில் பாதுகாப்பு படையின் உறுப்பினர்கள் என ஆயிரக்கணக்கான படையினரின் பெறுமதியான உயிர்கள் நாட்டின் ஒருமைப்பாடு, மக்களின் வாழ்க்கையை பாதுகாப்பதற்காக தியாகம் செய்யப்பட்டன.

இராணுவத்தினரும், ஏனைய படையினரும் தமது உயிரை பணயம் வைத்து உயிரை தியாகம் செய்து பெற்றுக் கொண்ட சுதந்திரத்தை அவர்களால் அனுபவிக்க முடியாது போயுள்ளது.

அந்த படையினர் தமது உயிர்களை தியாகம் செய்யவில்லை எனில் நாம் தற்போது அனுபவிக்கும் சுதந்திரம் கிடைக்காது போயிருக்கும்.

இன்றைய அமைதியான சூழலை ஏற்படுத்த படையினர் தமது பெறுமதியான உயிர்களை தியாகம் செய்தனர். அவர்கள் இறந்து வாழ்ந்து வருகின்றனர் எனவும் இராணுவத் தளபதி மஹேஸ் சேனாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (ம)

## சிங்களத்தில் முதலில்...

டும் என்று சட்டத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கில், பெயர்ப்பலகைகளில் முதலில் தமிழிலும், இரண்டாது ஆங்கிலத்திலும் மூன்றாவது சிங்களத்திலும் எழுதப்பட வேண்டும் என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கூறியிருந்தார்.

இது சம்பந்தமாக கருத்து வெளியிடும் போதே அமைச்சர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

எமது நாட்டில் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளும் அரசகரும மொழிகள் என்பதுடன் தேசிய மொழிகள். வடக்கு, கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வருகின்றனர்.

அந்த மாகாணங்களில் பெயர் பலகைகளை எழுதும் போது முதலில் தமிழிலும், இரண்டாவதாக சிங்களத்திலும் எழுதுவதில் தவறில்லை.

சிங்களத்தில் தான் முதலில் எழுத வேண்டும் என்ற சட்டம் இல்லை. சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்களில் முதலில் சிங்களத்தில் எழுதலாம் என தெரிவித்துள்ளார்.

மேலும் தமிழ்ப் பெயர்களை மொழி பெயர்ப்பு செய்யாது, தமிழில் இருப்பது போலவே எழுத வேண்டும் எனவும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூறியிருந்தார். இதனடிப்படையில் வடக்கில் நாகதீப இல்லை எனவும் நயினாதீவு மாத்திரமே இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் மனோ கணேசன், சிங்களத்தில் நயினாதீவு என்று எழுத முடியாது. தமிழில் நாகதீப என்றும் எழுத முடியாது. மொழி உச்சரிப்புகளுக்கு ஏற்ப அது மாறுபடலாம் எனக் கூறியுள்ளார்.

இதனிடையே வட மாகாண முதலமைச்சர் தெரிவித்திருந்தமை சம்பந்தமாக கருத்து வெளியிட்டுள்ள முன்னாள் அரசகரும மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, பிரதேசத்தில் பெரும்பான்மையாக மக்கள் பேசும் மொழிக்கு அமைய பெயர் பலகைகளை உருவாக்குவது சாதாரணமான விடயம் என குறிப்பிட்டுள்ளார். (ம)

## முன்னாள் போராளிகளுக்கு...

நேற்றுமுன்தினம் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க அவர்களினால் வழங்கிவைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் தனது மகிழ்ச்சியை தெரிவித்து அவர் அனுப்பியுள்ள செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புலிகள் அமைப்பிலிருந்து இறுதி யுத்தத்தில் சரணடைந்த போராளிகள் புனர் வாழ்வின் பின்னர் தமது உறவினர்களுடன் இணைந்து கொண்டனர். அவர்களில் பட்டதாரிகளாக காணப்பட்ட பலர் கடந்த 2017 ஆரம்பத்தில் எனது அலுவலகத்தில் என்னை சந்தித்து ஒருகோரிக்கையினை முன் வைத்திருந்தனர். அதாவது பட்டதாரிகளுக்கான அரச பணி நியமனங்களில் தமது பெயர்களும் உள்வாங்கப்படவேண்டும் என்பதாகும்.

அதற்கு அமைய கடந்த 2017.07.26 அன்று அமைச்சர் சுவாமிநாதன் அவர்களுக்கு நான்எழுத்து மூலம்முன் வைத்த ஆலோசனையினை ஏற்று அமைச்சர் அமைச்சரவை பத்திரத்தினை முன்வைத்து நிறைவேற்றி இப்போராளிகளுக்கும் நேற்றுமுன்தினம் அரச பணி நியமனத்தினை வழங்கியிருக்கின்றார்.

ஏற்கெனவே கடந்த வருடம் 35 புனர்வாழ்வு பெற்ற போராளிகள் பட்டதாரிகள் நியமனத்தில் உள்வாங்கப்பட்டு அரசபணிக்கு அமர்த்தப்பட்டார்கள்.மேலும் இரண்டாம் கட்டமாக 30 புனர்வாழ்வு பெற்ற போராளிகள் அரச பணிக்கு அமர்த்தப்பட்டிருக்கின்றார்கள்.

சமாதானத்திற்கு இது ஒரு முன்னேற்றகரமான சம்பவமாக அமைகின்றது. இது போன்று மேலும் பாதிக்கப்பட்டவர்களுக்கான அரச சேவைகள் கிடைக்க எனது முழு ஒத்துழைப்பினையும் வழங்கவுள்ளதாக தெரிவித்துள்ளார். (ம)

# இழுவைப்படகு விவகாரம் தொடர்பில் இந்தியாவை பகைக்க முடியாது

## நீரியல் வளத்துறை அமைச்சர் விஜயமுனி சொய்சா

(யாழ்ப்பாணம்)

இந்திய இழுவைப்படகு விவகாரம் தொடர்பில் இந்தியாவை பகைக்க முடியாதென கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை அமைச்சர் விஜயமுனி சொய்சா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை அமைச்சர் விஜயமுனி சொய்சா யாழ். மாவட்ட கடற்றொழில் சங்கத்தினரை நேற்று இரவு யாழ்.ரில்கோ சிற்றி ஹோட்டலில் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த கலந்துரையாடலின் போது யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கத்தினர் தமது பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சருக்கு மகஜர் கையளித்ததுடன், தமது தேவைகள் தொடர்பாகவும் எடுத்து கூறினார்கள்.

கடற்றொழிலாளர் சங்கத்தினரின் கோரிக்கைகளை செவிமடுத்த அமைச்சர் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

கடந்த காலத்தில் ஏற்பட்டிருந்த யுத்த சூழ்நிலை காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ளீர்கள். வடபகுதியில் அரசியல், சமூக, பொருளாதாரம் கலாசார ரீதியாகவும், பல வகையிலும் பின்னடைவினை எதிர்நோக்கி உள்ளீர்கள். வடபகுதியில் வாழ்ந்த மக்கள் மன ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளீர்கள். நம்பிக்கை இழந்தவர்களாக இருந்ததுடன், எதிர்காலம் பற்றி எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க முடியாத காலகட்டத்தினை கடந்து வந்துள்ளீர்கள். எனவே, தார்மீக ரீதியாக பார்க்கப்பட வேண்டிய விடயம். வடகிழக்கு மாகாணங்கள் யுத்தத்தினால் முழுமையாக பாதிக்கப்பட்ட பிரதேசங்கள். இந்தப் பிரதேசங்கள் முழுமையாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்ட இந்த மக்கள் மத்தியில் நல்லாட்சியை ஏற்படுத்த ஜனாதிபதியும், பிரதமரும் இயன்றளவு முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றார்கள்.

மக்கள் சுபீட்சத்துடனும், நல்லிணக்கத்துடனும் வாழ்வதற்கான சூழலை உருவாக்கியுள்ளோம். இந்த நிலைமைகளில் தாக்கங்கள் ஏற்படாமல் இருக்க வேண்டுமென்பதில் அரசாங்கம் தெளிவாக உள்ளது.

இந்திய செலவாணியைப் பெற்றுத் தரும் கடலட்டை தொழில் வளர்ச்சியடைய வேண்டும். கடலட்டை தொழிலை எமக்கு சாதகமான முறையில் மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும்.

மீனவ சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பாரிய பிணக்குகள் இருக்கின்றதை மறுக்கவில்லை. ஒரே நேரத்தில் தீர்த்து வைக்க முடியாது. அனைத்து மீனவ சங்கத்தினரையும் அழைத்து கருத்துப் பரிமாற்றத்தினை ஏற்படுத்தி, அதன் ஊடாக தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளை உடனடியாக தீர்ப்பதற்கு ஏற்றவகையில், முதலாவதாக யாழ்.மாவட்டத்தனைத் தெரிவு செய்வதாகவும் கூறினார்.

யாழ்.மாவட்டத்தில் 5 துறைமுகங்களை அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கப்படவுள்ளதாக கூறியதுடன், 20 இடங்களில் இறங்குதுறைகளையும், ஆழப்படுத்தப்படவுள்ள பகுதிகளையும் அபிவிருத்தி செய்ய தீர்மானித்துள்ளோம். அந்த இடங்களை தெரிவு செய்யுமாறும், தொழில்நுட்ப ரீதியாக செய்ய வேண்டிய விடயங்களை அமைச்சு நடைமுறைப்படுத்துமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்திய மீனவர்களின் பிரச்சினை கூறப்பட்டது. இந்த வருடத்தில் 17 இந்திய மீனவர்களை கைதுசெய்து சட்ட நடவடிக்கைக் குட்படுத்தியுள்ளோம். 87 படகுகள் கைப்பற்றப்பட்டு சட்ட நடவடிக்கைக்குட்படுத்தப்பட்டுள்ளன.

இந்தியா எமக்கு சமீபமாக இருக்கக்கூடிய ஒரு நாடு. வரலாற்று ரீதியாக எம்முடன் பல தொடர்புகளைக்கொண்டுள்ள ஒரு அயல் நாடு. இந்தியாவில் இருந்து தான் புத்த சமயம் இலங்கைக்கு வந்தது. இந்துமதமும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மத வழிபாடுகள் இங்கு தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவிற்கும் எமக்கும் நீண்டகால தொடர்புகள் இருப்பதனால், மீனவர்களின் பிரச்சினைகளைத் தொடர்புபடுத்தி இந்தப் பிரச்சினைகளை திசை திருப்ப முயற்சிக்க கூடாது. இந்திய அரசாங்கத்துடனும், இந்த மீனவ அமைப்புக்களுடனும் சுமூகமான பேச்சுக்களை நடத்துவோம்.

அத்துமீறும் இந்திய மீனவர்களை கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுப்போம். ஒரு இணக்கப்பாட்டினை ஏற்படுத்தி நல்லிணக்கத்தினை உருவாக்க வேண்டுமென்பதே எமது நோக்கம் என்றார். (ம-101)

## முல்லையில் சிங்கள...

ததன் அடிப்படையில் அவர்களை இவ் அரச காணிகளிலிருந்து வெளியேறுமாறு நீதிமன்றால் கட்டளை இடப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் வழங்கிய கட்டளைக்கு ஆட்சேபனை தெரிவித்து சிங்கள மீனவர்கள் மூவரும் அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்தனர். எனினும் அவர்களின் கோரிக்கை நியாயமற்றதும் சட்டரீதியானது அல்ல எனவும் குறிப்பிட்டு உயர் நீதிமன்றால் அந்த மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன.

இந்த நிலையில் முல்லைத்தீவு நீதிமன்றின் கட்டளையை ஆட்சேபித்து அதனை மறு ஆய்வுக்குட்படுத்தக் கோரி, மிதுகுல சூரிய துசார லிவேறா, சலினா மேரியன் தேதனு டயஸ் ஆகியோர் வவுனியா மேல் நீதிமன்றில் சீராய்வு மனுக்களைத் தாக்கல் செய்தனர் .

அந்த மனுக்கள் மீதான விசாரணையில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளருக்காக சட்டமா அதிபரின் பிரதிநிதியான அரச சட்டவாதி முன்னிலையானார்.

இவ்வாறான நிலையில் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றால் மிதுகுலசூரிய துசார லிவேறா, சலினா மேரியன் தேதனு டயஸ் ஆகியோருக்கு காணியிலிருந்து வெளியேறும் உத்தரவு வலுவிலுள்ள நிலையில் மேற்படி காணிகளுக்கு மகாவலி அதிகார சபையினால் காணி உத்தரவுப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் தவிர இன்னும் சில சிங்கள மீனவர்களுக்கும் காணிகளுக்கான உத்தரவுப் பத்திரங்கள் மகாவலி அதிகார சபையால் வழங்கப்பட்டுள்ளன. (ம)


**மஹஜன சம்பத**
திகதி 2018/08/21
சீட்டிழுப்பு இலக்கம் 3729
ஆங்கில எழுத்து E
வெல்லப்பட்ட இலக்கங்கள் 8 5 4 1 5 9
தேசிய லொத்தர் சபை

**கொவிசெத**
திகதி 2018.08.21
சீட்டிழுப்பு இலக்கம் 1858
ஆங்கில எழுத்து V
வெல்லப்பட்ட இலக்கங்கள் 37 41 42 47
தேசிய லொத்தர் சபை

**செவன**
திகதி 2018/08/21
சீட்டிழுப்பு இலக்கம் 111
ஆங்கில எழுத்து K
வெல்லப்பட்ட இலக்கங்கள் 19 52 59 60
தேசிய லொத்தர் சபை

**நீரோகா**
திகதி 2018/08/21
சீட்டிழுப்பு இலக்கம் 436
லக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 21 37 58 66
04
தேசிய லொத்தர் சபை

## வலி வடக்கில்...

கேசன்துறை ரயில் நிலையத்திற்கு அண்மையில் இடம்பெற்றது. விடுவிக்கப்பட்ட காணிப் பத்திரம் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சியினால் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

விடுவிக்கப்பட்ட காணிகள் பெரும் பற்றை காடுகளாக காணப்படுவதுடன் அங்குள்ள வீடுகள் இடிக்கப்பட்டும் காணப்படுகின்றன.

அதே பகுதியில் உள்ள மேலும் சிலரது காணிகள் விடுவிக்கப்படாத நிலையில் தங்களது காணிகளை விரைவில் விடுவிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஊடகங்களுக்கு மக்கள் கருத்து தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் பொதுமக்கள், யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், வலி.வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலர் ச.சிவசிறி, யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி, 51-வது படையணியின் படைத் தளபதி ரொசான் செனவிரட்ன என இராணுவ அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (ம-9)

## உயர்தர பரீட்சை...

கொண்டு சென்றுள்ளார்கள் அங்கு குறித்த யுவதியினை விருப்பத்திற்கு மாறாக பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

மாணவி வீடு திரும்பாத நிலையில் நேற்று முன்தினம் மாணவியின் தாயார் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் மாணவியை காணவில்லை என்று முறைப்பாடு செய்துள்ளார்.

இந்நிலையில் நேற்று காலை குறித்த மாணவியை உடையார்கட்டுப் பகுதியில் வானில் கொண்டுவந்து இறக்கி விட்டுள்ளார்கள். மாணவி நடந்த சம்பவத்தினை தாயாரிடம் முறையிட்டுள்ளார். குறித்த மாணவியுடன் தாயார் பொலிஸ் நிலையம் சென்று நடந்த சம்பவத்தினை தெரியப்படுத்தியுள்ளார்.

இந்நிலையில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் கடத்திய இளைஞனை தேடி பளை சென்று கடத்தல் சம்பவத்திற்கு உடந்தையாக இருந்த ஒரு இளைஞனை கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டுவந்துள்ளார்கள்.

பாதிக்கப்பட்ட மாணவி மருத்துவ பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் சம்பவம் குறித்து புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் கைதுசெய்யப்பட்ட இளைஞனை இன்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (ம-281-315)

## பாதுகாப்பு தொ...

இலங்கை வந்துள்ள ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் இத்சூனோரி ஒனேடோராவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நேற்று அலரி மாளிகையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இது சம்பந்தமாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இங்கு கருத்து வெளியிட்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இன்னும் 20 வருடங்களில் வங்காள விரிகுடாவை அண்மித்துள்ள நாடுகள் துரிதமாக வளர்ச்சியடையும் எனக் கூறியுள்ளார்.

இதற்கு அமைய பிராந்தியத்தின் கேந்திர துறைமுகமாக திருகோணமலை துறைமுகம் மாறும். இலங்கையின் துறைமுகங்களின் வளர்ச்சிக்கு ஜப்பானின் உதவியை எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை இங்கு கருத்து வெளியிட்ட ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர், திருகோணமலை பிரதேசத்திற்கு விஜயம் செய்து, அந்த பிரதேசம் மற்றும் திருகோணமலை துறைமுகம் தொடர்பில் ஆராய்ந்து புரிதலை பெற்றுக்கொள்ள எண்ணியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் ஜப்பான் தற்போது அடைந்துள்ள அபிவிருத்திக்காக இலங்கை ஜப்பானுக்கு கடந்த காலத்தில் இருந்து வழங்கிய உதவிகளையும் ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் நினைவுகூர்ந்துள்ளதாக பிரதமரின் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ம)

## ஜனாதிபதி மைத்...

மயிலிட்டி துறைமுகம் அண்மையில் விடுவிக்கப்பட்டு தற்போது புனரமைப்பு பணிகள் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அந்தவகையில்

வடக்கின் மீனவ சமூகத்தை பலப்படுத்தும் நோக்கில் 2 பிரதான துறைமுகங்கள், 4 இறங்குதுறைகள் மற்றும் 5 மீன்பிடி துறைகளைக் கொண்டதான மயிலிட்டி மீன்பிடித் துறை முகத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் அங்குரார்ப்பண வைபவம் மீன்பிடி அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சாவின் ஏற்பாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இன்று முற்பகல் 10 மணிக்கு மயிலிட்டி மீன்பிடி துறைமுக வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

மயிலிட்டி துறைமுகத்தை ஆழப்படுத்துதல், மீன்பிடி படகுகளுக்கான எரிபொருள் நிரப்பு நிலையம் அமைத்தல், மீனைக் களஞ்சியப்படுத்துவதற்கான குளிர்சாதன வசதிகள், மீனவர்களுக்கான மலசலகூடம் மற்றும் குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் உள்ளிட்ட அபிவிருத்திகள் இங்கு மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், மீனவ அமைப்புக்கள், பொதுமக்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-9)

## ஆட்டோ சாரதிக...

அமைச்சரவை நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது. இதன்போது, பேரக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவால், முச்சக்கர வண்டிகள் செலுத்துவதற்கான சாரதிகளின் வயதுக் கட்டுப்பாட்டைக் கொண்டு வரும் அமைச்சரவை யோசனை முன்வைக்கப்பட்டது.

முச்சக்கர வண்டி செலுத்துவதற்கான சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் வயதை 35ஆக அதிகரிக்கவேண்டும். அதன்மூலம் முச்சக்கர வண்டிகளால் ஏற்படும் விபத்துக்களைக் கட்டுப்படுத்த முடியும் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா யோசனையை முன்வைத்தார்.

அதனை உடனடியாகவே நிராகரித்த ஜனாதிப்தி மைத்திரிபால சிறிசேன, முச்சக்கர வண்டியை செலுத்துபவர்களின் வாழ்வாதாரத்தை அது பாதிக்கும் எனச் சுட்டிக்காட்டியிருந்தார். (ம)

## மகிந்தவின் சகோ...

ச்சை பெற்று வந்த நிலையில் நேற்று திடீரென உயிரிழந்துள்ளார். இவர் தனது 70-வது வயதில் தங்காலை வைத்திய சாலையில் உயிரிழந்துள்ளார்.

இவர் கோத்தபாய ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ மற்றும் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர்ரின் சகோதரராவார்.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் நெடுஞ்சாலைகள் மற்றும் கப்பற்துறை அமைச்சின் தனிப்பட்ட செயலாளராக சந்திர ராஜபக்ஷ பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## முல்லையில் சிங்...

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள கருநாட்டுக்கேணி கிராமம் முழுமையாக தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் கிராமமாகும்.

1984-ம் ஆண்டில் இந்தக் கிராமத்தில் மரபுரிமையுடன் வாழ்ந்து வந்த தமிழ் மக்கள், அரச படைகளால் வெளியேற்றப்பட்டனர். இவர்கள் மீண்டும் 2010-ம் ஆண்டில் மீள்குடியமர அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இந்தக் காலப் பகுதிகளில் வெளிமாவட்டங்களிலிருந்து வருகை தந்த சிங்கள மீனவர்கள், தமிழ் மீனவர்களின் பாரம்பரிய கரைவலைப்பாடுகளை அத்துமீறி கைப்பற்றி மீன்பிடியில் ஈடுபட்டனர்.

இவர்கள் கடற்கரையோரக் காணிகளை அத்துமீறிப் பிடித்து நிரந்தரமான சொகுசு வீடுகளையும் அமைத்து வந்தனர். இவ்வாறு கடற்கரையோரத்தை அத்துமீறி கைப்பற்றிய மிதுகுலசூரிய துசார லீவேறா, சுவினா மேரியன் தேதனுடயஸ் ஆகியோருக்கு எதிராக கரைதுறைப்பற்று பிரதேச செயலர் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் வழங்குத்தாக்கல் செய் 23


10 வருட கல்வி - தொழில் - விசா சேவையில் உங்கள் நம்பிக்கையின் சிகரம் தரும்

நியூசிலாந்து மலேசியா வேலைவாய்ப்புக்கள்

தொழிற்சாலை பணியாளர் (மலேசியா), அலுமினியம் ஃபிற்றர், வாகன பெயின்ரர், கட்டட பணியாளர், படகு கட்டுமான பணியாளர், தேனீ வளர்ப்போர், தோட்டப் பணியாளர், தச்சுவேலையாட்கள், மின்னிணைப்பாளர், காப்பெற் விரிப்பாளர், மின்னிணைப்பாளர், தையல் பணியாளர், பேக்கறி பணியாளர், பிற்சா தயாரிப்பாளர், சமையல் பணியாளர், குழாய் பொருத்துநர், மோட்டார் சைக்கிள் மற்றும் வாகன மெக்கானிக், ஆரம்ப பாடசாலை மற்றும் விசேட தேவையுடையோருக்கான ஆசிரியர்

உட்பட 50க்கு மேற்பட்ட வேலைவாய்ப்புக்கள்

அனுமதி இலவசம்

விளக்கக் கருத்தரங்கும் நேர்முகத் தேர்வும்

22-08-2018 புதன்கிழமை பிற்பகல் 2 மணி

கல்விச் சான்றிதழ்கள், தொழில் அனுபவ கடிதங்கள், கடவுச் சீட்டு என்பவற்றுடன் நேரில் வரவும்

விபரங்களுக்கு 0777 324 004

10வது ஆண்டில் கால்பதிக்கும் SIKARAM ACADEMY Business - Hospitality - English FAST TRACK to CAREERS Sri Lankan Entrepreneur of the Year 2017

இல. 221 - 1/1, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம் 021 - 222 00 11



புதிய பிரிவுகள் ஆரம்பம்

தொழிற் துறைக் கணக்காளர் ஆவதற்கு

**aat (Sri Lanka)**

[ AA 1 , AA 2, AA3 ]

Qualification :- G.C.E. o/L 06 Passes

Medium : Tamil & English

வங்கியியல் கற்கை நெறிகள்

**Banking Courses**

IABF & DABF

(Tamil & English Medium)

Qualification:- G.C.E. O/L 6 Passes with 5 credits including Maths.

கணக்காளர் கற்கை நெறிகள்

**Chartered Accounting Courses**

Executive Level & Business level

(Tamil & English Medium)

Qualification:- G.C.E. A/L 3 Passes

Note :- 2018 பரீட்சை எடுத்த மாணவர்களும் பதிவு செய்யலாம்.

**Certificate Course in English**

Students Awaiting (A/L) Results Enrich your Proficiency in English

17th Batches have successfully Completed the course. Register your names.

**Pharmacist (External)**

Qualification:- G.C.E O/L Ordinary Pass in English Language G.C.E.(A/L) Ordinary Pass in 03Subjects including Chemistry.

Further Details: Jaffna College Undergraduate Dept. 464, Hospital Road, Jaffna. 0212223382 / 0212229149



பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று வேலை செய்ய பணிப்பெண் தேவை.

தொடர்புகளுக்கு: 0773282051 (5438)



விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK- 550 /=Kg

கனடா-900 /=Kg

ஜேர்மனி- 700 /=Kg

நெதர்லாந்து- 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS



வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்

கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்

முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை



CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை

- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை

CNR World Wide Express இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 021 5674145 077 2931062 077 6655413 (C-3570)



FLC FRENCH LANGUAGE CENTRE

பிரெஞ்சு

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.

V. ஜெகன் (Trained in France- 2007)

40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 01.09.18 சனி 8 மணி.

181, பிரதான வீதி, நெல்லியடி. 021 320 2973 ஆரம்பம் :03.09.18 மாலை 3.30 மணி

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.



வேலையாள் தேவை

வெல்டர், லேத்மேன் (கடைச்சல் வேலைகள்) தெரிந்த வேலையாட்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0783996374, 0766039767 (5439)



வேலைவாய்ப்பு

நீங்கள் சாதாரணதரம், உயர்தரம் பயின்றவராயின் எமது GMI கம்பனியுடன் இணைந்து கொள்ளுங்கள்

● Distributors ● Supervisors ● Administrator ● Back office ● A.S.M ● Training Managers

பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம், தகைமைக்கேற்ப பதவிகள் தீர்மானிக்கப்படும். வயது: 18 - 30 வரை பயிற்சி தேவையாயின் பயிற்சிக்காலத்தில் குறைந்தது 16,500/= வழங்கப்படும். பதவிக்கேற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். நேர்முகத் தேர்வுக்கு (CV, NIC, Birth Certificate copy) கொண்டு வரவும்

423, Stanely Road, Jaffna.

076 770 7759, 077 999 4807 (5441)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.